Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36 கதிர் : 253 | ஞாயிற்றுக்கிழமை | ஆடி 23 நாள் 08 ஓகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16+16 விலை : ரூ.40

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

**ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்**

# பிரிட்டன் தூதுவரை கொழும்பு அணுகும்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 8

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையிலான விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையின் காரணிகளை ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னர் பிரிட்டன் தூதுவருக்குத் தெளிவுபடுத்த அரசு தயாராகியுள்ளது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

15

## கொரோனா 2,796

கொழும்பு, ஓக. 8

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 796 பேர் கொரோனாத்

15

## யாழ்ப்பாணத்தில் கொரோனாவால் நால்வர் இறப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றால் நேற்று நான்கு பேர் உயிரி

15

## 5,000 தாண்டியது கொரோனா சாவு!

கொழும்பு, ஓக. 8

இலங்கையில் கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

15

## உங்கள் நடத்தையைப் பொறுத்தே ஏனைய கைதிகளின் விடுதலை!

*முன்னாள் போராளிகளிடம் தெரிவித்தார் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா*

யாழ்ப்பாணம், ஓக. 8

'முன்னரைப் போல் இனியும் பிழையான வழியில் செல்லாது சரியான பாதை நோக்கி நல்வழியில் பயணியுங்கள். நீங்கள் சமூகத்தில் நல்லவர்க

15

## யாழில் நாளை ஆசிரியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 8

24 வருட அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு

15

## வேகமெடுக்கிறது டெல்டா திரிபு

*தடுப்பூசிகளை மிகத்துரிதமாகப் பெறுமாறு அறிவுறுத்தல்*

கொழும்பு, ஓக. 8

டெல்டா திரிபு இலங்கையில் வேகமாகப் பரவி வருகின்றது. இதனால், தடுப்பூசிகளை அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டியது மிக அவசியமா

15

## விபத்தில் காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஓக. 8

விசுவமடுவில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த

15

## இரண்டு இந்து ஆலயங்கள் பருத்தித்துறையில் தனிமை

யாழ்ப்பாணம், ஓக. 8

பருத்தித்துறையில் இரண்டு இந்து ஆலயங்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் தனிமைப்படுத்தப்

15

## உடலில் நிறங்களை பூசிக்கொண்டு நிர்வாணமாக நடமாடும் மனிதர்கள்!

*பெண்களிடமும் பாலியல் சேட்டைகள்*

வவுனியா, ஓக. 8

வவுனியா மதகு வைத்தகுளம் பிரதேசத்தில் மர்ம மனிதர்கள் சிலர், தமது உடலில் வர்ணப் பூச்சுக்களைப் பூசிக்கொண்டு நிர்வாணமாகச்

15

## வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஓக. 8

யாழ்ப்பாணத்தில் வழிப்பறியில் ஈடுபட்ட இருவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த

15

Maalai Matrimony

மாலை திருமணசேவை

இலங்கையின் முதற்தர இணையத்தள உகைத்தரம் வாய்ந்த திருமண சேவையாக விளங்கும் மாலை திருமண சேவையில் இணையவில்லையா? இணைவதற்கான சந்தர்ப்பத்தில் இணைந்து உங்கள் வாழ்க்கையை இன்பமாக்குங்கள்.

எமது சேவையின் அனுகூலங்கள் :

பதிவு கட்டணம் இலவசம் தரகு கட்டணம் இலவசம்

24 மணிநேர சிநேகபூர்வ வாடிக்கையாளர் சேவை

(இந்த வருடம் மட்டும் 30 பேருக்கு மேல் எமது திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.)

தொடர்பு: 077 408 8241

இணையத்தளம் maalai.com

Fun BLASTER இடமிருந்து

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube

உடன் மேலதிக டேட்டா*



ரூ.347/- மட்டுமே

மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

*1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது

Dialog

எதிர்காலம் இன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விடுவிக்கப்பட்ட

# தமிழ் அரசியல் கைதிகளுக்கு உதவித்தொகை கையளிப்பு

இராணுவத்தளபதி சவேந்திர சில்வா யாழில் வைத்து நேற்று வழங்கினார்





யாழ்ப்பாணம், ஒக. 8

**அண்மையில் விடுவிக்கப்பட்ட, விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் 15 பேருக்கு தலா ஒரு லட்சம் ரூபா உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.**

யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதியின் முயற்சியில், தியாகி அறக்கொடை நிதியத்தின் இயக்குநர் தியாகேந்திரனின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு, யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு, பலாலி இராணுவ கட்டளைத் தலைமையக உயரதிகாரிகள் யாழ்.இராணுவ படைப்பிரிவுகளின் தளபதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (த-26)



## உதைபந்தாட்டச் சங்க நிர்வாகிகள் கௌரவிப்பு

வவுனியா,ஒக.8

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் புதிய நிர்வாக சபையினருக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா உதைபந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் நாகராஜன் தலைமையில் குறித்த நிகழ்வுகள் நடைபெற்றன.

சம்மேளனத்தின் புதிய நிர்வாக சபையினர் வவுனியா நகரசபை வாயிலில் இருந்து ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு கௌரவிக்கப்பட்டதுடன், நினைவுப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் மற்றும் உபதலைவர் இமானுவேல் ஆர்னோல்ட் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் வினோநோகராதலிங்கம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான செ.மயூரன், ப. சத்தியலிங்கம் மற்றும் விளையாட்டுக்கழகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-110)

ஆசிரிய தொழிற்சங்கங்களின்

## ஆர்ப்பாட்டப் பேரணி இடைநிறுத்தப்பட்டது

கொழும்பு, ஓக. 8

சம்பள அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அதிபர் ஆசிரியர்கள் நேற்று முன்னெடுக்கவிருந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் பேரணி கண்டியிலிருந்து கொழும்பு வரையில் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. எனினும், தற்போதைய கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்திற்கொண்டு பஸ்யால பகுதியில்வைத்து இந்த ஆர்ப்பாட்டப் பேரணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, தமது தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்லப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். (த-இ)



## வலிப்புக் காரணமாக குடும்பத் தலைவர் சாவு

கொடிகாமம்,ஒக.8

இருதயநோய் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த குடும்பத் தலைவர் ஒருவர் தீடீரென ஏற்பட்ட வலிப்புக் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தென்மராட்சி தவசிகுளம் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது. தவசிகுளம் செல்லப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த 54 வயதுடைய குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-159)

## முல்லை. சாலை ஆற்றின் குறுக்கே உவர்த் தடுப்பணையை அமைக்கவும்

இரு கிராமங்களின் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு,ஒக.8

முல்லைத்தீவு சாலை ஆற்றுக்கு குறுக்கே உவர்த் தடுப்பணையை ஏற்படுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள இரணைப் பாலை மற்றும் ஆனந்தபுரம் ஆகிய கிராமங்கள் மற்றும் அங்குள்ள நன்னீர் கிணறுகள் உவர்ப் பரம்பல் காரணமாக கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மாறி வருகின்றன.

சாலை வழியாக பரவும் உவர் நீர் மேற்படி கிராமங்களை உவர் நிலங்களாக மாற்றி வருகிறது. கடந்த காலங்களில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் இரு கிராமங்களையும் சேர்ந்த மக்கள் சாலை ஆற்றுக்கு குறுக்கே உவர்த் தடுப்பணை அமைக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இரணைப்பாலை மற்றும் ஆனந்தபுரம் கிராமங்களை விட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் மாத்தளன், அம்பலவன்பொக்கணை மற்றும் வலைஞர்மடம் ஆகிய கிராமங்களும் எதிர்காலத்தில் உவரடையக் கூடிய ஆபத்து உள்ளதன் காரணமாக இதற்கான பாதுகாப்பு முயற்சி களை எடுக்குமாறு வலியுறுத்தி இருந்தனர்.

சாலை வழியாக பரவும் உவர் நீர் ஒரு கட்டத்தில் புதுக்குடியிருப்பு நகர் வரை பரவக்கூடிய அபாயம் காணப்படுகின்றது. தற்போது இப்பகுதி கிணறுகள் உவர் நீராக மாறுகின்றன. நிலத்தடி நீர் உவர் நீராக மாறத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் சாலை வழியாக மேலும் உவர் நீர் பரவாமல் இருப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ஜ-13)

## தொற்றாளர் உயிரிழப்பு

கொடிகாமம்,ஒக.8

மிருசுவில் வடக்கில் கொவிட் தொற்றாளர் ஒருவர் உயிரிழந்ததையடுத்து சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவினரால் பொதுமக்களுக்கு அறிவிறுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ள இறுக்கமான நடைமுறைகள் பின்வருமாறு, ஆலயங்கள், வீடுகள் மற்றும் கடைகளில் முகக்கவசமின்றியோ, சமூக இடைவெளியை பின்பற்றாமலோ மக்கள் ஒன்றுகூடுவது முற்றாக தடைசெய்யப்படுகிறது.

சகல நிகழ்வுகள் தொடர்பாகவும் கிராம அலுவலகரிடமும், பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடமும் எழுத்து மூலம் முன்னனுமதி பெறப்படுதல் வேண்டும். கொவிட் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுதல் வேண்டும். தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்த அனைவரும் பொதுச் சுகாதாரப் பரிசோதகரை தொடர்பு கொண்டு பி.சி.ஆர்.பரிசோதனையை தவறாது மேற்கொள்ளவேண்டும். என்று அறிவித்துள்ளனர். (ஜ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணுக்காய் பிரதேசத்தில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு



முல்லைத்தீவு, ஓக.8

**துணுக்காய் பிரதேசத்தில் குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், குடிதண்ணீரைப் பெற்றுத் தாருங்கள் என்று பெருமளவான மக்கள் எங்களைத் தேடி வருகின்றனர் என்று துணுக்காய் பிரதேச சபைத் தவிசாளர் அ.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல கிராமங்களில் தற்போது குடிதண்ணீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் துணுக்காய் பிரதேச சபையிடம் குடிதண்ணீர் வழங்கக்கூடிய வாகன வசதி இல்லை, வாகனம் வழங்கினால் குடிதண்ணீர் வழங்கலாம் என்ற கருத்தை முன்வைத்திருந்தேன்.

தற்போது பிரதேச சபையை நோக்கி குடிதண்ணீர் வழங்குங்கள் என்று வரும் மக்களை துணுக்காய் பிரதேச செயலகத்துக்கு செல்லும்படி அனுப்பி வைக்கின்றோம்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் அமதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியங்குளம், உயிலங்குளம், ஆலங்குளம், பழையமுறிகண்டி, புத்துவெட்டுவான் மற்றும் ஐயன்கன்குளம் உள்ளிட்ட பல கிராமங்களில் குடிதண்ணீர் நெருக்கடி காணப்படுகின்றது.

இவர்களின் குடிதண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும். -என்றார். (ஐ-13)



## நிரந்தர மருத்துவமனை அமைய அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்

### வைத்திய கலாநிதி ரகுநாதன் மணிவண்ணன் தெரிவிப்பு

மன்னார்,ஓக.8

"மன்னார் முசலி பிரதேச பகுதியில் நோயாளிகள் சிகிச்சை பெறுவதில் இருந்து வந்த குறையை நடமாடும் சித்த வைத்திய முகாம் தீர்த்து வைக்கின்றது. இங்கு நிரந்திர கிராமிய வைத்தியசாலை ஒன்று உருவாக்கப்பட்டு நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சைபெறவேண்டுமானால் ஒவ்வொருவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும்" இவ்வாறு மன்னார் மாவட்ட ஆயுள்வேத வைத்திய கலாநிதி ரகுநாதன் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

மன்னார் முசலி பிரதேசத்திலுள்ள முத்தரிப்புத்துறை நூறு வீட்டுத் திட்ட பகுதியில் மன்னார் மாவட்டத்தின்ஆறாவது நடமாடும் சித்த மருத்துவ முகாம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல வருடங்களாக இப்பகுதி மக்கள் சுகாதார சேவைகள் வசதிகள் இன்றி நீண்ட தூரம் சென்று தங்கள் மருத்துவ சேவைகளை பெற்றுவந்தனர்.

இக் குறையை நீக்கும் நோக்குடன் முத்தரிப்புத்துறை பகுதியில் தற்பொழுது வைத்திய சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச் சித்த வைத்திய முகாமுக்குரிய இடமானது ஒரு பொதுக் கட்டடத்தில் அமைந்துள்ளது.

இப் பகுதியில் ஒரு காணித்துண்டு கிடைக்குமானால் நிரந்திரக் கட்டடம் ஒன்றை இங்கு அமைத்து கிராமிய வைத்தியசாலையை ஏற்படுத்தக்கூடிய நிலை உருவாகும்.

கிராமிய வைத்தியசாலை ஒன்று உருவாக்கப்படும் போது அவ் வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும். -என்றார். (ஐ-60)

## போராட்டத்துக்கு இன,மத, பேதமின்றி அனைவரும் ஒன்றிணையுங்கள்

### கிளிநொச்சி அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கம் அழைப்பு



கிளிநொச்சி,ஓக.8

தற்போது நாட்டில் இடம்பெற்று வரும் அதிபர், ஆசிரியர் தொழிற்சங்க போராட்டத்துக்கு இன,மத பேதமின்றி அனைவரையும் ஒன்றிணையுமாறு கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கம் மற்றும் இலங்கை ஆசிரியர் சங்க கிளிநொச்சி கிளை என்பன கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

இது தொடர்பான ஊடக சந்திப்பு நேற்றுமுன்தினம் கிளிநொச்சி ஊடக அமையத்தில் நடைபெற்றது.

குறித்த சந்திப்பில் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட அதிபர், சங்கத்தலைவர் சவரி பூலோகராஜா கருத்து தெரிவிக்கையில்,

கொரோனா நிலைமையில் பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் மாணவர்களின் கல்வி இழக்கக்கூடாது என்ற நிலையில் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்களைப் பயன் படுத்தி மாணவர்களுக்கு 'சூம்' மற்றும் செயலட்டை ஊடாக கற்றலை மேற்கொண்டிருந்தோம்.

சம்பள முரண்பாடு தீர்க்கும் வரை அனைவரும் குறித்த கற்றல் செயற்பாடுகளிலிருந்து விலகியுள்ளோம்.

இதன் காரணமாக பெற்றோர்கள் எங்களோடு முரண்படாதீர்கள் எமது போராட்டம் தீர்வுபெற ஒத்துழைப்பு வழங்குங்கள்

மாணவர்கள் இழந்த கல்வியை மீள வழங்குவோம் எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தில் எமக்கான சாதகமான முடிவு கிடைக்காதுவிடின் அடுத்த வாரமளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் பெரியளவிலான கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். அதற்கு இன,மத, பேதமின்றி அனைவரையும் ஒன்றிணையுமாறு கேட்டுக்கொள்கிறேன். -என்றார். (ஐ-214)

## வீடு ஒன்றிலிருந்து 3 சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஓக. 8

கல்கமுல, மஹாநன்னேரிய பிரதேசத்தில் உள்ள வீடொன்றிலிருந்து 3 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

28 வயதான ஆண் மற்றும் பெண் மற்றும் 10 வயதான சிறுவன் ஆகியோரின் சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

28 வயதான பெண்ணும், அவரது மகனும் கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்றும், கொலை செய்தவர் தற்கொலை செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (து-இ)



## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 09 . 1933



மறைவு 07 . 08 . 2021

### திருமதி இராமலிங்கம் பாக்கியம்

கற்கோவளத்தைப் பிறப்பிடமாகவும் சந்தை மேற்கு ஒழுங்கை பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி இராமலிங்கம் பாக்கியம்** நேற்று (07.08.2021) சனிக் கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் வேலுப்பிள்ளை - காளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பவளம்மா விநாயகமூர்த்தி, லட்சுமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும், இராமலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், இராமச்சந்திரன், இராஜேஸ்வரி, இராசநாயகம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுரு, சூரியகமலா, சந்திரா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், ஆனந்தரூபன், ஆனந்தகுமாரி, ஆனந்தரூபி, ஆனந்தஜெகன்(லண்டன்), ஆனந்தஜெசிந்தா, ராகவன் (தாதிய உத்தியோகத்தர்), ரஜீவன் (வெளிக்கள காணி போதனாசிரியர் பருத்தித்துறை செயலகம்), சுபாசினி, இளங்கோ, மனோஜா (லண்டன்), வினோத் (வைத்திய அதிகாரி லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 652 9196 தகவல் : குடும்பத்தினர்

## பாலூட்டும் தாய்மாருக்கு தடுப்பூசியால் ஆபத்தில்லை

### உலக சுகாதார அமைப்பின் நிபுணர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 8

பாலூட்டும் தாய்மார்கள் தங்கள் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் எந்த ஆபத்தும் இருக்காது என உலக சுகாதார அமைப்பின் நிபுணரான சௌமியா சுவாமிநாதன் தெரிவித்தார்.

குழந்தையைப் பெற்றெடுத்தவர்களும், பாலூட்டும் பெண்களும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளலாம். தற்போது பயன்படுத்தப்படும் அனைத்து தடுப்பூசிகளிலும் உயிருள்ள வைரஸ்கள் இல்லை என்பதால் அவை தாய்ப்பால் மூலம் பரவுவதற்கான ஆபத்தும் இல்லை.

உண்மையில், தாய்மார்களின் நோய் எதிர்ப்பு சக்தியே தாய்ப்பால் மூலம் குழந்தைகளுக்குச் செல்லும் என்றும் சௌமியா சுவாமிநாதன் மேலும் தெரிவித்தார். (து-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புணர்வு கருத்தரங்கு

தென்மராட்சி,ஒக.8

தென்மராட்சி கல்வி வலய அலுவலர்களுக்கு புற்று நோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை வலய கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

வலயக்கல்வி பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் புற்றுநோய் தொடர்பான மருத்துவர்கள் கருத்துரைகளை வழங்கினர். (ஐ-9)




## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கீழ்காணும் வேலையாட்கள் தேவை. நிரந்தரமான வேலையும் தகுந்த சம்பளமும் வழங்கப்படும்..

01. தச்சு.வேலை
02. தளபாட பெயின்ரர்
03. வாகன சாரதி
04. கூலி வேலையாட்கள்

தொடர்பு : ஆர்க் தளபாட நிலையம். இல. 35. கொட்டைக்காடு ஒழுங்கை. கோண்டாவில் கிழக்கு. கோண்டாவில் (பஸ் டிப்போ அருகாமை)

**021 221 9909, 077 300 1763**

## WE'RE HIRING

"Technical Support/IT"

UK based IT Organization located in Jaffna is looking for a Technical Support with the following requirments.

Computer Literacy
Strong Communication Skill
Fluency in English

Interested Candidates are requested to forward their resume to
Whatsapp No : 076 90 47 655

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித் தெரு வீதியில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் விஸ்தீரணம் நில.பர 01 1/2 யும் வீடும் விற்பனைக்கு உண்டு.

**076 702 3565**



## பயிற்சி பத்திரிகையாளர் தேவை

யாழில் இயங்கும் முன்னணி பத்திரிகை நிறுவனத்திற்கு பயிற்சி பத்திரிகையாளர்கள் தேவை. ஆர்வமும் தேடலும் கொண்ட இளைஞர் யுவதிகள் விண்ணப்பிக்கலாம். விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

மின்னஞ்சல் முகவரி
admin@uthayan.com


## 6[வது] ஆண்டு நினைவலைகள்

அமரர் திருமதி
### புவனேஸ்வரி சீவகாருணியம்



தோற்றம் 13.11.1932 — மறைவு 14.08.2015

திதி : ஆடி அமாவாசை

அன்னையே! அரவணைத்த உன் கரங்கள்
ஆறுதல் சொன்ன உன் இதழ்கள்
நல்லறிவோடு ஒழுக்க வழிகாட்டியே
நல்லோராய் வாழ வழிசொன்ன உன் நிழலும்
கனவாகி இன்று எமை கலங்க வைத்த
ஆறாண்டு
காலமும் இது நிஜம் என்று கூறிடுதோ.

126, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

விழி நீருடன்
மகள், பேரப்பிள்ளைகள்


# வண்ணை வீரமாகாளி அம்மனின் திருத்தேர்

## பவளவிழா காண்கிறது

மருதமும் நெய்தலும் கைமுகார்த்து சிரித்திடும் யாழ் நங்கையின் குழல் சிவி தேர்வகிடு எடுத்தது போல் பருத்தித்துறை வீதியில் அமைந்ததே வண்ணை வீரமாகாளியம்மன் ஆலயம். ஈழம் தந்த இன்கலைச் செல்வன் சிற்பாசாரியார் **வி.ஆறுமுகம்** பிரமனாய் தோன்றி அவ் ஆலயத்தில் இருளகன்று இன்பத்தின் எல்லை சொரிந்திட கலை வர்ணத் தேரைப் படைத்தார். (1941ம் ஆண்டு) என்னிசை நோக்கிலும் கலைகள் குடைபிடிக்க ஆழமாய் கலை பதிக்க கலைஞர்கள் கை கோர்த்து அழகிய தேரை உருவாக்கிய பெருமைக்குரியவர். தேரின் அழகமைப்பு காளியின் சூலத்தால் தடம் புரிய கலைகள் பலகோடி சிலம் பொலித்து வழிகாட்ட விடியலை எமக்களித்த கலைஞர் அவர். எண்பது ஆண்டகன்றும் வியர்வைத் துளிகளால் விதைத்திட்ட வர்ண மேடையாக காட்சியளிக்கின்றது. தனது சிற்றுளியால் கலையினை பயணம் செய்ய வைத்த வலம்புரிச் சங்கம் இன்றும் விண்ணகத்திலிருந்து கலைப்பூக்களைச் சொரிகின்றார்.

கலையில் நடைபோட்ட சிற்பாசாரியார் குறைவற்ற தன்னடக்கமும் அமைதியும் கொண்ட கலைஞர் அவர் தனது கைவரிசையில் பயணித்து முதல் பிரசவமாக வீரமாகாளிக்கு சித்திரத்தேர் படைத்தார். கலையைக் குன்ழுந்து குழைந்து கலை வடித்த இவரது ஆளுமை கலை உலகிற்கு கிடைத்த பொக்கிஷமாகும். அயராத முயற்சியும் அசராத தைரியத்தோடும் அல்லும் பகலும் கலை படைப்பதையே தமது மூச்சாக கொண்ட **வி.ஆறுமுகம்** அவர்கள் இப் பூமியில் இல்லாவிடினும் விண்ணிலிருந்து மலர்தூவி வாழ்த்துவார் என்பதில் ஐயமில்லை.

**காற்றுக்கும், கதிரவனுக்கும், கடலலைக்கும் ஓய்வில்லாதது போல இவரது கலைகளும் என்றும் ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கும்.**





சிற்பாசாரியார் வி. ஆறுமுகம்
( ஆறுமுகம் சிற்பாலயம் - திருநெல்வேலி )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கடின காலத்தை கடக்க....!

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன. பொதுமக்களின் நடமாட்டங்கள் இயல்புக்குத் திரும்பியிருக்கின்றன. மறுபுறத்தில் கொரோனாத் தொற்றின் தீவிரம் முன்னெப்போதும் இல்லாத அளவு அதிகரித்திருக்கிறது. கொரோனாத் தொற்றுடன் தொடர்புடைய மரணங்கள் நாளொன்றுக்கு நூறை அண்மித்திருக்கின்றன.

அரசும், அரசில் இருப்போரும் பலவற்றைக் கூறினாலும், இப்போது நாடு மிகவும் அபாய கட்டத்தில் இருக்கின்றது என்பதுதான் உண்மை. ஆட்சியைக் கொண்டுநடத்த முடியாத காரணத்தாலேயே, கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளனவே தவிர, கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பட்டதால் அவை நீக்கப்படவில்லை என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது மேல் மாகாணத்தில், கொழும்பில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமை இன்னும் ஓரிரு வாரங்களில் அனைத்து மாகாணங்களிலும் ஏற்படும் என்று சுகாதாரத் துறைசார் நிபுணர்கள் கூறுகின்றனர். இப்போது தீவிரம் பெறும் டெல்டா பிறழ்வுத் தொற்றுக்குள்ளாவோருக்கு ஒட்சிசன் வழங்குவது அவசியம் என்பதால் மருத்துவமனைகளின் நிலை ஓரிரு நாள்களில் மோசமாகும் என்றும் அவர்கள் எச்சரிக்கின்றனர்.

மருத்துவத் துறையினரின் ஆலோசனைகளை அரசு அலட்சியம் செய்யும் நிலையில், பொதுமக்களே தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைமை தோன்றியிருக்கிறது. ஆனால் மக்கள் இந்த ஆபத்தான நிலைமைகளைப் பற்றிக் கிஞ்சித்தும் கவலை கொள்ளாமல் செயற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு மாகாணத்திலும் இப்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது. எழுமாறாக நடத்தப்படும் பரிசோதனைகளில் கூடடசின் கணக்கானவர்கள் தொற்றுடன் இனங்காணப்படுகின்றனர். இவ்வாறான நிலைமை ஒருபுறம் இருக்க சுகாதார நடைமுறைகளைக் கணக்கில் எடுக்காது மக்கள் ஆலயத் திருவிழாக்கள் உட்பட நிகழ்வுகளில் பங்கெடுப்பது சுகாதாரத்துறையினருக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆலயத் திருவிழாக்கள், ஏனைய நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளபோதும் மக்கள் தாமாக தற்போதைய நிலைமையை உணர்ந்து செயற்பட வேண்டும். அதிகளவில் ஒன்றுகூடுவதைத் தவிர்த்துக்கொள்வதுடன், மக்கள் அதிகம் ஒன்றுகூடுவார்கள் என்று இனங்காணும் இடங்களுக்குச் செல்லாதிருக்க வேண்டும். எமது தனிப்பட்ட எண்ணங்கள், கருத்துக்களைத் தாண்டி சமூக நலனை சிந்தித்துச் செயற்படுவது அவசியம்.

தற்போது தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அனைவரும் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வது அவசியமான ஒன்று. ஆயினும் தடுப்பூசி கொரோனாத் தொற்று ஏற்படுவதைத் தடுக்காது. இரு தடவைகள் தடுப்பூசி ஏற்றிய பின்னரே உரிய பாதுகாப்புக் கிடைக்கும் என்பதையும் மனதில் இருத்தி மக்கள் செயற்பட வேண்டும்.

அனைவரின் ஒத்துழைப்பும கிட்டினாலே இந்த கடினமான காலத்தைக் கடந்துசெல்ல முடியும். அதற்காக அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டியதே காலத்தின் தேவை.




# உலகில் கொரோனா சாவில் இலங்கை முதலிடம் பிடிக்கும்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 8**

**இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் கொவிட் பரவல் இரண்டாம் அலையில் இறப்புகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்ததைப் போன்ற நிலைமையே தற்போது இலங்கையிலும் காணப்படுகிறது.**

உலகில் அதிக இறப்பு வீதம் பதிவாகிய நாடுகள் பட்டியலில் இலங்கை முதலிடத்தை பிடிக்கக்கூடும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் வாரங்களில் உலகில் கொவிட் இறப்பு வீதம் அதிகமாகக் காணப்படும் நாடுகள் பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடிக்கக்கூடும். காரணம், தற்போது பெருமளவான மருத்துவமனைகளில் கொள்ளளவை மீறிய தொற்றாளர்கள் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இந்த நிலைமையைத் தடுப்பதற்கு மேலும் தாமதிக்காது நாட்டிலுள்ள சகல பிரஜைகளுக்கும் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். இதற்கு 60 பில்லியன் ரூபா கூட செலவாகாது. அத்தோடு நாட்டு மக்கள் அனைவரும் தாமதிக்காது பொறுப்புடன் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும்- என்றார். (த-இ)

# மூன்று வாரங்களுக்காவது போராட்டத்தை நிறுத்துங்கள்

### அமைச்சர் நாமல் ராஜபக்ச கோரிக்கை

கொழும்பு, ஓக. 8

போராட்டங்களின் காரணமாகவே கொவிட்-19 வைரஸ் பரவல் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. இதனால் நாட்டு மக்களுக்கு பெருமளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே அனைத்து தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தொழிற்சங்கத்தினர் போராட்டங்களில் ஈடுபடுவதை குறைந்தது 3 வாரங்களுக்காவது தவிர்த்துக்கொள்ள வேண்டும் என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போராட்டங்கள் ஆரம்பமானவுடன் கொவிட் 19 வைரஸ் பரவலும் தீவிரமடைந்துள்ளது. கொவிட்-19 முதலாம் கட்ட தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட ஒரு தரப்பினர் தங்களின் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். இதனால் ஒட்டுமொத்த மக்களும் இன்று நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.



போராட்டங்கள் தீவிரமடைந்ததனால் கொவிட்-19 வைரஸ் பரவல் தற்போது தீவிரமடைந்துள்ள்து. தொழிற்சங்கத்தினரின் கோரிக்கைகள் நியாயமானவையா? நியாயமற்றவையா? என்பது தொடர்பில் ஆராயும் தருணம் இதுவல்ல. இதனால் நாட்டு மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பில் ஆராய வேண்டும்.

அரசியல் நோக்கங்களை கருத்திற்கொண்டு நாட்டு மக்களை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஆகவே அனைத்து தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்- என்றார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதிர் வழிபாட்டுக்குரிய புண்ணியமான தினம் ஆடி அமாவாசை



மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன்

சூரிய சந்திரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு இராசியில் சஞ்சரிக்கும் புனிதமான நாள் அமாவாசையாகும். அத்தோடு தேவர்களும் அமாவாசையின் அதிபர்களாக உள்ளனர்.
பூமியிலுள்ளவர்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு அமாவாசையும் பிதிர் கருமத்துக்கு அதாவது தென் புலத்தார் வழிபாட்டுக்கு மிக உகந்த நாள். சூரிய மண்டலத்துக்கு அப்பால் தென்மண்டலத்தில் பிதிர்கள் உறையும் பிதிர் லோகம் உள்ளது.
பிதிர்களை தென்புலத்தார் என்று அழைப்பது தமிழர்கள் மரபு. தென்புலத்தார் வழிபாட்டில் எள்ளும் தண்ணீரும் இறைத்தல், பிண்டம் போடுதல் என்பவை பழந்தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை. அமாவாசை விரதம் இருந்து இந்தக் கருமங்களை ஆற்ற வேண்டும்.
ஆடி அமாவாசை பிதிர் கருமங்களுக்கு மிகவும் உகந்தது என்றும் பிதிர் வழிபாடு செய்ய வேண்டியவர்கள் தவறாது ஆடி அமாவாசையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் நூல்கள் எடுத்துரைக்கின்றன. பிதிர் தர்ப்பணத்துக்கு மிகவும் ஏற்றது ஆடி அமாவாசை என்பது இந்துக்களின் கொள்கை.
ஆடி அமாவாசைத் தினத்தில் கடல் நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பழைய வினைகள் அறும் என்றும், பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்களை இறைவனின் அருள் செறிந்த நீராக நினைத்து முன்னோர்களான பிதிர்களை எண்ணி அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களுக்கு முக்தியளிக்கும்படி இறை வேண்டித் தீர்த்தமாடுதல் வேண்டும்.
அமாவாசை, பௌர்ணமி தினங்களில் கடல் பொங்கியெழும் நிலை உண்டு. இந்தத் தினங்களில் மனித மன உணர்வுகளிலும் மாறுதல்கள் நிகழ்வதாகக் கூறப்படுகின்றது.
மானிடரின் ஆன்மீக வலுவும் குன்றும் காலமாக இந்தத் தினங்கள் உள்ளன. அதனால்தான அமாவாசை போன்ற கனத்த நாள்கள் மிக அவதானமாக கழிக்கப்பட வேண்டும் என்றும் இந்த நாள்களில் வேறு காரியங்களைச் செய்யாதும், மனங்களைப் புலன்கள் வழிச்செல்ல விடாதும் பார்த்துக்கொள்ள



வேண்டும் என்றும் ஆன்றோர்கள் கூறி வைத்தனர். இந்தத் தினங்களில் கடவுள் வழிபாடு பிதிர் வழிபாடு என்பவற்றைச் செய்து நல்ல பயனைப் பெறுவதே முறையாகும்.
ஆடி அமாவாசையில் தீர்த்தமாடுதல் பிதிர் வழிபாடு செய்தல் தர்ப்பணம், பிண்டதானம் நிறைவேற்றுதல் என்பவை ஆண்டுதோறும் கீரிமலை, நகுலேஸ்வரத்திலும், மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. வேறு பல சிவத்தலங்களிலும் இந்த நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.
தட்சினாயனத் தொடக்கம் மாதம் ஆடி என்பதால் பிதிர்க் காரியங்களுக்கு ஆடி மாதம் சிறப்பானது எனக் கொள்ளப்படுகிறது. ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசைத் திதி பிதிர் வழிபாட்டுக்கு புண்ணியமான தினம் எனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன.
இத்தகு புண்ணிய காலமாக இன்று இந்துக்களால் தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் எங்கும் பிதிர்க்கடன் நிறைவேற்றி ஆடி அமாவாசை விரதம் பிரசித்தி பெற்ற சிவாலயங்களில் ஒன்றான பூர்வீக வரலாற்றுப் பெருமைகளைத் தன்னகத்தே கொண்ட நகுலேஸ்வரத்தில் (கீரிமலைச் சிவன் கோயில்) கீரிமலை எனும் புனித தீர்த்தத்தில் இந்துக்கள் தீர்த்தமாடி நிறைவேற்றுவர்.

# ஆசிரியர்களின் பிரச்சினையை உடனடியாகத் தீர்த்துவையுங்கள்

## கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஓக. 8
ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான உத்தரவாதத்தை அரசு உடனடியாக வழங்க வேண்டும். அதன்மூலம் இந்த பிரச்சினையை இலகுவாக முடிவுக்கு கொண்டுவரலாம் என்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிகையில்,
இந்திய மீனவர்கள் றோலர் படகுகளில் சிறிலங்கா கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்து வருகிறார்கள். அதன் மூலமாக எமது மீனவர்களின் மீன்பிடி வலைகளை வெட்டியும் உபகரணங்களை, உடைமைகளை அழித்தும் வருகின்றார்கள்.
இந்திய ட்ட்றோலர்களால் தும்பளை கிழக்கில் இருந்து கொட்டடி வரைக்குமான பகுதிகளில் ஒரே நாளில் மாத்திரம் சுமார் 15 மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்பட்டிருக்கின்றன. இவை தொடர்ந்துகொண்டிருக்கின்றன.
ஒருபுறம் எமது மக்களின் வாழ்நிலங்களை ஆக்கிரமித்து முகாம்களை அமைத்து அவர்களை நிலமற்றவர்களாக ஆக்கிக்கொண்டு மறுபுறம், அதே மக்களும் அவர்களது உடமைகளும் அழிக்கப்படுகின்றமையை அனுமதித்துக்கொண்டிருக்கிறீர்கள்.
அது மட்டுமல்ல, வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டு வருகின்ற கடலட்டை பண்ணைகளால், பிரதேசத்தின் கடற்படுக்கை மீன்பிடி, முழுமையாக அழிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. இதனால், எதிர்கால மீன்பிடித்தொழில் மிகக்கடுமையான பாதிப்புகளை எதிர்கொள்ளநேரிடும்.
எனவே இந்த விடயங்களுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்த அவையை கேட்டுக்கொள்கிறேன்- என்றார். (த-26)

கொரோனா தாண்டவத்தால்

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பிரிவு மூடப்பட்டது

மட்டக்களப்பு, ஓக. 8
கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பலருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் கட்டடத்தொகுதி முற்றாக முடக்கப்பட்டுள்ளது.
நிர்வாகக் கட்டடத்தொகுதியில் அமைந்துள்ள அலுவலகங்களில் பணியாற்றும் பல பணியாளர்களுக்கு கடந்த இரு வாரங்களாக கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது. அதனையடுத்து அங்கு அனைத்து அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன.
கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனைகளில் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பீடாதிபதிகள் உட்பட சுமார் 60 க்கும் அதிகமானவர்களுக்கு கொரோனாத்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-26)

# துறைமுக அதிகார சபையில் 600 பேருக்குக் கொரோனா

கொழும்பு, ஓக. 8
கொழும்பு துறைமுக அதிகார சபையில் பணியாற்றும் சுமார் 600 ஊழியர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. நேற்றுவரை அங்கு கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 593 பேர் என்று சுகாதாரத் துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் அனைவரும் துறைமுக அதிகார சபையின் பல்வேறு பிரிவுகளிலும் கடமையாற்றுபவர்கள் என்று தெரியவருகின்றது. தொற்றுக்குள்ளான அனைவரும் தற்போது வீடுகள், மருத்துவமனைகள் மற்றும் கொரோனா இடைத்தங்கல் மையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று துறைமுக அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்டிஜென் பரிசோதனையில் மூவருக்கு தொற்று

சாவகச்சேரி, ஓக. 8

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் மூவருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டது.

பணியகத்தால் நேற்று 67 பேருக்கு அன்டிஜென் பரிசோதனையும், நால்வருக்கு பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டன. அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 67 பேரில் நாவற்குHpப் பகுதியில் தனிமைப்படுத்தலில் உள்ள ஒருவருக்கும், கைதடி சித்த மருத்துவபீட மாணவருக்கும், கொரோனா அறிகுறியுடன் காணப்பட்ட மட்டுவில் வாசிக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டது. (ஐ-9)



பொதுப் போக்குவரத்தில்

# தொழில் அடையாள அட்டை நாளை தொடக்கம் கட்டாயம்

கொழும்பு, ஓக. 8

பொதுப்போக்குவரத்து சேவையை பயன்படுத்துவோர் தங்களின் தொழிலுக்கான அடையாள அட்டையை வைத்திருப்பதை நாளை திங்கட்கிழமை தொடக்கம் கட்டாயமாக்க அரசு தீர்மானித்துள்ளது.

பொதுப் போக்குவரத்து சேவையை அத்தியாவசிய சேவையில் ஈடுபடுவோர் பயன்படுத்துகின்றனரா என்பது தொடர்பில் திடீர் சுற்றிவளைப்புகளினூடாக ஆராயவுள்ளோம் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். (த-இ)




# வவுனியா பல்கலையின் ஆரம்ப நிகழ்வு பிற்போடல்

வவுனியா, ஓக. 8

வவுனியா பல்கலைக்கழகத்தின் ஆரம்ப நிகழ்வு மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் தனியான பல்கலைக்கழகமாக அண்மையில் தரமுயர்த்தப்பட்டது.

இந்த [illegible] எதிர்வரும் [illegible] தற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கலந்து [illegible]ள்ளனர் என அறிவிக்கப்பட்டு [illegible]ருந்தது. இந்த நிலையில் நாட்டில் அதிகரித்துள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக அரச நிகழ்வுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் குறித்த நிகழ்வும் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
27 . 03 . 1936

மறைவு
02 . 08 . 2021

## திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமி

காரைநகர் கோவளத்தை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் அன்னலட்சுமி அவர்கள் கடந்த 02.08.2021 (திங்கட்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் கதிராசிப்பிள்ளையின் மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு இலட்சுமிபிள்ளையின் மருமகளும், காலஞ்சென்ற கதிரவேலு சுப்பிரமணியத்தின் மனைவியாரும், காலஞ்சென்றவர்களான சிவபாதம், இராசரத்தினம் ஆகியோரின் சகோதரியும், மங்களேஸ்வரி (கொழும்பு), சாந்தமலர் (லண்டன்), லலிதாம்பாள் (கொழும்பு), கதிர்காமநாதன் (S.K.T சுவிஸ்), கௌரியாம்பாள் (லண்டன்), விமலநாதன் (S.K.T சுவிஸ்), ஞானாம்பாள் (கொழும்பு), அருள்செல்வி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பரமநாதன், காலஞ்சென்ற தங்கராசா, நிமலேஸ்வரன் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), தனலட்சுமி (S.K.T சுவிஸ்), யோகநாதன் (லண்டன்), அருட்செல்வி (சுவிஸ்), சுந்தரலிங்கம் (இளைப்பாறிய உதவி அதிபர், இந்துக்கல்லூரி, கொழும்பு - 04) , கோபால் (லண்டன்), ஆகியோரின் மாமியாரும், ஜெயகாந்தன், ஜெயரூபன், ஜெயந்தினி, ஜெயதர்சன், தாமிரா, உகந்தா, தயானி, அஹிபன், கஜலஷ்சி, மாதங்கி, நிரோஸ், சுயிந்தன், பஜிந்தன், மதோஸ், யதிஷன், அபிலாஷ், கணேஸ்ராம், பிரவின், கஜனி ஆகியோரின் பேர்த்தியாரும், பிரசன்னா, பிரகாஷ், விபிசா, ஹரிஷ், அமிர்தினி, அஞ்சுகன், ஆபூர்வா, அக்வித், அனுத்ரா, கௌரிஷ் ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் அன்னாரின் கோவளம், காரைநகர் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திங்கட்கிழமை (09.08.2021) காலை 7 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். (இப்போதைய Covid - 19 விதிமுறைகளுக்கமைவாக நடைபெறும்) என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரிற்கும் அறியத்தருகிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

திருமதி.N.லலிதாம்பாள் - 0771476419
திருமதி.Y.கௌரியாம்பாள் - +447983130732
திருமதி.S.ஞானாம்பாள் - [illegible]
திருமதி.G.அருட்செல்வி - +447930194559
திரு.S.கதிர்காமநாதன் - 0775708658
திருமதி P.மங்களேஸ்வரி - 0770258816
திரு.S.விமலநாதன் - +41765709438
திருமதி T.சாந்தமலர் - +447476005087

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## உடல்,உள ஆரோக்கியத்துக்கான தேக பயிற்சிகூடம் திறப்பு


மன்னார், ஓக.8

இளைஞர்களின் உடல் ,உள ஆரோக்கியத்துக்கான தேக பயிற்சி கூடம் ஒன்று மன்னார் பெரியகுஞ்சுக்குளம் கிராமத்தில் அண்மையில் திறக்கப்பட்டது.

பிறிஜிசின் லங்கா நிறுவனத்தால் அமைக்கப்பட்ட இந்தப் பயிற்சி கூடத்தை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மடு பிரதேச செயலர் விஜாகரன், நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் பி.பரஞ்சோதி மற்றும் பிறிஜின் லங்கா நிறைவேற்று பணிப்பாளர் ஜெரோமி லியனகே உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ஐ-60)






வவுனியா ஓமந்தை நவ்வி கிராமத்தில் உள்ள இரு வீதிகள் தார் வீதிகளாக சீரமைக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சபையின் 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இவ் வீதிகள் சீரமைக்கப்பட்டுள்ளன. (ஐ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 08 . 1928



இறப்பு 06 . 08 . 2021

### திரு. செல்லையா புண்ணியமூர்த்தி

தொண்டைமனாற்றை பிறப்பிடமாக கொண்டவரும் கூத்தன் சீமா அளவெட்டி வடக்கை சேர்ந்தவரும் 189/1, 3/4 மகாவித்தியாலய மாவத்தை, கொட்டாஞ்சேனை, கொழும்பை வதிவிடமாக கொண்டவரும், பிரபல பிரசித்த நொத்தாரிசும், பதிவாளரும், வவுனியா மாவட்ட உயர் நீதிமன்ற ஓய்வு பெற்றபதில் நீதிபதியுமாகிய திரு. செல்லையா புண்ணியமூர்த்தி அவர்கள் நேற்று முன்தினம் (06.08.2021) வெள்ளிக்கிழமை அன்று கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் திருமதி சாவித்திரி புண்ணியமூர்த்தி அவர்களின் அன்புக் கணவரும் திரு. கெங்காதரன் (பிரான்ஸ்), திரு.லிங்காதரன் (நோர்வே), திரு. புவிதரன் (நோர்வே), செல்வி. நிரஞ்சனா (கொழும்பு), திருமதி மேகலா சுதாகரன் (வைத்தியர், டி சொய்ஸா மகப்பேற்று மருத்துவமனை, கொழும்பு), ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருபாளினி, துளசிமணி, ரகுணா, சுதாகரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.08.2021) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தொடர்பு : 076 448 5957, 011 243 6518

தகவல்: குடும்பத்தினர் (கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# ஹேமசிறி, பூஜித் ஆகியோர்மீது குற்றப்பத்திரம் தாக்கல்செய்யவும்

மூவரடங்கிய விசேட மேல்நீதிமன்று உத்தரவு

இருவரும் பிணையில் விடுவிப்பு

**கொழும்பு, ஓக. 8**

**உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர்மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யுமாறு கொழும்பு மூவரடங்கிய விசேட மேல்நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.**

அதன்படி, இந்தத் தாக்குதலைத் தடுப்பதற்கு புலனாய்வுத் தகவல் கிடைத்தும் அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறிய காரணத்தால், தமது பொறுப்பை அலட்சியம் செய்து அப்பாவி மக்கள் கொலைசெய்யப்பட்டமை தொடர்பில் குறித்த இரண்டு பேருக்கும் எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்தக் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்வதற்கென எதிர்வரும் 27ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் அறிவித்துள்ளது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி கொழும்பு, நீர்கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திரக் ஹொட்டல்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் 300 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்திருந்தனர்.

இந்தநிலையில், முன்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் தெரிந்தும் அதனை தடுக்கத் தவறினர் என்று குறிப்பிட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வழக்குத் தாக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

இதுதவிர, நேற்றைய வழக்கு விசாரணையின்போது, குற்றம் சாட்டப்பட்ட ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பூஜித ஜயசுந்தரவை பிணையில் விடுவிக்க மூவரடங்கிய நீதிபதிகள் குழு உத்தரவிட்டது.

இந்தநிலையில் குறித்த இருவரதும் கைவிரல் அடையாளத்தைப் பெற்று அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டனர். இதனிடையே, இந்த வழக்கு விசாரணையில் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப் பீரிஸ், குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை மீண்டும் மறுபரிசீலனைசெய்து குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்ய காலஅவகாசம் அளிக்குமாறு கோரினார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் குழாம், எதிர்வரும் 27ஆம் திகதி குறித்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவும், அன்றைய தினம் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்களைத் தாக்கல்செய்யவும் உத்தரவிட்டது. (து-22)



மனித பாவனைக்கு உதவாத

## 2 ஆயிரம் கிலோ இறைச்சி வவுனியாவில் எரித்தழிப்பு

வவுனியா,ஓக.8

மனித நுகர்வுக்கு தகுதியற்ற 2 ஆயிரம் கிலோகிராம் கோழிஇறைச்சி எரித்தழிக்கப்பட்டது என்று வவுனியா தெற்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

வடபகுதியில் விற்பனைக்காக நேற்றுமுன்தினம் கொண்டுவரப்பட்ட குறித்த இறைச்சி ஏற்றிய வாகனத்தை வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் மறித்து சோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த வாகனத்தில் போதியளவு குளிரூட்டி இன்மையால் இறைச்சி பழுதடைந்த நிலையில் காணப்பட்டதையடுத்து வவுனியா தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் இணைந்து அவற்றைக் கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

குறித்த இறைச்சி மனித பாவனைக்கு உதவாது என்று நீதிமன்றத்தால் உறுதிபடுத்தப்பட்டதை அடுத்து நேற்றுமுன்தினம் மாலை வவுனியா பாவற்குளம் பகுதியில் மக்கள் குடிமனைகள் இல்லாத இடத்தில் வைத்து எரித்தழிக்கப்பட்டது. (ஐ-110)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

கிளிநொச்சி,ஒக.8
ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து சந்தைகளிலும் நேற்று மரக்கறிகளின் விலை அதிகரித்துக் காணப்பட்டது.
அந்த வகையில் கத்தரிக்காய் 300 ரூபா,பயிற்றங்காய் 400 ரூபா, பாகற்காய் 400 ரூபா, முருங்கைக்காய் 400 ரூபா என வழமையை விட மரக்கறி வகைகளின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன. (ஜ-113)

# பெண்ணுக்கு ஆடை கொடுத்ததை நிரூபித்தால் பதவி விலகுவேன்

## நிரூபிக்கத்தவறின் பெண்களின் பொருள்களை நளின் பண்டார சுமக்கவேண்டும் என சரத் வீரசேகர டீல்

கொழும்பு, ஓக. 8
“கைதுசெய்யப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட பெண்ணொருவருக்கு நான் ஆடைகளை கொண்டுசென்று வழங்கினேன் என்று கூறப்படும் கதையை உண்மையென நிரூபித்தால், எனது அமைச்சுப் பதவியை துறக்கத் தயாராக உள்ளேன்.
ஆனால் என்மீதான குற்றச்சாட்டு நிரூபிக்க முடியாது போனால், குற்றம்சாட்டும் நபர்கள், பெண்களின் பொருள்கள் உள்ளடங்கிய பொதியை தலையில் சுமந்து கொண்டு சபையில் ஐந்து நிமிடம் நிற்க வேண்டும்.” என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர சபையில் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் சிறப்புரிமை பிரச்சினையை முன்வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் சரத் வீரசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார என்னைப்பற்றி அவதூறான கருத்துக்களை வெளியிட்டார். நான் பெண்ணொருவருக்கு உடைகளை கொண்டுசென்றேன் என்றும், பயணக் கட்டுப்பாடுகளை மீறி கைதுசெய்யப்பட்ட பெண்ணுக்கு இவ்வாறு உடைகளை வழங்கினேன் என்றும் அவர் கூறியுள்ளார்.
இவர் கூறுவது போல் நான் அந்தப் பெண்ணுக்கு உடைகளை கொண்டுசெல்லவும் இல்லை. அதற்கு நினைத்ததும் இல்லை. என்னுடன் தொடர்புடையவர்களும் அவ்வாறு செய்யவில்லை. இவ்வாறான பொய்யையே இவர்கள் சமூக மயப்படுத்த முயற்சிக்கின்றனர்.
எனக்கு 3 இலட்சத்து 28 ஆயிரம் பேர் வாக்களித்துள்ளனர். நான் வாக்கு எண்ணிக்கையில் கொழும்பில் முதலிடத்தையும், இலங்கையில் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளேன். இதன்படி அந்த மக்களுக்காக நான் பதவி விலகத் தயார். இல்லையென்றால் நளின் பண்டார பதவி விலக வேண்டிய அவசியமில்லை. அவர் பெண்களின் பொருள்களை தலையில் சுமந்துகொண்டு நாடாளுமன்ற நுழைவாயிலில் 5 நிமிடங்கள் இருக்குமாறு அவருக்கு சவால் விடுக்கின்றேன்- என்றார். (த-இ)

# சிறார்கள் தொடர்பான 500 காணொலிகளுடன் 25 வயது நபர் கைது

கொழும்பு, ஓக. 8
சிறுவர்களை முறையற்ற விதத்தில் காண்பிக்கும் வகையிலான சுமார் 500 காணொலிகள் மற்றும் ஒளிப்படங்களை சேகரித்து அவற்றை போலியான சமூக வலைத்தள கணக்குகள் ஊடாக பதிவேற்றினார் என்ற குற்றச்சாட்டில் 25 வயதுடைய நபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
சிறுவர் மற்றும் மகளிர் பொலிஸ் பிரிவால் தொடர்ச்சியாக சிறுவர்கள் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று சிறுவர்களை முறையற்ற விதத்தில் காண்பிக்கும் காட்சிகள், காணொலிகள் மற்றும் ஒளிப்படங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏதேனுமொரு வழியில் சமூக வலைத்தளங்களில் அல்லது இணையதளங்களில் பதிவேற்றப்பட்டால், பதிவேற்றப்பட்ட அந்த நொடியிலேயே அதனுடன் தொடர்புடைய நபர்களை இனங்காணமுடியும்.
இது தொடர்பான விசேட தொழிநுட்ப பிரிவு சிறுவர் மற்றும் மகளிர் பொலிஸ் பிரிவில் கடந்த ஜூன் மாதம் 17 ஆம் திகதி அமைக்கப்பட்டுள்ளது. அன்றிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் பல்வேறு சந்தர்ப்பங்களில் சிறுவர்களை முறையற்ற விதத்தில் காண்பிக்கும் காட்சிகள், காணொலிகள் மற்றும் ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டிருந்தன. இவை தொடர்பில் சந்தேகநபர்களை கைதுசெய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன என்று பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (த-இ)

ஆடி அமாவாசை நாள்
08.08.2021
என் அப்பாவின் நினைவில்...
“நீத்தல், வாழ்வின் முடிவு அல்ல புதியதொரு வாழ்வின் தொடக்கம்.”

அமரர்
திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்
(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)
தோற்றம்: 26.06.1941 மறைவு : 14.08.2000
பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி. -குடும்பத்தினர்-

# மோதலில் மூவர் காயம்

யாழ்ப்பாணம்,ஒக.8
இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் மூவர் காயமடைந்தனர்.
இந்தச் சம்பவம் உடுவில் சத்தியபுரம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது. காயமடைந்த மூவரும் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள குளிர்பான நிலையத்திற்கு விநியோக பகுதியில் வேலை செய்வதற்கு பணிப் பெண்கள் தேவை.
ஆவர்வமுள்ளவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு 077 618 2725

## STUDENT VISIT AND BUSSINESS VISA

ரஷ்யாவில் முன்னணி பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியை தொடர மற்றும் வியாபார நோக்கம் கொண்ட VISA, சுற்றுலா விசா போன்றவற்றை 26 வருடம் அனுபவமுடைய நிபுணர்களால் பெற்றுத் தரப்படும்.

Staffored Studies, Colombo - 07 071 385 3222

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு. மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு. மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி· கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


## தொற்றாளர்கள் தொடர்ந்தும் அடையாளம்

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் மற்றும் சாவகச்சேரி மருத்துவமனையால் முன்னெடுக்கப்பட்டு வரும் பி.சி. ஆர். மற்றும் எழுமாற்றுப் ப்ரிசோதனைகளில் தொடர்ந்தும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை பெறப்பட்ட மாதிரிகளில் நால்வருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மட்டுவில் பிரிவில் ஒருவருக்கும், மிருசுவில் பிரிவில் இருவருக்கும், அல்லாரைப் பிரிவில் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் ஐந்து பேருக்கும், சாவகச்சேரி மருத்துவமனையில் மேற்கொண்ட அன்டிஜென் பரிசோதனையில் ஐந்து பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (4.9)


## வாயுபுத்ரா போன் சொப்
## Vayuputhra
Phone Shop & Vivo Distributors

அனைத்து விதமான கட்டணங்களையும் இங்கு மேற்கொள்ளலாம்.

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் செல்வச் சந்நிதியான் திருவருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்.

All Types of Recharge Available Here

அனைத்து சேவைகளும் நியாயமான விலையிலும் துரித வேகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

❖ டிஷ் (Dish TV) கட்டணங்கள் ❖ மின்சார கட்டணங்கள்
❖ தொலைபேசி கட்டணங்கள் ❖ காப்புறுதி கட்டணங்கள்

SUN DIRECT dishtv airtel digital TV TATA Sky d2h VIDEOCON Dialog airtel HUTCH LANKA BELL mCash

❖ Phone accessories
❖ Phone Sales
❖ Repairing
❖ Unloking
❖ Software




வாயுபுத்ரா புக்கிங் சென்றர் சகல விதமான பேருந்துகளுக்கும் ஆசனப் பதிவுகளைமேற்கொள்ள முடியும்.
அதிசொகுசு பயணிகள் போக்குவரத்து சேவை
ஆசனப் பதி... யாழ் ⇄ ...மபு (தினமு...)

ஆசன பதிவுகளுக்கும் மேலதிக தொடர்புகளுக்கும் ➤ இல.364, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Mob: 077 8840 775 No.364, Hospital Road, Jaffna. Mob: 077 36 44 246

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




சேவைக் காலத்தின் ஆரம்பத்திலும் நிறைவிலும்
எமது பாடசாலையில் **ஆசிரியராகவும்**, அதிபரற்ற காலங்களில்
**பதிலதிபராகவும்** செயலாற்றி ஓய்வுபெறும் இக் கல்லூரியின்
**பழைய மாணவியுமாகிய**

### திருமதி சறோஜினி தேவரஞ்சன்

அவர்களின் ஓய்வு காலம் மேன்மேலும் மகிழ்ச்சிகரமானதாக
சிறப்புற வாழ்த்துகின்றோம்

கிளிநெச்சி நகர் தனிலே
புகழ் பூத்த கல்லூரியாம்
புனித திரேசாள் பெண்கள் கல்லூரியில்

ஈர் ஒன்பது வருடங்களை
ஐக்கியமாய் முடித்த எம் ஆசானே

பன்னீர் ஐந்து ஆண்டுகளை
பக்குவமாய் முடித்திங்கு
ஓய்வெடுக்கும் ஆசானே
உங்களை நாம் வாழ்த்துகின்றோம்

சேர்ந்திங்கு பணி செய்த
சேவைகளைப் பாராட்டி
சேமமாய் வாழ்ந்திடவே
உங்களை நாம் வாழ்த்துகின்றோம்

இளைப்பாறும் இக்காலம்
இனியவையாய் அமைந்திடவே
இன்முகத்தோடு இறையாசீர் கூறி
மனதார வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: ஆசிரியர், பணியாளர், நலன்புரிச் சங்கம், பாடசாலை சமூகம்**

**கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி**

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் செல்வச் சந்நிதியான் திருவருள் பெற்றிட பிரார்த்திக்கின்றோம்.

LINGAA 3rd Anniversary



Mega offer
Sarees & Fancy Jewellery
From 30% to 50 % Off*



## லிங்கா பெஷன்

நல்லூரில் ஆடைகளின் சாம்ராஜ்யம்

Whatsapp - 076 644 0722
Tel: 021 221 4999
www.lingaa.lk
www.fb.com / lingaa.lk
No. 302A, TEMPLE ROAD, NALLUR, JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 27.03.1937

உதிர்வு 02.08.2021



## சுப்பிரமணியம் அன்னலட்சுமி

நிலையில்லா வாழ்வினிலே நெஞ்சமதில் நீங்கா நினைவுகளை பதித்துவிட்டு பாசம் காட்டிய உறவுகளை பரிதவிக்க வைத்து விட்டு மறைந்தாயே!

| ஸ்ரீலலிதாபெஷன் | லலிதா ரெக்ஸ் |
|---|---|
| இல.165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். | இல.5,6, நவீனசந்தை, யாழ்ப்பாணம். |

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 09 . 1976

மறைவு 01 . 08 . 2021



## சொக்கநாதன் சுதாகரன்

(பழைய மாணவன், கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி)

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும், பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கநாதன் சுதாகரன் 01/08/2021 அன்று பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொக்கநாதன் (Nathan Bros Colombo) புஸ்பவல்லி தம்பதியரின் அன்பு மகனும், திரு.திருமதி சுப்பிரமணியம் (அச்சுவேலி) அவர்களின் அன்பு மருமகனும், சோபனாவின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன் (U.K.), காலஞ் சென்ற பிரபாகரன் (Nathan Bros. Colombo) மற்றும் சுதர்மதி ( Rathmalana, Colombo) புவனேசன் (U.K.) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், உஷாந்தினி, மாநினி, ஓங்காரகுமரன் (Accountant, Lanka Electricity Company Private Limited, Moratuwa) ஆகியோரின் மைத்துனரும், ஹரிசதூர்ஜன், சங்கீர்த்தனா, திலோசன், மீனாட்சி, ஆச்சி, நாச்சியார் ஆகியோரின் சித்தப்பாவும் தனுசனின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.08.2021) திங்கட்கிழமை அன்று பிரான்சில் நடை பெறும்!

visiting address:
95 Rue mareel sembat
93430 Villetaneuse
FRANCE.

தகவல் :
சகோதரி
ஓங்கரகுமரன் சுதர்மதி
ரத்மலானை, கொழும்பு.

# மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 01 . 1953

இறப்பு 07 . 08 . 2021



## இளையதம்பி பாலச்சந்திரன்

(முன்னாள் தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க கிளை முகாமையாளர்)

தெல்[illegible]பழை மேற்கு, வித்தக புரத்தை பிறப்பிடமாகவும் அராலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பாலசந்திரன் நேற்று (07.08.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - [illegible]பிள்ளை தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்ற [illegible] - தாங்கம்மா தம்பதியரின் மருமகனும், அற்புத ராணியின் [illegible] கணவரும், அரபசன் (தொழில்நுட்பக் கல்லூரி [illegible]) சிவை (தொழில்நுட்பக்கல்லூரி 2021 [illegible] லெட்சுமி, பரஞ்சோதி, [illegible] னும், காலஞ்சென்ற [illegible] திரன், புஷ்னேந்திரன், கலயாணதேவி [illegible]

[illegible] இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2021) ஞாயிற்றுக்கிழமை [illegible] மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக [illegible] எடுத்துச்செல்லப்படும்.

[illegible] உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று [illegible]

அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
077 582 1585

# JOB OPPORTUNITIY

**FIELD MANAGER**

We, one of the leading insurance company, are looking for dedicated and hardworking individuals to join us!

**Requirements.**

- You should pass the G.C.E (O/L) and (A/L) examination
- Professional qualification in Sales / Marketing
- Good communication skill
- Minimum of one year experience in this field or any financial field

Candidates with the necessary minimum requirements should kindly forward a comprehensive CV along with the contact details of two - nonrelated referees to

info@lankavacancies.com

# பதவி வெற்றிடம்

**வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உணவுப் பொருள்கள், விநியோக சேவையில், உள்ள நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன**

1. சாரதி (இலகுரக வாகனங்கள்.)
2. Sale Rep.
3. டெலிவரி ஆட்கள் ( பொருள் ஏற்றியிறக்கல்)
4. நிர்வாக / கணக்கு. உத்தியோகத்தர். (பெண்கள் )
5. வெளிக்கள விற்பனை ஊக்குவிப்பு. உத்தியோகத்தர் (பெண்கள்)

விண்ணப்பங்களை
WhatsApp. 077 9495 004 /
E mail. - lavanyajaffna@gmail.com இற்கு அனுப்பி வைக்கவும்
மேலதிக தகவல்களுக்கு job என whats App செய்வதன் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

ஜப்பான் வீடு,
மட்டுவில், சாவகச்சேரி.

# நிர்வாக அலுவலர் தேவை

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திற்கு தமிழ், ஆங்கிலம் மொழித் தேர்ச்சியுள்ள நிர்வாக அலுவலர் தேவை. அரச, தனியார் துறைகளில் கடமை புரிந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக் கலாம். அத்துடன் சிங்களம் பேச அல்லது வாசிக்க தெரிந்திருந்தால் மேலதிக தகைமையாகக் கருதப்படும். பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையுடன் விண்ணப்பங்களை யாழ் வணிகர் கழகம், இல-165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கோ அல்லது Jaffnachamberofcommerce@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். விண்ணப்பங்கள் 15.08.2021 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

# முதலீட்டாளர் தேவை

இலங்கையின் மேல் மாகாணத்திலுள்ள தனிநபர் அழகு சாதனப் பொருட்களும் (Cosmetics) சலவைப் பொருட்களும் (Detergent) தயாரிக்கும் தொழிற்சாலைக்கு முதலீட்டாளர் ஒருவரை எதிர்பார்க்கிறோம்.

**நியந்தனை :** சரிநிகர் பங்கு

**திறந்தவர் :** உள்நாடு / வெளிநாடு வெளிநாட்டில் குடியேறியோர்

**தொடர்புகளுக்கு:** indika@mascline.com
masclineholdings@gmail.com
What App: 094 767 360 893,
094 766647800

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 03 . 1937

மறைவு 06 . 08 . 2021



## திருமதி அன்னலக்ஷ்மி ஈஸ்வரச்சந்திரன்

கொல்லங்கலட்டி தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. அன்னலக்ஷ்மி ஈஸ்வரச்சந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் (06.08.2021) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஈஸ்வரச்சந்திரனின் மனைவியும், தேனுகா சம்சன் ஜெயக்குமாரின் (Dr. கொழும்பு தேசிய வைத்தியசாலை) அன்புத் தாயாரும், சம்சன் ஜெயகுமார் அவர்களின் பாசமிகு மாமியாரும், திருமதி சிவகாமசுந்தரி, திரு. ஞானசேகரம், காலஞ்சென்ற கணேசலிங்கம், திருமதி கிரிசாம்பாள், திரு. சண்முகலிங்கம், திரு. ஸ்ரீனிவாசன், ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அக்ஷயன், [illegible]ஸ்வித்தா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2021) ஞாயிற்றுக் கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைகள் கல்கிசை பொதுமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : தேனுகா சம்சன் ஜெயக்குமார் (மகள்)
077 771 0168

# பால்மாவின் விலை அதிகரிக்கப்படாது!

## அரசு அறிவிப்பு

கொழும்பு, ஓக. 8

பால்மாவின் விலையை அதிகரிப்பதற்கான எந்தத் தேவையும் இல்லை என்று கால்நடை, பண்ணை ஊக்குவிப்பு மற்றும் பால், முட்டைத் தொழில்கள் இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் பால் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறித்தும், அதன் விலைகள் அதிகரிக்கப்படவுள்ளன என்று வெளியாகும் தகவல்கள் குறித்தும் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 'நாட்டின் பால்மா தேவையில் 40 வீதம் மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றது. 60 வீதமான பால்மா வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது.

கால்நடை வளர்ப்பு மற்றும் பால் பாவனையை ஊக்குவிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த 2 3 ஆண்டுகளில் நாடு பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் என எதிர்பார்க்கின்றோம். இந்தநிலையில், நாட்டில் தற்போது பால்மாவின் விலையை அதிகரிப்பதற்கான எந்தத் தேவையும் இல்லை. இது தொடர்பில் நுகர்வோர் அச்சப்படத் தேவையில்லை' என்றார். (ம-22)

# களவுபோன நகை பொலிஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 8

கடந்த 4ஆம் திகதி, வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டு. மேற்கு கண்ணகி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள வீட்டில் இரண்டரைப் பவுண் நகைகள் களவு போயிருந்த நிலையில் அவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், ஏற்கனவே அரைப் பவுண் நகை நேற்றுமுன்தினம் அவரிடம் இருந்து மீட்கப்பட்டது.

ஏனைய நகைகள் நிதி நிறுவனமொன்றில் அடகு வைக்கப்பட்டிருந்த நிலையில் அவையும் குறித்த சந்தேக நபரால் மீட்கப்பட்டு நேற்று பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டது. (ம-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

## வேலையாள் தேவை

மருதனார் மடத்தில் இயங்கும் Phone Shop க்கு ஆண் / பெண் வேலையாள் தேவை

077 115 3412

## சாரதி தேவை

வடமாகாணம் முழுவதும் தங்கி நின்று வாகனம் ஓட்டக்கூடிய சாரதி தேவை.

077 260 1850

## Lovely Flower Cent க்கு வேலையாள்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் கிளைக்கு பெண் வேலையாள்கள் தேவை.

T.P.: 077 400 5023

## வேலை ஆள் தேவை

அரைக்கும் ஆலை ஒன்றிற்கு அனுபவமுள்ள வேலை ஆள் தேவை.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 957 4934

## மணமகள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் (வலிகாமம்) உள்ள ஒரு விவசாயக் கிராமத்தைச் சேர்ந்த 2 அரச சிற்றூழியர்கள் + 1 விவசாயிக்கு (வயது 28-33, யாழ். சைவ கௌரவ குடும்பங்களைச் சேர்ந்த ) ஆகியோருக்கு மணப் பெண்கள் தேடப்படுகிறார்கள். தொழில்சார் கல்யாணத் தரகரும் அனுகலாம்.

தொடர்பு தொலைபேசி & whatsApp 077 510 8800

## வீடு/காணி விலைக்கு தேவை

அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றிற்கு யாழ் நகரப் பகுதியில் - கச்சேரியடி, சுண்டுக்குளி, பண்டியன்தாழ்வு, ஈச்சமோட்டை பகுதிகளில் வீடு, காணி விலைக்குத் தேவை. தொடர்பு: 077 874 7485

## வேலையாட்கள் தேவை

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு 077340 5643

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் வீட்டுவேலைக்கு பணிப்பெண் தேவை.

077 400 5023

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பேக்கரி ஒன்றிற்கு பணிபுரிய விற்பனை உதவியாளர் மற்றும் ஓரளவு அனுபவமிக்க பாண் உற்பத்தியாளர் களைத் தேடுகின்றோம். தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 785 8317

# ஏனையவை

## நாஹா மருத்துவ நிலையம்

கை, கால் செயலிழப்பு, மூட்டுக்கள் தேய்வு, தீராத புண்கள், அல்சர், பாரிசவாதம் முழுமையாக குணப்படல், ஆஸ்மா,

நீரிழிவுக்கு - சிறப்புச் சிகிச்சை

வங்கி முன்லேன், சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி,(ஜெகபதி வீடு) மானிப்பாய். 077 321 2740

## BIOLOGY - CHEMISTRY

வீடு வரல் / இரு மொழிகளிலும்

இரசாயனம் - 10 வருட விளக்கவுரை

Singam 076 056 5786

உயிரியல் - விடை எழுதுவித்தல்

வித்தியா - 077 665 5290

## சேவை

உங்கள் வீடு/காணி விற்பனைக்கு அல்லது வாடகைக்கு வழங்க நினைப்பவர்கள் எம்மை தொடர்புகொள்ளவும்.

RR Estate Agent

077 473 7737, 070 374 4444

## வீடு வாடகைக்குண்டு

யாழ் இந்துக்கல்லூரிக்கு அருகில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.

077 833 6848

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

AAA Gold Center

076 568 4346

## பொது வேலை வாய்ப்பு

வெள்ளவத்தையில் தச்சு வேலை செய்யும் Workshop இல் மிசின் கபேட் வேலை செய்யக்கூடியவர்கள் தங்குமிடம் உண்டு. நிரந்தரமாக வேலை செய்யலாம். தகுந்த சம்பளம் உண்டு.

தொடர்பு 077 728 0988

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. கணக்காளர்
2. கணக்குப்பதிவாளர் } இருபாலாரும்
3. விற்பனைப் பிரதி
4. காவலாளி

077 772 2305

# விற்பனைக்கு

## காணி விற்பனைக்கு

உரும்பிராயில் 12 அடி பாதையுள்ள 2 பரப்பு, 4 பரப்பு காணிகள் அருகருகில் விற்பனைக்குண்டு.

077 522 2533, 077 020 4276

## குளிரூட்டி விற்பனைக்கு

கோழி இறைச்சிக்கடையில் இறைச்சியை காட்சிப்படுத்த கூடிய கண்ணாடி குளிரூட்டி (4அடி) விற்பனைக்கு உண்டு. நன்மை: இதனால் வாடிக்கையாளரின் காத்திருக்கும் நேரம் குறைவடையும்.

T.P.: 076 049 6508

## காணி விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன் சந்திக்கு அருகாமையில் புத்தூர் றோட்டில் 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

0778 715 430, 0768 560 549

## மாபிள் பதித்தல்

உங்கள் வீடுகள் மற்றும் நிறுவனங்களுக்கு நவீன முறையில் மாபிள் வேலை கிரைனைட் வேலைகள், டைனோ்னியம் தரைவேலை மற்றும் சுவர்களுக்கும் செய்து தரப்படும்.

தொடர்பு: 077 329 1745

## பதவிவெற்றிடம்

முதற்தர ஆயுள்காப்புறுதி நிறுவனத்தின் கிளை ஒன்றுக்கு (யாழ். மாவட்டம்), குழு முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* அடிப்படை சம்பளம் - 35,000 /= + தரகு பணம்

குறிப்பு: காப்புறுதி, சந்தைப்படுத்தல், நிர்வாகத்துறை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு: 074 013 7115

(பெயர் முகவரியினை SMS மூலம் அனுப்பிவைக்கவும்)

# வாடகைக்கு

## வீடு வாடகைக்கு

அரியாலை A9 வீதி, TATA கம்பெனிக்கு அருகில்

077 643 0681

## வீடு வாடகைக்கு

சாங்கானையில் இருவர் வசிப்பதற்கு ஏற்ற வீடு வாடகைக்குண்டு. அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.

மாதவாடகை - 4000/- முற்பணம் 50000/-

021 225 0421, 076 284 4840

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் வீரசைவம் 1988ல் பிறந்த அவிட்டம் கும்பராசியுடைய தனியார் நிறுவனத்தில் தொழில் புரியும் மண மகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு : 076 533 9304

## வேலையாட்கள் தேவை

கட்டட வேலை, தோட்ட வேலை (நாள்க் கூலி) த்ங்கி நின்று செய்வதற்கு வேலையாட்கள் தேவை. நிரந்தர வேலையாக மாதச் சம்பள அடிப்படையில் கொடுக்கப்படும்.

வயது எல்லை 30-50 விரும்பத்தக்கது.

தொடர்பு : 0768 573 798

## வீட்டுப் பணிப்பெண் தேவை

கோண்டாவில் கிழக்கில் உள்ள வீடொன்றில் 4 வயது குழந்தையை பராமரிப்பதற்கும் வீட்டு வேலை செய்வதற்கும் வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

076 135 9301, 076 757 6704

# தொடர்ந்தும் ஏமாற்றப்படும் ஆண்டாங்குளத்தின் மக்கள்

முல்லைத்தீவு, ஒக. 8

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் ஆண்டாங்குளம் பகுதியில் மீள்குடியேற்றம் மற்றும் நித்தகை குளத்தின் கீழ் உள்ள வயல் நிலம் வழங்குதல்போன்ற நடவடிக்கைகளில் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் அசமந்த போக்குடன் செயற்படுகின்றனர் என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

1984 ஆம் ஆண்டில் ஆண்டாங்குளத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர்.

இதே ஆண்டில் நித்தகை குளத்தின் கீழான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் விவசாயிகள் ஈடுபட முடியாத நிலைமை ஏற்பட்டது.

தற்போது 37 ஆண்டுகள் கழிந்தும் ஆண்டாங்குளத்துக்கு மக்கள் மீளத்திரும்புவதோ நித்தகைகுளத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ முடியாத காரியமாக காணப்படுகின்றது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகக் கூட்டங்களில் இது தொடர்பாக பல தடவைகள் ஆராயப்பட்டபோதிலும் நில அளவைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட நில அளவையின் அறிக்கை கிடைக்கவில்லை என்று பிரதேச செயலக அதிகாரிகள் கூறுகின்றனர்.

இறுதியாக நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் சுற்றாடல் சூழல் அறிக்கை கிடைத்தவுடன் நித்தகை குளத்தின் கீழான வயல் நிலங்கள் விடுவிக்கப்படும் என வனவளத் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டது.

இருந்தும் இதுவரை நித்தகை குள வயல் நில விடுவிப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளில் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர். -என்றனர். (ஐ-13)



# சௌபாக்கியா உற்பத்தி கிராமம் கரும்புள்ளியானில் ஆரம்பம்

மன்னார், ஒக. 8

முல்லைத்தீவு மாந்தை கிழக்கின் கரும்புள்ளியான் கிராம அலுவலர் பிரிவில் சௌபாக்கியா உற்பத்தி கிராமம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

நிகழ்வில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ந. ரஞ்சனா மற்றும் உதவி திட்டமிடல் பணிப்பாளர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், சௌபாக்கிய நிர்வாகத்தினர் மற்றும் பயனாளிகளும் கலந்துகொண்டனர். (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திரு. சிற்றம்பலம் லோகநாதன்

மாகியபிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் லோகநாதன் அவர்கள் (07.08 .2021) அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - அருந்தவமலர் அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பாக்கியம் அவர்களின் பாசமிகு மருமகனும் சிவமலர் (மலர்) அவர்களின் அன்புக் கணவரும் பத்மநாதன் (கனடா), புஷ்பநாதன் (சுவிஸ்), சிவநாதன் (கனடா) காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் சாரதா (பிரான்ஸ்), உஷா (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு சகோதரரும் இராசரத்தினம் பாமதேவன் (கனடா), கங்காதேவி, யோகேஸ்வரன் மற்றும் காலஞ் சென்றவர்களான வாமதேவன், பாலதேவன், மனோகரன், சிறி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சண்டிலிப்பாய் வடக்கு,
மாகியப்பிட்டி.

தகவல் :
மனைவி
077 3102 186

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 03 . 1969

மறைவு 07 . 08 . 2021

### திரு. இராசரத்தினம் சிவகுமார்

( விஸ்வப் பிரம்ம ஸ்ரீ சிற்பாச்சாரியார் )

யாழ் திருநெல்வேலி பத்திரகாளி கோயிலடியை பிறப்பிடமாகவும் வ்சிப் பிடமாகவும் கொண்ட திரு. இராசரத்தினம் சிவகுமார் 07.08.2021 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் இராசரத்தினம் - நாகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும் தங்கராசா - விஜயராணி தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜயதர்ஷினியின் அன்புக் கணவரும் கஸ்தூரி, லக்சன் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் சிவசங்கர் (ஜேர்மனி), சிவரஞ்சனி (கொழும்பு), சிவனேசன், மதுசன் (சிற்பாலயம் - திருநெல்வேலி), சிவமாலினி, சிவநந்தினி, சிவறாஜினி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சசிகலா (பிரான்ஸ்) அகல்யா (கனடா), ஆரணி (முகாமைத்துவ உதவியாளர் கல்வி தாபனக் கிளை யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரது இறுதிக்கிரியைகள் 08.08.2021 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று திருநெல்வேலி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்

இந்த அறவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 4741 933

## மரண அறிவித்தல்



மண்ணில் 11 . 03 . 1932

விண்ணில் 06 . 08 . 2021

### திருமதி நவமலர் கதிரமலைநாதன்

(ஓய்வு பெற்ற ஆசிரியை விவேகானந்த வித்தியாலயம், அநுராதபுரம் மற்றும் ஸ்ரீ முருகன் வித்தியாலயம், சுன்னாகம்

சூறாவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி நவமலர் கதிரமலைநாதன் 06.08.2021, வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்ற திரு. இளயதம்பி கதிரமலைநாதன் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர்), யாழ்ப்பாணம் & அநுராதபுரம் செயலகம்), அவர் களின் அன்பு மனைவியும், திருமதி அருந்ததி (சுவீடன்), திருமதி நளினி (இந்தியா) மற்றும் திரு. முரளிதரன் (நோர்வே) அவர்களின் பாசமிகு தாயும், திரு புவனேஸ்வரலிங்கம், திரு. மோகன்ராம் மற்றும் திருமதி பெனடிக்டா ஆகியோரின் மாமியாரும், சரண்நாத், சோபிதா, பியோணா, ஆலிவர் மற்றும் லியோணா அவர்களின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.08.2021) சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 08 . 1939

மறைவு 03 . 08 . 2021

### திரு. கதிரவேலு அப்பாக்குட்டி இலங்கைநேசன்

தாவடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு - 03, கொள்ளுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த **திரு. கதிரவேலு அப்பாக்குட்டி இலங்கை நேசன்** அவர்கள் (2021.08.03) செவ்வாய்க்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு அப்பாக்குட்டி, பார்வதிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்ற சின்னய்யா, நாகம்மா ஆகியோரின் மருமகனும் கலைமகள் அவர்களின் அன்புக்கணவரும் கலைநேசன், அருள்நேசன், ஜெயநேசன், பூநேசன், ஸ்ரீதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அகிலா, தர்ஷினி, ஜலானி ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இலங்கைநாதனின் பாசமிகு சகோதரரும் யஷ்வன், கஜன், செந்தூரன், கோகுலன் , ஜனனி, ஜெசிக்கா ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஜெயரட்ண மலர்ச்சாலை ரெஸ்பெக்ட் இல் (இல.483, பௌத்தாலோக மாவத்தை , கொழும்பு - 8) 08.08.2021 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 07.30 மணி முதல் 11 மணி வரை வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனத்திற்காக பூதவுடல் பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கோட்டுக்கொள்கின்றோம்.

கலைமகள் - +9411 257 3573 ( மனைவி )
கலைநேசன் - +1301 408 9813 ( மகன் )
அருள்நேசன் - +1416 697 9359 ( மகன் )
ஜெயநேசன் - +9477 843 7001 ( மகன் )
பூநேசன் - +9477 775 6448 ( மகன் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரிட்டன்...

வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதிலேயே இந்தத் தகவல் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவால் வெளிப்படுத்தப்பட்டது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் உள்ள மக்களுக்கு அவர்களின் சொந்தக் காணிகளை மீள வழங்குவது உள்ளிட்ட மனிதாபிமான நடவடிக்கைகள் முடிந்தளவு முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும், இவை தொடர்பில் சர்வதேச சமூகத்தைத் தெளிவுபடுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கும் அபிவிருத்திச் செயற்பாடுகள், காணி விடுவிப்புகள் தொடர்பில் கடந்த ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கையின் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. உயர் நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையில் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டு அதன் ஊடாக சாட்சிகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இதன் இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அதில் அவசியமான காரணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதே காரணிகளை ஜெனிவாக் கூட்டத் தொடருக்கு முன்னர் இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதுவருக்குத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது' எனவும் அந்தக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன மேலும் தெரிவித்தார். (ம-22)

## கொரோனா...

தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 27 ஆயிரத்து 19ஆக எகிறியுள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 487 பேர் குணமடைந்து சிகிச்சை நிலையங்களிலிருந்து நேற்று வெளியேறியுள்ளனர்.

இதையடுத்து நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 90 ஆயிரத்து 794ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-22)

## யாழ்ப்பாணத்தில்...

ழந்துள்ளனர். அவர்களில் மூவர் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் சுழிபுரத்தைச் சேர்ந்தவர். கரவெட்டியைச் சேர்ந்த 73 வயதுடைய ஆண் ஒருவர் நேற்று மாலை உயிரிழந்தார். அவர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டிருந்தவர்.

பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த 54 வயதுடைய ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளார். இரண்டு நாள்களாக வயிற்றோட்டம் காரணமாக அவதிப்பட்டுவந்த அவர் நேற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்துள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 68 வயதுடைய ஆண் ஒருவர் வீட்டில் உயிரிழந்த நிலையில் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவரது அயல் வீட்டில் கொரோனா தொற்றாளர்கள் உள்ள நிலையில், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சுழிபுரத்தைச் சேர்ந்த 78 வயதுடைய நபர் ஒருவரும் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, மந்திகை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள இரண்டு சடலங்களின் பி.சி.ஆர் அறிக்கை எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் பருத்தித்துறை மேற்கைச் சேர்ந்த 91 வயதுடைய பெண். அவரின் அயல் வீட்டில் உள்ளவர்கள் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மற்றையவர், பருத்தித்துறை பேருந்து நடத்துனரான 58 வயதுடைய ஆண் ஒருவர். அவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். (ம26)

## 5000.....

நேற்றுமுன்தினமும் 98 பேர் கொரோனாவால் உயிரிழந்ததை அடுத்தே கொரோனா பலிகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தாண்டியது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 98 பேரில் 47 ஆண்களும், 51 பெண்களும் அடங்குகின்றனர்.

தற்போதுவரை இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 17ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

## விபத்தில்...

இளைஞன் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார். விசுவமடு மாணிக்கபுரத்தைச் சேர்ந்த 19 வயதுடைய சசிக்குமார் தனோஜிகன் என்ற இளைஞனே உந்துருளியில் பயணித்த போது வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானார். இதையடுத்து காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் அவர் நேற்று உயிரிழந்தார். (ம-19)

## வேகமெடுக்கிறது...

கும் என்று அரச தகவல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அரச தகவல் திணைக்களத்தால் விடுக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

உலகில் பல நாடுகளில் உள்ளதைப் போன்று இலங்கையிலும் டெல்டா தொற்று தீவிரமாகி வருகின்றது. இந்தத் தொற்றுக்கு ஆட்படாமல் இருக்க அனைத்து மக்களும் முதலில் கொவிட் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அத்தியாவசிய தேவைக்காக அல்லாமல் வீட்டில் இருந்து வெளியே செல்ல வேண்டாம்.

மக்கள் அதிகம் ஒன்றுகூடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

தவிர்க்க முடியாத காரணத்துக்காக வெளியே செல்லும்போது கட்டாயம் முகக் கவசங்களை அணியுங்கள். இரு மீற்றர் சமூக இடைவெளியைக் கடைப்பிடியுங்கள். நாள்பட்ட நோய்கள் இருப்பின் வீட்டை விட்டு வெளியே செல்வதை முழுமையாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள் -என்றுள்ளது. (ம)

## வழிப்பறியில்...

மூன்று மாதங்களாக வழிப்பறியில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவர்களால் கொள்ளையடிக்கப்பட்ட பல பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் அலுவலர் ஒருவரிடம் தொலைபேசி, 50 ஆயிரம் ரூபா பணம், கைப்பை உள்ளிட்டவற்றைக் கொள்ளையிட்டமை, பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றும் ஒருவரின் அலைபேசியை கொள்ளையிட்டமை, சுன்னாகத்தில் ஆசிரியர் ஒருவரின் கைப்பை, இரண்டு அலைபேசிகள் மற்றும் 30 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையிட்டமை, மானிப்பாயில் நபரொருவரின் கைப்பையைக் கொள்ளையிட்டமை என்பன சந்தேக நபர்கள் மீது சுமத்தப்பட்ட முக்கிய குற்றச்சாட்டுக்களாக உள்ளன. அவர்களால் கொள்ளையிடப்பட்டதாகச் சொல்லப்படும் பொருள்களில் சில மீட்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் போதைக்கு அடிமையானவர்கள் என்றும், போதைப் பாவனைக்காக பணம் தேவைப்பட்டதால் இதுபோன்ற கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர் என்றும் பொலிஸார் தமது முதல் கட்ட விசாரணையின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். (ம-26,20)

## யாழில்...

கோரியும், கொத்தலாவல சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அரச அடக்குமுறைகளுக்கு எதிராகவும், இலவச கல்வியில் ஏற்படும் நெருக்கடிகளுக்கு தீர்வை வலியுறுத்தியும் ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் நாளை வாகனப் பேரணியையும் போராட்டத்தையும் நடத்தவுள்ளனர். இலங்கை ஆசிரியர் சங்கம், வடமாகாண புதிய அதிபர் சங்கம், வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கம் ஆகியன இணைந்து இந்தப் பேரணியை நடத்தவுள்ளன.

யாழ். வீரசிங்கம் மண்டபம் முன்பாக ஆரம்பித்து மாவட்ட செயலகம் வரை இந்தப் பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது. (ம)

## உடலில்...

சென்று பெண்கள் இருக்கும் வீடுகளுக்குள் புகுந்து தகாத முறையில் நடக்க முயல்கின்றனர் என்று பொலிஸில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. வன்னிப் பொலிஸ்மா அதிபரிடம் இந்த முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. அந்த முறைப்பாட்டில், வவுனியா மதவுவைத்தகுளம் பிரதேசத்தில் கடந்த இரண்டு வாரங்களாக அடையாளம் காணாத வகையில் உடம்பு முழுவதும் நிறப்பூச்சுக்களைச் பூசிக்கொண்டு நிர்வாணமாக சிலர் நடமாடித் திரிகின்றனர்.

அவர்கள் பெண்கள் தனியாக இருக்கும் வீடுகளை இலக்கு வைத்தும், குடும்பத்தலைவர் வீட்டில் இல்லாத நேரங்களில் தனிமையில் இருக்கும் பெண்களிடமும் தகாத முறையில் நடந்துகொள்ள முற்படுகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-110)

## உங்கள்....

ளாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் சிறையில் இருக்கும் ஏனையோரையும் விடுவிக்கக் கூடியதாக இருக்கும் இவ்வாறு முன்னாள் போராளிகளிடம் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேரில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற முன்னாள் போராளிகளுக்கு உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நீண்டகாலமாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த நீங்கள் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் அண்மையில் விடுதலையாகி சமூகத்தில் இணைந்துள்ளீர்கள். நீங்கள் சமூகத்தில் நல்லவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் சிறையில் இருக்கும் ஏனையோரையும் விடுவிக்கக் கூடியதாக இருக்கும். உங்கள் விடுதலையைப் பற்றிப் பார்க்கின்றார்கள் - அவதானிக்கிறார்கள். எனவே, நீங்கள் சமூகத்தில் நல்லவர்களாகச் செயற்பட வேண்டும். அதாவது முன்னரைப்போல் பிழையான வழிகளில் செல்லாது சரியான பாதை நோக்கிச் செல்லுங்கள். பழையவற்றை மறந்து நல்லதைச் சிந்தித்து சமூகத்தில் உள்ளோர் உங்களை நல்லவர்கள் என்று சொல்லும் அளவுக்கு உங்களது வாழ்க்கையைக் கொண்டு செல்லுங்கள். நீங்கள் எமக்கு எதிராகத்தான் சண்டையிட்டீர்கள். அதையெல்லாம் மறந்து இராணுவத்தினர் ஆகிய நாம் உங்களுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கின்றோம். வீடு கட்டித் தருவது என்றாலும் சரி, வேறு ஏதாவது உதவி என்றாலும் சரி நாங்கள் அதைச் செய்யத் தயாராக உள்ளோம். ஏனென்றால் அது எமது கடமையாகும்- என்றார். (ம-22)

## இரண்டு இந்து...

பட்டன. அடுத்த 14 நாள்களுக்கு வழிபாடுகள் அனைத்தும் அங்கு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொலிஸார் இணைந்து இந்த நடவடிக்கையை நேற்றுப் பிற்பகல் முன்னெடுத்தனர். பருத்தித்துறை சுப்பர்மடம் முனியப்பர் ஆலயம், பருத்தித்துறை சிவன் ஆலயம் என்பனவே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட ஆலயங்களாகும்.

பருத்தித்துறை முனியப்பர் ஆலயத்தில் நேற்று இரதோற்சவம் இடம்பெற்றது. அதிகளவான பக்தர்கள் பங்கேற்றமை மற்றும் அவர்கள் முகக்கவசம் அணியாமை, உரிய சுகாதார நடவடிக்கைகளை பின்பற்றாமை குறித்து ஒளிப்படங்களுடன் சுகாதார மருத்துவ அதிகாரிக்கு முறைப்பாடு வழங்கப்பட்டது. இதையடுத்தே அந்த ஆலயம் எதிர்வரும் 21ஆம் திகதிவரை தனிமைப்படுத்தப்பட்டதுடன் வழிபாடுகள் மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. அதேபோன்று பருத்தித்துறை சிவன் ஆலயத்திலும் சுகாதார நடைமுறைகளை மீறி வெளிவீதியில் திருவிழாவை நடத்தியதால் அந்த ஆலய வழிபாடுகளும் வரும் 21ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டது. அத்துடன், ஆலய நிர்வாகிகளும் வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் வேலைவாய்ப்பு

தற்கால சூழ்நிலைக்கு ஏற்ப எம்மிடம் வங்கி உத்தியோகத்தர் உட்பட பல வகையான வேலைவாய்ப்புகள் உள்ளன. முந்தும் 18 பேருக்கு முன்னுரிமை உடன் தொடர்புகொள்ளவும்

T.P.: 077 031 8126

## பணிப் பெண் தேவை

2½ வயதும், 7 மாதம் நிரம்பிய இரு குழந்தைகளை மட்டும் பராமரிப்பதற்கு யாழ்நகரில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய 35 - 50 வயதிற்குட்பட்ட வேலையாள் தேவை.

சம்பளம் : 35000/-

075 498 5400, 077 937 0000

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வர்த்த நிலையத்திற்கு Computer Billing செய்வதற்கு பகுதிநேர (4.pm-9.pm) வேலையாள்கள் தேவை. யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 419 5015

## Individual English Classess

Spoken with Grammar ஆண்டு 7 தொடக்கம் GCE OL,AL பட்டதாரிகள் தொழில் புரிபவர் English Medium, Edexcel and Cambridge யாழ்நகரில்

077 766 8725

## மேசன் வேலையாட்கள் தேவை

யாழ். மாவட்டத்தில் கட்டுமானத்துறையில் வேலை செய்வதற்கு மேசன், கூலியாட்கள் கம்பிவேலை, தச்சு வேலை செய்பவர்களும் தேவை.

சம்பளம் : மேசன் - 2000 + மதிய உணவு
கூலி - 1500 + மதிய உணவு
வேலை நேரம் : 8.30 a.m - 5.30 p.m
சம்பளம் நிபந்தனைக்கு உட்பட்டது.

தொடர்புகளுக்கு :

077 2012 429

## 6ஆம் மாத நீங்காத நினைவுகளுடன்...



அமரர் பரமேஸ்வரி தனபாலன்

மலர்வு 11.04.1945 — உதிர்வு 08.02.2021

ஆறுமாதம் ஆனதம்மா இன்று!
ஆற முடியவில்லை எம் துயரம்
உமைப் பிரிந்து பல நாள்
ஊனுறக்கம் மறந்தோம்!
அழுதழுது தேடுதம்மா எம் விழிகள்
ஒரு முறை வருவீர்களோ!
உங்கள் திருமுகம் காண்பதற்கு
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்...
மகன், மகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
077 768 6713
நாச்சிமார் கோயிலடி, சரவணை.

## சிறுநீரகம் தேவை

சீறுநீரகம் பாதிக்கப்பட்ட 25 வயதுடைய ஒருவருக்கு A or O குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை.

T.P.: 077 006 6599

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள புடைவை பான்சி விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண், இருபாலாரும் தேவை. அத்துடன் கணினி அறிவுடையவர்களும் தேவை.

தொடர்பு 077 117 4954

## ONE BED ROOM APPARTMENT FOR RENTAL

சகல வசதிகளையும் கொண்ட வெளி நாட்டு நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உடன் உண்டு

( நாவலர் வீதி TCTயிற்கு மிக அண்மையில் )

CONTACT : 077 6625 666

## விற்பனைக்கு

179 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள ஒரு தொகுதியாக இருக்கும் மூன்று கடைகளையும் விற்பனை செய்யவுள்ளோம் விலை பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு 071 664 7692, 076 565 6534

## வேலையாள் தேவை

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு பெண் வேலையாள் தேவை.

Online JOP Available

Jaffna EGG Center, Jaffna.
077 851 1265, 077 628 8718

## தேவை

நல்லூரில் அமைந்துள்ள காட்சியறை ஒன்றுக்கு விற்பனை செய்யக்கூடிய ஆண் ஒருவர் தேவை.

T.P.: 076 826 7703

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் IELTS, A1, UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranted to 7.5 in IELTS EXAM
- Pass in UK A1 Exam
- Exam Registration Center

வகுப்புக்கள் குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்

OXFORD ENGLISH ACADEMY,JAFFNA TOWN
T.P.: 077 780 3970, 074 007 1970

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமன் பகுதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 1 ½ பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் தெல்லிப்பளை வைத்தியசாலை பின்புறத்திலிருந்து 400m தூரம் (பார்வையிடும் நேரம் - காலை 8.00 - மாலை 6.00 மணி வரை) தரகர் தேவையில்லை.

**1 ½ பரப்பின் விலை 10 00000 (பத்து லட்சம்)**

077 814 7389 / 077 614 7333

## பணிப் பெண் தேவை

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு சமையல் மற்றும் வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பெண் ஒருவர் தேவை.

077 734 7578 / 077 778 0359

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 28 . 02 . 1935

இறைவன் அடியில் 31 . 07 . 2019



அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் செல்லத்துரை கணபதிப்பிள்ளை

( முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம் )

திதி : ஆடி அமாவாசை

அன்புள்ள அப்பா ....

நீங்கள் எங்களுக்கு முன்மாதிரியாக வாழ்ந்து வழி காட்டினீர்கள்...

நீங்கள் காட்டிய பாதையில் நாம் செல்கிறோம்.

உங்கள் ஆத்மா அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் பாதங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

"செந்தில்"
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

மண்ணில் 16 . 07 . 1951

விண்ணில் 05 . 08 . 2021



### ஞானச்சந்திரன் சிவனேசமலர்

(தங்கம் அக்கா)

யாழ். ஊரெழு வடக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஞானச்சந்திரன் சிவனேசமலர் (தங்கம் அக்கா) அவர்கள் 05-08-2021 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பாக்கியம் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி செல்லத்துரை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஞானச்சந்திரன் (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும்,ஆர்த்திகா (HNDBS & Diploma In Nursing - இலங்கை, பிரித்தானியா), கிரியங்கா (BA- இலங்கை, பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,குகபாலன்(பிரித்தானியா), மகிரதன் (பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், கவிசன், ஆருசன், கிரிஷ்சிவன் ஆகியோரின் அருமை அம்மம்மாவும், சிவயோகமலர், கிருஸ்ணமூர்த்தி, சிவலிங்கநாதன், றங்க நாதன், ஶ்ரீதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் அரியமலர், காலஞ்சென்ற கொங்காதேவி, மற்றும் மீனா, பவானி ஆகியோரின அன்பு மைத்துனியும்,தமயந்தி, சுமதி, பார்த்தீபன், ஜெயந்தி, சாந்தி ஆகியோரின் பாசமிகு அன்ராவும், அகிலன், கோகிலன், அகல்யா, பிரசாத், வினோத், பாரத், தர்சி, ஜெயதீபா, ஜெயதர்சன், நிசந்திகா ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08-08-2021) ஞாயிற்றுக்கிழமை மு.ப 09.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை அவரது இல்லத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் பி.ப 01.00 மணிமுதல் பி.ப 03.00 மணிவரை இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் பி.ப 03.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். சுகாதார பிரிவினரின் வழிகாட்டலுக்கு அமைவாக இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

ஊரெழு வடக்கு,
சுன்னாகம்,
7ம் கட்டை, புத்தூர் வீதி,
யாழ்ப்பாணம்.

பாரத் - பெறாமகன் : + 94771598912
ஆர்த்திகா - மகள் :+447447101200
கிரியங்கா - மகள் : +447466675086
றங்கநாதன் (சந்திரன்) - சகோதரர் : +14166180605



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08. 08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி

Registered as a Newspaper

பக்கங்கள்: 16


போட்டனர் போக்குவரத்து தடை
பொதுசனம் போய்வந்தனரதன் இடை
மாட்டாமல் வந்ததாகப்பின்
மார்தட்டினோர் வாசலில்
போட்டது கொரோனாதன் கடை!

*காரைக்கவி கந்தையா பத்மானந்தன்*


மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2052 ஆடி 23 ஞாயிற்றுக்கிழமை (08.08.2021) சிகரம் : 59




# "மக்களை மனிதக்கேடயமாக புலிகள் ஒருபோதும் பயன்படுத்தியதில்லை!"

## போர்க்கைதி போலவே அரசாங்கம் எம்மை நடத்தியது

## இறுதிப்போரில் நடந்ததை சொல்லும் பொய்யாவிளக்கு திரைப்படம்

நேர்காணல்: ஔண்யன்

இறுதிப்போரில் இறுதிக்கணம் வரை முள்ளிவாய்க்காலில் மக்களுக்காக சேவையாற்றியவர்களுள் மருத்துவர் வரதராஜன் முக்கியமானவர். தற்போது புலம்பெயர்ந்து, அமெரிக்காவில் வசித்து வரும் அவர், இறுதிப்போரில் நடைபெற்ற பல அவலங்களை, உண்மைச் சம்பவங்களை 'பொய்யாவிளக்கு' என்ற திரைப்படம் ஊடாக வெளிக்கொணர்ந்துள்ளார். படத்தில் கதையின் நாயகனும் இவரே. இறுதிப்போர் அனுபவங்கள் தொடர்பிலும், பொய்யாவிளக்கு திரைப்படம் தொடர்பாகவும் உதயன் - சஞ்சீவி வாசகர்களுக்காக அவர் வழங்கிய செவ்வி இது

**கே:** இறுதிப்போர் நடைபெற்றபோது, முள்ளிவாய்க்காலில் கடைசி நாள் வரை மருத்துவப்பணியில் ஈடுபட்ட ஒருசிலரில் நீங்கள் முக்கியமானவர். போரின் வலி சுமந்த நாள்களின் கடைசிக் கணங்களில் அதிலிருந்து மீண்டமை பற்றி?

**ப:** 2006 ஆம் ஆண்டு எனது மருத்துவப் பயிற்சியை நிறைவுசெய்து அம்பாறை மாவட்டத்தில் நோய்த் தடுப்புப் பிரிவில் முதலில் வேலை செய்து கொண்டிருந்த காலத்தில் மூதூர், சம்பூர் , வாகரை, ஈச்சிலம்பற்று போன்ற பகுதிகளில் போர் மூண்டிருந்தது. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அந்தப் பகுதியில் ஒரே ஒரு அரசாங்க மருத்துவமனை மட்டுமே இருந்தது. அது ஈச்சிலம்பற்று மருத்துவமனை. அந்த மருத்துவமனையில் நிரந்தரமாக ஒரு மருத்துவர் இல்லாத காரணத்தால் போரால் காயமடைந்தவர்களும் ஏனைய நோயாளர்களும் மிகவும் சிரமத்துக்குள்ளாகின்றனர் என்பதை

08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

○ நிலாந்தன்

## 13 ஆவது திருத்தத்தில் இருந்து

# இரண்டாவது வட்டுக்கோட்டை தீர்மானத்துக்கு?

இரண்டாம் வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்ற தலைப்பில் ஒரு மெய்நிகர் மாநாடு கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது. இரண்டாம் வட்டுக்கோட்டை தீர்மானக்குழு என்ற அமைப்பைச் சேர்ந்த கவிஞர் காசிஆனந்தன் அதன் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவர். "ஈழத்தமிழர் புவிசார் அரசியலில் இந்திய அரசின் உடனடித் தலையீடு காலத்தின் கட்டாயம்" என்பதே அந்த மாநாட்டின் பேசுபொருளாகும்.

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான ஈழ ஆதரவுப் பிரமுகர்கள் இதில் பங்கேற்றுப் பேசியிருக்கிறார்கள். நாம் தமிழர் கட்சியும் கொங்கிரஸ் கட்சியும் இதில் பங்கேற்கவில்லை. தாயகத்திலுள்ள தமிழ்த்தேசியநிலைப்பாட்டைக் கொண்ட 3 கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. எனினும் மூன்று கட்சிகளும் இந்த மாநாட்டில் உத்தியோகபூர்வமாகப் பங்கேற்கவில்லை. தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி இதில் உத்தியோகபூர்வமாக பங்கேற்கவில்லை என்று கூறப்பட்டாலும் அந்தக் கட்சியின் தலைவராகிய விக்னேஸ்வரனின் கடிதம் ஒன்று அங்கே வாசிக்கப்பட்டிருக்கிறது. விக்னேஸ்வரனின் கூட்டணியைச் சேர்ந்த சிவாஜிலிங்கமும் அனந்தியும் அதில் பங்குபற்றியிருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மாவை சேனாதிராசா அதில் பார்வையாளராகப் பங்குபற்றினார். ஆனால் பேசவில்லை.



வட்டுக்கோட்டைத் தீர்மானம் எனப்படுவது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்துபோவதை நியாயப்படுத்துகிறது என்பதால் அது பிரிவினையை ஆதரிக்கும் ஒரு தீர்மாணமாகவே பொதுவாக வியாக்கியாணம் செய்யப்படுகிறது. எனவே ஆறாவது திருத்தச்சட்டம் இருக்கத்தக்கதாக பிரிவினையை முன்மொழியும் ஒரு தீர்மா னத்தின் பெயரிலான மாநாட்டில் பங்குபற்றுவது என்பது நாட்டில் இருக்கும் கட்சிகளுக்கு பாதுகாப்பற்ற நிலைமைகளை ஏற்படுத்தலாம் என்ற காரணத்தினால் தமிழரசுக்கட்சி பங்குபற்றவில்லை என்று கூறப்படுகிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் ஆனால் நிறைவேற்றப்படவிருந்த தீர்மானம் தமக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை என்பதனால் அதில் பங்கேற்கவில்லை என்றும் கூறுகிறார். எனினும் அவர் வழங்கிய பேட்டியில் ஓரிடத்தில் 6 ஆவது திருத்தத்தை குறித்தும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

மாநாட்டில் பேசிய பெரும்பாலான தமிழகப் பிரமுகர்கள் ஈழத்தமிழர்களுக்கு ஆபத்து என்றால் குரல் கொடுப்பவர்கள். எனவே இந்த மாநாட்டுக்கு அவர்களுடைய அங்கீகாரம் உண்டு. இது முதலாவது. இரண்டாவது ,இந்த மாநாட்டில் பாரதிய ஜனதா கட்சியின் தேசியமட்ட பிரமுகரான வானதி ஸ்ரீனிவாசன் கலந்துகொள்கிறேன் என ஒப்புதல் அளித்திருந்தார். எனினும் பயணத் தாமதம் காரணமாக அவரால் பங்கேற்க முடியவில்லை என்று கூறப்படுகிறது. அது ஒரு மெய் நிகர் மாநாடு. எனவே எங்கிருந்தாலும் இணையத்தின் மூலம் அதில் பங்குபற்றியிருந்திருக்கலாம். எனினும் திருமதி வானதி உத்தியோகபூர்வமாக அதில் பங்குபற்றுவதற்கு சம்மதம் தெரிவித்திருந்தார். இது எதைக் காட்டுகிறது? இந்த மாநாட்டுக்கு இந்திய ஆளுங்கட்சியின் அனுசரணை அல்லது ஆசீர்வாதம் உண்டு என்பதைத்தான்.

இந்த இரண்டு விளக்கங்களின் பின்னணியிலும் இந்த மாநாட்டை இனிப் பார்க்கலாம். இந்த மாநாட்டை ஒழுங்குபடுத்தியவர்கள் எதற்காக வட்டுக்கோட்டை தீர்மானத்தை கையில் எடுத்தார்களோ தெரியவில்லை. அவர்கள்தான் பதில் சொல்லவேண்டும். அதை ஒரு குறியீட்டுப் பெயராகப் பயன்படுத்தினார்களா என்பதையும் தெளிவுபடுத்தவேண்டும். ஆனால் வட்டுக்கோட்டைத் தீர்மானம் எனப்படுவது அதை நிறைவேற்றிய கட்சியாலேயே கைவிடப்பட்ட ஒரு தீர்மானம். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய கட்சி அதன் பின் மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றுக்கொண்டு தனது தீர்மானத்திலிருந்து தானே பின்வாங்கிவிட்டது. அதன்பின் 2009 இல் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த கையோடு ஐரோப்பாவில் சில செயற்பாட்டாளர்கள் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீதான மறுவாக்கெடுப்பு ஒன்றை புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் நடத்தினார்கள். இது வட்டுக்கோட்டைத் தீர்மானம் தொடர்பான இரண்டாவது எத்தனம். கடந்த வாரம் தமிழகத்தில் இடம்பெற்றது மூன்றாவது எத்தனம்.

மூன்றாவது எத்தனத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் உண்டு. முதலாவது, அது வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் நீட்சியாக காட்டப்படுவது. இரண்டாவது, இந்தியா ஈழத்தமிழர்கள் பொறுத்து இலங்கைத் தீவில் தலையிடவேண்டும் என்று கூறுவது. இந்த இடத்தில் ஒரு முக்கிய கேள்வியைக் கேட்கவேண்டும்.

இந்தியா ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் ஏற்கனவே தலையிட்டுக் கொண்டுதானே இருக்கிறது? இந்திய- இலங்கை உடன்படிக்கை காலாவதியாகிவிட்டதோ இல்லையோ அதன் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தைத்தான் இனப்பிரச்சினைக்கு தீர்வாக இந்தியா முன்னிறுத்தி வருகிறது. அதை ஜெனிவாத் தீர்மானத்திலும் நிறைவேற்றியிருக்கிறது. இந்தநிலையில் 13 ஆவது திருத்தத்தை வலியுறுத்தும் இந்தியாவில் அதன் ஆளும்கட்சியின் மறைமுக அனுசரணையோடு ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு மெய்நிகர் மாநாடு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான ஒரு தீர்வைப் பெற்றுத்தருவதற்கு இந்தியா தலையிட வேண்டும் என்று கேட்கிறது?

இந்திய ஆளுங்கட்சியின் மறைமுக ஆசீர்வாதத்தோடுதான் இந்த மாநாடு கூட்டப்பட்டது என்ற எடுகோளின் அடிப்படையில் கேட்டால் இந்தக்கருத்தரங்கின் மூலம் இந்தியா ஈழத் தமிழர்களுக்கும் கொழும்புக்கும் காட்ட முயலும் சமிக்ஞைகள் எவை?

கொழும்பைப் பொறுத்தவரை இது அச்சுறுத்தலானது. இது ஓர் அரசியல் மாநாடு என்பதைவிடவும் ஒரு ராஜதந்திர ரீதியிலான அழுத்தப் பிரயோக உத்தி என்பதே பொருத்தமானதாகும். சீனாவை நோக்கிச் செல்லும் கொழும்பில் உள்ள அரசாங்கத்துக்கு இந்தியா சில சமிக்ஞைகளை காட்ட விளைகிறது. ராஜபக்சக்களின் அரசாங்கம் அந்த சமிக்ஞைகளை எப்படி எதிர்கொள்ளும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

அதேசமயம் தமிழர்கள் தங்களை நோக்கி காட்டப்படும் சமிக்ஞைகளை எப்படி விளங்கிக் கொள்வது? இந்த மாநாட்டுத் தீர்மானம் ஈழத்தில் உள்ள தமிழ் கட்சிகளையும் இணைத்து நிறைவேற்றப்பட்ட ஒன்று என்று கூறப்படுகிறது. ஆனால் அவ்வாறு மூன்று கட்சிகளும் அந்த தீர்மானத்தில் பங்களிப்புச் செய்யவில்லை. இது அந்தத் தீர்மானத்தில் உள்ள முதலாவது குறைபாடு. இரண்டாவது குறைபாடு இந்த மாநாடு தமிழக நோக்கு நிலையிலிருந்து அதாவது இந்திய நோக்கு நிலையிலிருந்து ஒழுங்கு செய்யப்பட்ட ஒன்று. சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து போகும் ஒரு தீர்மானத்தை இரண்டாவது முறை ஆனால் அதன் நீர்த்துப் போன வடிவத்தில் நிறைவேற்றுவதற்கு தமிழகம் ஒரு பொருத்தமான களமாக இருக்கலாம். ஆனால் அதை ஆதரித்துவிட்டு ஆறாவது திருத்தச்சட்டத்தின் கீழ் சட்டரீதியாகச் சிக்குப்பட நாட்டிலுள்ள தமிழ்க்கட்சிகள் தயாரில்லை. இது ஒரு ஈழ யதார்த்தம். இப்படிப் பார்த்தால் ஈழத் தமிழ்க்கட்சிகளும் பங்குபற்றத்தக்க தலைப்புகளை முன்வைத்து பரந்த அளவிலான ஒரு மாநாட்டை ஏற்பாடு செய்திருக்க வேண்டும். தமிழகத்தில் சுதந்திரமாக செய்யக்கூடிய ஒன்றை யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் செய்யமுடியாது என்பதனை ஏன் ஏற்பாட்டாளர்கள் புரிந்துகொள்ளத் தவறினார்கள்?

தமிழகக் கட்சிகளும் ஈழத்தமிழ்க் கட்சிகளும் ஒரு பொதுஇடையூடாட்டத்தளத்தில் ஒன்றாகக் கூடுவது என்பது கொழும்பை நோக்கி அழுத்தத்தை பிரயோகிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த இடையூடாட்டத்தளம் எனப்படுவது தாயகத்தில் வாழும் கட்சிகளுக்கு சட்ட நெருக்கடிகளை ஏற்படுத்தாமல் இருக்கவேண்டும். அதோடு முக்கியமாக தாயகத்தில் உள்ள கட்சிகளின் அச்சங்களையும் அபிலாசைகளையும் அபிப்பிராயங்களையும் கேட்டு ஒரு பொது முடிவை எடுத்த பின்னரே இப்படி ஒரு மாநாட்டை ஒழுங்கு செய்திருக்கவேண்டும். இந்த அடிப்படையில் கூறின் இதுவும் ஒருநாடு கடந்த அரசியல் எத்தனம் தான். ஆனால் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் ஒரு உத்தி.

ஈழத்தமிழர்கள் கடந்த 12 ஆண்டுகளாக கொழும்பிலுள்ள அரசாங்கங்களின் மீதோ அல்லது வெளி உலகத்தின் மீதோ பலமான அழுத்தங்களை பிரயோகிக்க முடியாதபடிக்கு பலவீனமாகக் காணப்படுகிறார்கள். புவிசார் அரசியலும் பூகோள அரசியலும் நமக்கு சாதகமாக உள்ளன என்று கூறிக்கொண்டு அவற்றைக் கையாள தேவையான வெளியுறவுக் கொள்கைகளோ வெளியுறவுக் கட்டமைப்புக்களோ இல்லாத மக்களாகக் காணப்படுகிறார்கள். அதனால்தான் பேராசிரியர் ஜுட்லால் பெர்னாண்டோ கூறுவதுபோல கடந்த 12 ஆண்டுகளாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வெற்றி எதையும்பெற முடியாத மக்களாக காணப்படுகிறார்கள்.

சில 'எழுக தமிழ்'களோ அல்லது ஒரு 'பொ-பொ' வோ கொழும்பின் மீதோ அல்லது ஜெனிவாவின் மீதோ அல்லது உலக சமூகத்தின் மீதோ போதிய அளவுக்கு அழுத்தங்களை பிரயோகிப்பவைகளாக இல்லை என்பதைத்தான் கடந்த 12 ஆண்டுகள் நிரூபித்திருக்கின்றன. எனவே தங்களை நோக்கி நீட்டப்படும் எல்லா நட்புக்கரங்களையும் ஈழத்தமிழர்கள் விழிப்போடு பற்றிக் கொள்ளவேண்டும். சிறிய மக்கள் கூட்டமான ஈழத்தமிழர்கள் பெரிய நண்பர்களை சம்பாதிப்பதன் மூலம்தான் கொழும்பின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம். கொழும்பின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க முற்படும் வெளித்தரப்புக்களோடு கண்ணை மூடிக்கொண்டு கூட்டுச் சேரத் தேவையில்லை. யாரையும் மெய் மறந்து காதலிக்கவும் தேவையில்லை. யாரையும் ராஜதந்திரமின்றி பகைக்கவும் தேவையில்லை. ராஜதந்திரம் எனப்படுவது பகைவர்களை சம்பாதிப்பது அல்ல நண்பர்களை சம்பாதிப்பது. அது பகைவர்களை நண்பர்கள் ஆக்கும் ஒரு கலை. பகைவர்களை தங்களுக்கிடையே மோத விடும் ஒரு கலை.

கொழும்பிலுள்ள அரசாங்கத்தை பணிய வைக்காமல் ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வுகிடையாது. சிங்கள பௌத்த அரசியல்வாதிகள் ஈழத்தமிழர்களுக்கு தீர்வை தங்கத் தட்டில் வைத்து தருவார்கள் என்று நம்புவதற்கு. இது ஒன்றும் அம்புலிமாமா கதை இல்லை. நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இரத்தம் சிந்திப்பெற்ற ஓர் அனுபவம் அது. எனவே கொழும்பைப் பணியவைப்பது என்ற அடிப்படையில் கொழும்பின் மீது அழுத்தங்களை பிரயோகிக்கும் எல்லாச் சக்திகளோடும் சமயோசிதமாகவும் தந்திரமாகவும் தீர்க்கதரிசனமாகவும் கூட்டுச் சேர்வதே ஒரேவழி.


எந்த ஒரு வெளித்தரப்பும் தன்னுடைய நலன்களைத் தியாகம் செய்து ஈழத்தமிழர்களுக்கு உதவப்போவதில்லை. ஈழத்தமிழர்கள்தான் தங்களுக்காக தியாகம் செய்யவேண்டும். எல்லா வெளித்தரப்புக்களும் அதனதன் நலன்சார் நோக்கு நிலையிலிருந்தே ஈழத்தமிழர்களை அணுகும். அவ்வாறு அணுகும்பொழுது ஈழத்தமிழர்களின் நலன்களும் வெளித்தரப்புகளின் நலன்களும் எங்கேயோ ஓரிடத்தில் சந்திக்கும்.

அந்தப் பொதுப்புள்ளிகளை கண்டுபிடித்து அவற்றைப் பலப்படுத்தும் நோக்கிலான ஒரு வெளியுறவுக் கொள்கை அவசியம். தந்திரோபாயக் கூட்டுக்களே உலகப் போர்களை வென்றிருக்கின்றன. தந்திரோபாய கூட்டுக்களே மனித குலத்தின் எதிரிகளைத் தோற்கடித்திருக்கின்றன. தந்திரோபாயக் கூட்டுக்களே வரலாற்றில் பல சமயங்களில் நீதியை நிலைநாட்டியிருக்கின்றன.

எனவே ஈழத்தமிழர்களுக்கு தேவையாக இருப்பது தமது இறுதி இலக்குகளில் விட்டுக் கொடுப்பற்ற விழிப்போடு கூடிய ஒரு வெளியுறவுக்கொள்கைதான். அந்த வெளியுறவுக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் ஒரு வெளியுறவுக் கட்டமைப்புத்தான். அரங்கில் உள்ள எந்தத் தமிழ் கட்சியிடம் அப்படிப்பட்ட ஒரு வெளியுறவுக் கொள்கையோ அல்லது வெளியுறவுக் கட்டமைப்போ உண்டு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறாச்சண்டையும் பரிதாபச் சாவும்!







## மன்னிப்புக் கேட்க வரவழைத்து தாக்குதல்

**புவனேந்திரராசா சுகந்தன்**

கண்ணாபுரம் நாவாந்துறையைச் சேர்ந்த 20 வயதேயான இளைஞன். வீட்டில் இரண்டாவது பிள்ளை. ஆரம்பக்கல்வி தொடக்கம் சாதாரணதரம் வரை யாழ் .மத்திய கல்லூரியில் கல்வி கற்றான். பின்னர் கிளிநொச்சிக்கு சென்றுவிட்டான். அங்கு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தரம் வர்த்தகப் பிரிவில் பயின்றான். தவணை விடுமுறைகளில் மட்டுமே வீட்டுக்கு வந்து செல்வான். 2020 ஆம் ஆண்டு உயர்தர பரீட்சை எழுதி , அவனுக்கு 2S என்ற பெறுபேறே கிடைத்தது. அதன் பின்னர் கிளிநொச்சியை விட்டு, யாழ்ப்பாணத்துக்கே வந்துவிட்டான். அப்படி வந்தவன் எதற்காக தூக்கிட்டு உயிரை மாய்க்க வேண்டும்? புறாச் சண்டையால் வந்த விளைவுகளும் அவமானப்படுத்தல்களும் தான் காரணமா?

**27.07.2021**
**நாவாந்துறை, யாழ்ப்பாணம்.**

அவருக்கு அன்று கொஞ்சம் வேளைக்கே விழிப்பு வந்துவிட்டது. எதேச்சையாக மகன் படுத்திருந்த இடத்தைப் பார்த்தார். அவன் விரித்துப் படுத்திருந்த பெட்சீட் அப்படியே கிடக்க, அவனைக் காணோம்.

"எங்க வேளைக்கே எழும்பிட்டானோ! ம்ம்ம்.. ரூமுக்க போய் படுத்திட்டான் போல: என நினைத்தவாறு காலைக்கடன்களை முடித்துவிட்டு, வழக்கம் போல சுவாமி படங்களுக்கு பூவைக்கச் சென்றவரின் நெஞ்சு 'திக்' என்றானது. சுவாமி அறை உட்புறமாக பூட்டப்பட்டிருந்தது. அப்படி யாரும் அதற்குள் பூட்டிவிட்டு இருப்பதில்லை.

கதவில் ஓங்கித் தட்டினார். எவ்வித பதிலுமில்லை.

சந்தேகம் வலுக்க, தன் பலம் முழுதும் திரட்டி உந்தித் தள்ளினார் கதவை.

"படார்ர்ர்ர்ர்ர்!'

கதவு ஓவென்று திறக்க, அவர் கண் முன்னே கண்ட காட்சியால் அப்படியே திக்பிரமை பிடித்துப்போய் நின்றார்.

அவர் அந்த அறைக்குள்-

மகன் சேலையொன்றில் தூக்கிட்ட நிலையில் தொங்கிக் கொண்டிருந்தான்.

சிலகணங்களிலேயே அதிர்ச்சியில் இருந்து மீண்ட அவர், ஓடிச்சென்று மகனின் கால்களை தூக்கிப்பிடித்தார். வீட்டில் இருந்த அனைவரும் அங்கு வந்துவிட, ஜன்னலில் ஏறி சேலையை வெட்டி, மகனை மீட்டுக் கொண்டு, யாழ்.போதனா மருத்துவமனைக்கு அவனைக் கொண்டோடினர்.

ஆனால் அவர்களின் பிரார்த்தனைகள் எல்லாம் வீணாகின.

அவன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டான் என்பதையே மருத்துவர்களால் உறுதிப்படுத்த முடிந்தது. கூடவே இன்னொரு இடியும் அந்தக் குடும்பத்தின் தலையில் வீழ்ந்தது.

"உயிரிழந்தவருக்கு கொரோனா!"

நேற்றுவரை ஓடியாடித் திரிந்தவனுக்கு கொரோனாவா? நம்பமுடியவில்லை அவர்களால். மருத்துவர்களோடும், அதிகாரிகளோடும் தங்கள் மகனுக்கு கொரோனா இல்லையென்று முரண்பட்டனர். ஆனால் விஞ்ஞானரீதியான முடிவுகள் அவனுக்கு கொரோனா என்று உறுதியாகச் சொன்ன பின்னர் என்ன செய்யமுடியும்?

சடலத்தை சுகாதாரத்துறையினர் பொறுப்பேற்றனர். அப்படியே கோம்பயன்மணல் இந்து மயானத்தில், நெருங்கிய உறவினர்கள் 14 பேர் முன்னிலையில் சடலம் சுகாதாரமுறைப்படி தகனம் செய்யப்பட்டது.

## புறாச்சண்டை

சுகந்தனின் நண்பன் ஒருவன் புறா வளர்த்து வருகிறான். அவனது விலையுயர்ந்த புறாக்களில் ஒன்று, திடீரென ஒருநாள் காணாமல் போய்விட்டது. நண்பர்களோடு அவன் தேடத் தொடங்கினான். நீண்டநேர தேடுதலுக்கு பின்னர் அயலில் உள்ள வீட்டில் அந்தப் புறா இருப்பதைக் கண்டு பிடித்துவிட்டார்கள். ஆனால் அங்கேதான் எழுந்தது பிரச்சினை.

" நாங்கள் அதைக் களவாப் பிடிக்கேலை. எங்கட புறா அதை அணைச்சுக் கொண்டந்திட்டுது. நாங்கள் அதைத் தரமாட்டம்" என்று புறாவை வைத்திருந்தவர்கள் அடம்பிடிக்க, மெல்ல வாக்குவாதம் கைகலப்பாகி, அடிதடியில் முடிந்தது. புறாவைப் பிடித்துவைத்திருந்த வீட்டைச் சேர்ந்த சிறுவன் ஒருவனுக்கு இந்த அடிதடியில் தலையில் காயம். இந்தக் காயம் அந்தப் பகுதி இளைஞர்களுக்கு கோபத்தைக் கிளப்ப, "எங்கட ஏரியாக்கு வந்து சண்டித்தனம் காட்டிறதோ" என்று அவர்கள் தங்கள் பங்குக்கு பிரச்சினையை பெரிதாக்க இறங்கினர்

## மன்னிப்புக் கேட்க வா

சுகந்தன் உயிரிழப்பதற்கு இருவாரத்துக்கு முன்னர், ஒருநாள் காலை.

சுகந்தன் வீட்டுக்கு சுமார் பத்துப் பேர் வந்தார்கள்.

"இண்டைக்கு பின்னேரம் 3 மணிக்கிடையில சுகந்தனைக் கொண்டந்து எங்கட இடத்தில ஒப்படைக்கோணும். இல்லாட்டி றோட்டில வெட்டிப்போடுவம். வந்து எடுத்துக்கொண்டு போங்கோ"

வந்தவர்கள் கடுந்தொனியில் எச்சரித்தனர்.

இதன் பின்னர் அரசியல் கட்சி என சொல்லிக்கொள்ளும் அமைப்பொன்றின்'ஏரியா நாட்டாமைப் பெண்' ஒருவர் சுகந்தன் வீட்டுக்குப் போனார்.

'பின்னேரம் 3 மணிக்கிடையில உங்கட மகனை, புறாப் பிரச்சினை நடந்த வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வாங்கோ. அங்க வந்து மன்னிப்புக் கேட்டால் சரி. நான் நிப்பன். அடிக்கவிடமாட்டன்" என்று உறுதிமொழி கொடுத்துள்ளார். "இதை இப்படியே விட்டால் பிரச்சினை பெரிசாகும். முதல் வந்து எச்சரிச்சுப்போட்டுப் போறாங்கள். அதால போய் மன்னிப்புக் கேட்டால் பிரச்சினை தீர்ந்திடும்"என நினைத்த தந்தை, சுகந்தனை அன்று மாலை குறிப்பிட்ட இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார்.

அந்தச் சம்பவத்தோடு தொடர்புடைய மற்றைய இளைஞர்களின் தாய்மார்களும் தமது பிள்ளைகளை அங்கே அழைத்து வந்திருந்தனர்.


ஆனால் அங்கே நடந்ததோ வேறு. மன்னிப்புக் கேட்டால் சரி என்று சொல்லிவிட்டு, பெற்றோரை வெளியில் நிறுத்திவிட்டு பிள்ளைகளை வீட்டு வளவுக்குள் அழைத்துச் சென்று அங்கே தயார்நிலையில் இருந்த பெண்கள் சரமாரியாக அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர். சிலர் கைகளை பிடித்திருக்க பலர் தாக்கியுள்ளனர். ஏற்கனவே திட்டமிட்டு தயார் நிலையில் வைத்திருந்த மிளகாய்த்தூள், பச்சைமிளகாய் கரைசல் என்பவற்றை இளைஞர்களின் முகங்களில் பூசி காடைத்தனம் புரிந்தனர். சுமார் பதினைந்து பெண்கள் இந்தத் தாக்குதலை நடத்தினர். இன்னும் சில பெண்கள் நடப்பவற்றை கைபேசியில் வீடியோ பிடித்து ரசித்தனர்.

வெளியே பெற்றோர் "எங்கட பிள்ளையளை விடுங்கோ" என்று கதறிய போதும் பெண்களின் தாக்குதல் தொடர்ந்தது.

அதன் பின்னர், பெண்களால் இளைஞர்கள் தாக்கப்படும் வீடியோவை பேஸ்புக்கில் பதிவேற்றி தங்கள் வக்கிரத்தை அவர்கள் தீர்த்துக்கொண்டனர். தாங்கள் அவமானப்படுத்தப்பட்டு, அடிவாங்கும் காட்சிகள் பேஸ்புக்கில் வெளியானதும் சுகந்தனும் நண்பர்களும் மனவுளைச்சலால் பாதிக்கப்பட்டனர். அதன் பின்னரே, இருவாரங்கள் கழித்து சுகந்தன் இப்படி ஒரு முடிவை எடுத்தான் என்று சொல்லப்படுகின்றது.

தடயத்தை தேடி...

## அடிவாங்கும் வீடியோவால் மனவுளைச்சல்



## விசாரணைகளில் மந்தம்

சுகந்தன் உயிரிழந்த பின்னரே, இருவாரங்களுக்கு முன்னர் பூட்டிய வளவுக்குள் பெண்களால் சுகந்தன் உள்ளிட்டவர்கள் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து பெற்றோர் முறைப்பாடு செய்தனர். கூடவே அவனோடு தாக்குதலுக்கு இலக்கான சுகந்தனின் நண்பர்களும் அந்தச் சம்பவம் பற்றி முறைப்பாடு செய்தனர். இந்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இதுவரை ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சுகந்தனின் வீட்டுக்கு வந்து சமாதானம் பேசுவதெற்கென அழைத்த அரசியல் கடசியைச் சேர்ந்த பெண்மணி, தனது மருத்துவ அறிக்கையைக் காட்டி, கைது செய்யப்படுவதில் இருந்து தப்பித்துக்கொண்டுள்ளார்.

சுகந்தனை சுமார் 15 பெண்கள் தாக்கியபோதிலும் ஐந்து பேர் மட்டுமே கைதுசெய்யப்பட்டுள்ளனர். சுகந்தனின் வீட்டுக்குச் சென்று "மாலை மூன்று மணிக்குள் மகனை அழைத்துவந்து ஒப்படைக்காது விட்டால் வீதியில் வெட்டிப்போடுவோம் என அச்சுறுத்தல் விடுத்த ஆண்கள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. அவர்கள் தொடர்பில் எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் குற்றஞ்சுமத்துகின்றனர் அப்பகுதி மக்கள்.

ஒருவர் தற்கொலை செய்துகொண்டால் சம்பவ இடத்துக்குச் சென்று, தடயப்பொருள்களை சேகரித்து விசாரணை மேற்கொள்வது வழமை.தூக்கில் தொங்குவதற்கு பயன்படுத்தப்பட்ட பொருளையும் பரிசோதனைக்காக எடுத்துச்செல்வர். ஆனால் இன்றுவரை சுகந்தனின் சாவு தொடர்பில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். தூக்கில் தொங்கப் பயன்படுத்தப்பட்ட சேலையை பார்த்து குடும்பத்தவர்கள் அழுததையடுத்தே – சில நாட்களின் பின்னரே குறித்த சேலையை உறவினர்கள் அகற்றியுள்ளனர். சுகந்தன் தூக்கில் தொங்கி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் குடும்பத்தினரால் பொலிஸ் நிலையத்துக்கு உடனடியாக தெரிவிக்கப்படவில்லை. குடும்பத்தினர் தெரிவிக்காது விட்டாலும் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் பொலிஸாருக்கு தெரிவிக்கப்படுவது வழமையான நடைமுறை என தெரிவிக்கப்படுகிறது.அப்படி இருந்தும் பொலிஸார் ஏன் சுகந்தனின் வீட்டுக்கு போகவில்லை? ஏன் எஞ்சிய சந்தேகநபர்களை கைது செய்யவில்லை? இந்தக் கேள்விகளுக்கு இன்னும் விடை தெரியவில்லை.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெருங்கும் பேராபத்து!!

## ஐ.நா பாதுகாப்புச் சபையில் இந்தியா!
## இலங்கையைச் சமாளிக்கும் நிகழ்ச்சி நிரல்கள்

அ.நிக்ஸன்

இந்தோ- பசுபிக், தென்சீனக் கடலில் ஏற்பட்டுள்ள கொதிநிலைமை, தலிபான் தீவிரவாதிகளின் மீள் எழுச்சி என்பவற்றுக்கு மத்தியில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஒகஸ்ட் மாதத்துக்குரிய தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ளது. இந்தோ பசுபிக் பாதுகாப்புத் திட்டத்துக்கான அமெரிக்க நகர்வுகளின் அடுத்த கட்டத்துக்கான ஒரு முயற்சியாக இந்தியா . ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பதாக நோக்கலாம்.

கடல்சார் பாதுகாப்பு, பயங்கரவாத தடுப்பு மற்றும் அமைதி ஆகிய மூன்று முக்கிய அம்சங்கள் குறித்து, ஐ.நா., பாதுகாப்புச் சபை இந்த மாதம் விவாதிக்க உள்ளது. கடல்சார் பாதுகாப்புத் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி, நாளை திங்கட்கிழமை ஒன்பதாம் திகதி இணையவழி ஊடாக உரை நிகழ்த்தவுள்ளார். வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், தொழில்நுட்பமும், அமைதிப் பராமரிப்பும் என்ற தலைப்பில், 18 ஆம் திகதி பேசவுள்ளார். அதற்கு அடுத்த நாள், தீவிரவாத அமைப்புகள் குறித்து ஐ.நா. பொதுச் செயலாளரின் அறிக்கை குறித்த உயர்மட்ட ஆலோசனை கூட்டத்திலும் ஜெய்சங்கர் பங்கேற்பார்.

"பயங்கரவாதத்துக்கு எதிரான கொள்கையை இந்தியா பின்பற்றுகின்றது. தேசிய அளவில் பயங்கரவாதத் தடுப்புக்கு இந்தியா முன்னுரிமை வழங்குகின்றது. ஆயினும் பயங்கரவாதிகள் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்றனர்" என ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரத் தூதுவர் எ.எஸ். திருமூர்த்தி கவலை வெளியிட்டுள்ளார். உலகளவில் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும் எனவும் அவர் கூறியுள்ளார். ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் செயற்பாடுகளையே பயங்கரவாதமென திருமூர்த்தி சுட்டிக்காட்டியிருக்கிறார் போலும். சர்வதேசப் பயங்கரவாதம் என்ற பொதுப்படையான கருத்தை மையப்படுத்தியே ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை கோரிய போராட்டமும் 2009 ஆம் ஆண்டு இல்லாதொழிக்கப்பட்டது. ஆனாலும் ஈழப்போரைப் பயங்கரவாதம் என்ற பொதுவானதொரு வரைவிலக்கணத்துக்குள் சேர்க்க முடியாதென்ற மனசாட்சியின் அடிப்படையில், போரின் இறுதித் தருணத்திலாவது, அழிவைத் தடுப்பதற்காக அவசரமாக ஒன்றுகூடி , உருப்படியாக ஏதும் செய்யுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த ஐ.நா.பாதுகாப்புச் சபையும் பின்னர் அமைதிகாத்தது. இந்தியாவே அதற்குக் காரணமாக இருந்தது என்ற குற்றச்சாட்டுக்களும் இல்லாமலில்லை.

ஈழப்போரினால் இந்திரா காந்தி காலத்தில் உருவான அமெரிக்க- இந்திய நெருக்கம், மோடி அரசாங்கத்தில் அமெரிக்காவையே நம்பியிருக்கும் சூழலையே டில்லிக்கு உருவாக்கியுள்ளது. இதனை 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னரான அமெரிக்க- இந்திய ஒப்பந்தங்கள் நிரூபிக்கின்றன. அப்போதைய அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மைக் பொம்பியோ கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கொழும்புக்கு வந்தபோது உலகப் பயங்கரவாதம் பற்றிய எச்சரிக்கையை விடுத்ததுடன், இலங்கையின் இறைமை பாதுகாக்கப்பட வேண்டுமெனவும் வற்புறுத்தியிருந்தார். அதாவது சீனாவிடம் இலங்கையின் இறைமை சென்றுவிடக்கூடாதென்பதும், அதற்காக ஈழத்தமிழர்களும் இலங்கையின் ஒற்றையாட்சி அரசுடன் இணைந்து வாழ வேண்டுமென்பதும் தான் மைக் பொம்பியோ அப்போது விடுத்த எச்சரிக்கை. டில்லியில் மோடியைச் சந்தித்த பின்னரும் தமிழர்களுக்கான எச்சரிக்கைத் தொனி அவருடைய குரலில் வெளிப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு நிலையில் ஐ.நா.பாதுகாப்புச் சபையில், இந்தியா தலைமையில் இம் மாதம் நடைபெறவுள்ள விவாதத்தில் ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் தாக்குதல் உள்ளிட்ட இஸ்லாமியத் தீவிரவாதத் தாக்குதல்கள் பற்றிப் பேசப்படவுள்ள அதேவேளை, தலிபான்களை ஊக்குவிப்பதாகப் பாகிஸ்தான் மீதும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவுள்ளன. தென் சீனக் கடலில் சீனாவின் ஆதிக்கம் தொடர்பாகவும் விவாதிக்கப்படவுள்ளது.

இது அநேகமாக இந்தியாவைத் திருப்திப்படுத்தும் அமெரிக்க நகர்வு என்பதில் சந்தேகமேயில்லை. தென் சீனக் கடல் விவகாரம், இந்தோ பசுபிக் விவகாரம் பற்றிய உரையாடல்களின்போது சீனாவுக்கு விடுக்கப்படுகின்ற எச்சரிக்கை அல்லது பிராந்திய பாதுகாப்புத் தொடர்பாக சீனாவுடன் சுமுகமாகச் செல்வதற்கான உரையாடல்கள் கூட கொழும்புக்கான எச்சரிக்கையாகவும் இருக்கலாம். "இலங்கையின் ஒற்றையாட்சிக்குள் அடங்கி நடவுங்கள் "என்று ஈழத்தமிழர்களுக்கான இந்தியாவின் மிரட்டலாகவும் அதனைக் கருத முடியும். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று, கொவிட் -19 நோய்த் தாக்கத்துக்குப் பின்னரான இந்தியாவின் பொருளாதார நெருக்கடியால் அமெரிக்காவுடன் மேலும் நெருங்க



வேண்டிய நிர்ப்பந்தம். இரண்டாவது, டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்தில் மோடி அமெரிக்காவுடன் செய்துகொண்ட மூன்று பாதுகாப்பு ஒப்பந்தங்களையும் ஜோ பைடன் நிர்வாகம் அப்படியே செயற்படுத்துவதால், அமெரிக்காவுடனான பாதுகாப்பு, இராணுவச் செயற்பாடுகளில் இருந்து இந்தியாவால் விலகிச்செல்ல முடியாத கட்டாயச் சூழல். இவ்வாறான நெருக்கடியின் பின்னணியிலேயே ஈழத்தமிழர்களின் விவகாரத்தையும் இந்தியா நோக்குகின்றது. அதற்காகவே இலங்கையோடு ஒத்துப்போகும் தன்மைக்கும் இந்தியா படியிறங்கியுள்ளதெனலாம்.

நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் லெமோ எனப்படும் மூலோபாயப் பரிமாற்ற ஒப்பந்தம் (Logistics Exchange Memorandum of Agreement LEMOA) 2016 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்டது. இது கணக்கியல் பொறிமுறையாகும். இரு நாடுகளினதும் இராணுவ வசதிகளை ஒருவருக்கொருவர் பரிமாற அனுமதிக்கிறது. உணவு, நீர், போக்குவரத்து, பெற்றோலியம், மசகு எண்ணெய், ஆடை, மருத்துவ சேவைகள், உதிரிப் பாகங்கள் மற்றும் பாகங்கள், பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு சேவைகள், பயிற்சி சேவைகள் மற்றும் பிற தளபாடப் பொருள்கள் மற்றும் சேவைகள் இதில் அடங்கும். இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா அமெரிக்காவின் மற்றுமொரு இராணுவத் தளமாக மாறும் என்ற அச்சமும் அப்போது வெளியிடப்பட்டிருந்தது.

இதைத் தொடர்ந்து கொம்காசா எனப்படும் தொடர்பு இணக்கத் தன்மை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் ( Communi cations Compatibility and Security Agreement COMCASA) 2018 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டது. இது பாதுகாப்பான இராணுவத் தகவல் தொடர்புகளைக் கையாள்கிறது. கூட்டுப் பயிற்சிகளின்போது அமெரிக்க, இந்திய அமைப்புகள் இப்போது பாதுகாப்பான மற்றும் மறை குறியாக்கப்பட்ட தொடர்பின் ஊடாக இரு நாட்டுப் படைகளும் ஊடாடிக் கொள்வதன் மூலம் இருதரப்புக்குமிடையேயான இடைச்செயற்பாடு அதிகரிக்கும். அத்துடன் ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் இராணுவத்தினர் பயன்படுத்தும் அனைத்து அமெரிக்க தயாரிப்புகளுடனும் பாதுகாப்பாகத் தொடர்பு கொள்ளும் திறனையும் அதிகரிக்கிறது.

மூன்றாவதாக பீகா எனப்படும் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் (Basic Exchange and Cooperation Agreement BECA) இது பாதுகாப்புத்துறை மற்றும் இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சின் தேசிய புவிசார்புலனாய்வு முகாமைக்கு இடையிலான ஒப்பந்தமாகும். புவிசார்ந்த மற்றும் புவியீர்ப்புத்தரவு, வரைபடங்கள், கடல் மற்றும் வானியல் வரைபடங்கள், வணிக மற்றும் பிற வகைப்படுத்தப்படாத படங்கள் போன்ற அனைத்து வகையான இராணுவத் தகவல்களையும் பகிர்ந்துகொள்ள இரு நாடுகளையும் இந்த ஒப்பந்தம் அனுமதிக்கிறது. இந்திய ஏவுகணைகள் மற்றும் அத்தகைய தரவு தேவைப்படும் ஆயுதமேந்திய ட்ரோன்களின் துல்லியத்தை அதிகரிக்கவும் இந்த ஒப்பந்தம் இடமளிக்கிறது. இது குறித்த பேச்சுக்கள் இருநாட்டுப் படை உயர் அதிகாரிகளுக்கிடையே சமீபத்தில் இடம்பெற்றிருக்கின்றன.

ஆகவே இந்த மூன்று ஒப்பந்தங்களின் பிரகாரம் இந்தியா, அமெரிக்காவின் இராணுவ வியூகத்துக்குள் சென்றுவிட்டதெனக் கருத இடமுண்டு. சோனியா தலைமையிலான காங்கிரஸ் அரசாங்கத்தைவிட மோடி தலைமையிலான பா.ஜ.க அரசாங்கமே அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்து, பொருளாதார உதவிகளையும் அதிகளவில் பெற்றிருக்கிறது.

இந்த ஒப்பந்தங்கள் செய்யப்படுவதற்கு முன்னர் இந்திய இராணுவம் அமெரிக்க தனியுரிம தகவல் தொடர்பு உபகரணங்களான சி-130 ஹெர்குலஸ் சிறப்பு செயற்பாட்டு விமானங்கள் மற்றும் குளோப்மாஸ்டர் சி-17 மூலோபாய ஏர் லிஃப்டர்ஸ் போன்றவற்றைக் கொள்வனவு செய்ய முடிந்தது. ஆனால் ஒப்பந்தத்தின் பின்னரான சூழலில் அமெரிக்க இராணுவத்தின் ஒப்புதலுடனேயே இந்திய ஆயுதக் கொள்வனவு விவகாரங்களும் அமைந்துள்ளன.

கடந்தவாரம் இந்தியாவுக்கு 82 மில்லியன் டொலர் மதிப்புள்ள ஹார்பூன் ஏவுகணைகளை விற்பதற்கு அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது. கப்பல் எதிர்ப்பு ஏவுகணையான இந்த ஹார்பூன் ஏவுகணைகளை, இந்தியாவுக்கு விற்பது தொடர்பான சான்றிதழை, அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்டகனின் இராணுவப் பாதுகாப்பு ஒத்துழைப்பு அமைப்பு வழங்கி உள்ளது. இதற்கு அமெரிக்கக் காங்கிரஸிலும் அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏவுகணை விற்பனை , அமெரிக்காவின் வெளிநாட்டு கொள்கை மற்றும் தேசிய பாதுகாப்புக்கு உதவுவதுடன் அமெரிக்கா இந்தியா இடையிலான பிராந்திய ஒத்துழைப்பை வலுப்படுத்தும் எனவும், இந்தோ -பசுபிக் மற்றும் தெற்கு ஆசியா பகுதியில், அரசியல் ஸ்திரத்தன்மை, அமைதி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமளிக்குமெனவும் அந்தச் சான்றிதழில் கூறப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் தென் சீனக் கடல், மேற்கு பசுபிக் மற்றும் தென்கிழக்கு ஆசியக் கடற்பகுதிகளில் நான்கு முன்னணி போர்க்கப்பல்களை உள்ளடக்கிய கடற்படை பணிக்குழு ஒன்றை இந்திய கடற்படை இந்த மாதம் அமைத்துள்ளது. இரண்டு மாதங்களுக்கு மேலாக வியூக ரீதியாகப் பிரதான கடல் பாதைகளின் ஒழுங்கமைப்பு மற்றும் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்கு பசுபிக் பகுதியில் உள்ள ஜப்பான், அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் கடற்படைகளுடன் மலபார் பயிற்சியின் அடுத்த பதிப்பில் கப்பல்கள் பங்கேற்குமென இந்தியக் கடற்படைச் செய்தித் தொடர்பாளர் கொமாண்டர் விவேக் மத்வால் கூறியுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வரலாறு

1505–1948 வரை

ந.பரமேஸ்வரன்

**1630** - 1645 காலப்பகுதியில் கத்தோலிக்க குருமாருக்கு எதிராக கிடைத்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு பிரான்சிஸ்கோ டீ சிக்சாஸ் டீ கபிரியேல் தலைமையில் ஒரு குழுவை ஆளுநர் நியமித்தார். கத்தோலிக்க குருமாருக்கு எதிராக யாழ்ப்பாணத்தவர்களும் போர்த்துக்கீசப் பிரஜைகளுமாக 40 பேர் சாட்சி சொன்னார்கள். சாட்சியங்கள் கத்தோலிக்க குருமாருக்கு எதிராகவே காணப்பட்டன. சாட்சி சொன்ன அனைவருமே முக்கியமான பதவிகளை வகித்தவர்கள். திருமண, மரணச் சடங்குகளின்போது குருமார் கட்டாய இலவச சேவையை (ஊழியம்) வலியுறுத்தினர். ஊழியம் செய்ய முடியாதவர்களுக்கு தண்டனைகளும் குருமாரால் வழங்கப்பட்டன. இந்த முறைப்பாடுகளில் குருமாரின் பெயர்களும் இருந்தன. 125 பக்கங்களைக் கொண்ட இந்த ஆவணத்தில் தமிழில் வழங்கப்பட்ட சாட்சியங்களும் பதிவு செய்யப்பட்டிருந்தன. இறுதியில் குறைந்த வருமானம் பெறும் யாழ்ப்பாணத்தவர்களிடமிருந்து கூடுதலான வரி அறவிடப்பட்டதாக விசாரணைக்குழுவின் இறுதி அறிக்கை மூலம் தெரியவந்தது.


போர்த்துக்கல்லின் குடியேற்ற நாடுகளில் பிரான்சிஸ் சேவியரும் பிரான்சிஸ் லியோராவும் மேற்கொண்ட துன்புறுத்தல்கள் காரணமாக திருச்சபை மீது விமர்சனங்கள் எழுந்தன. இவர்களிருவரும் துன்புறுத்தல்களின் பிதாமகர்களாக அல்லது காரணகர்த்தாக்களாக விளங்கினர். யாழ்ப்பாணத்தில் திருச்சபையின் துன்புறுத்தலின் ஒரு அங்கமாக விளங்கினர்.

## 'அலுப்பாந்தி'

யாழ்ப்பாண அரசர்கள் அறவிட்ட வரிகளை போர்த்துக்கீசரும் தொடர்ந்து அறவிட்டனர். யாழ்ப்பாணத்தில் கிடைத்த வரி வருமானம் இலங்கையின் ஏனைய பகுதியிலிருந்த போர்த்துக்கீசப் படைகளின் செலவுக்கும் போதுமானதாக இருந்தது. வரி அறவிட்ட இடம்'அலுப்பாந்தி' என அழைக்கப்பட்டது. போர்த்துக்கீசர் அறவிட்ட வரிகளின் விபரம் வருமாறு-

## புகையிலை வரி

புகையிலையை மொத்தமாக விற்பனை செய்வதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. குத்தகை



அனுமதிபெற்ற விற்பனையாளருக்கு மட்டுமே புகையிலை விற்பனை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. வன்னியிலிருந்து புகையிலை எடுத்துவரப்பட்டது. இவ்வாறு எடுத்துவரப்பட்ட புகையிலைக்கு 4% வரிஅறவிடப்பட்டது. காலாண்டு அடிப்படையில் இந்த வரி அறவிடப்பட்டது.

## மீன்வரி

மீன்வரி அறவீடு மீனவத் தலைவன் ஒருவனுக்கு வழங்கப்பட்டது. பிடிக்கப்படும் மீனுக்கு 25% வரி அறவிடப்பட்டது.

## மதுவரி

ஏனையவரிகளைப்போல் மதுபான வரியும் குத்தகைக்கு வழங்கப்பட்டது. மன்னார், திருகோணமலை,தீவகம், மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களுக்கு பதப்படுத்தியகள், பதநீர் என்பவை எடுத்துச் செல்லப்பட்டன. இவ்வாறு எடுத்துச்செல்லப்பட்ட மதுவுக்கு அரச முத்திரை பொறிக்கப்பட்டது. இதற்கு முத்திரை வரி அறவிடப்பட்டது. பாக்கு வரியாக 11% மும், யானை வரியாக 7.5% மும் அறவிடப்பட்டன. போர்த்துக்கல்லில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுக்கு 1% வரி அறவிடப்பட்டது.

அரச காணிகளில் குடியிருந்தவர்களிடமும் வரி அறவிடப்பட்டது. காணி வரி மூலம் பெருமளவு வருமானம் போர்த்துக்கீசருக்குக் கிடைத்தது. காணி வரி செலுத்தியவர்கள் விபரம் தோம்புகளில் பதியப்பட்டிருந்தது.

ஒரு சில முதலியார்களுக்கு வரி விலக்கும் அளிக்கப்பட்டது.வரிவிலக்குப் பெற்ற முதலியார்கள் விபரம் -

டொம் கொன்ஸ்ரன்ரினோ புனைக முதலியார்
டொம் அம்புரோசியோ இராமநாத முதலியார்
டோனா அன்னா கமல்டா
டொம் பிலிப் கைலாதபடங்கட்டி

இவர்களில் டொம் பிலிப் கைலாத படங்கட்டி முதலியாரிடம் வன்னிக்கான வரி வசூலிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவரின் கீழ் யானை பிடிப்பதற்கென சில முதலியார்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அவர்களின் விபரம் வருமாறு-பிரான்ஸ்சிஸோ கபிரிரா டீ செய்ஸாஸ் (Franciseo Cabreira De Seisas) பூநகரி, விநாசிப் பெருமாள் புதுக்குடியிருப்பு, அதிவீரன்சங்கரப்பிள்ளை, அபிநாசி, விநாயகமுத்து, ஆனந்த உடையார், ஆண்டியார் உடையார், குணசித்தம்பி நிலதே உடையார் முள்ளியவளை. இவர்கள் கொம்பன் யானைகளாகவோ அலியன்களாகவோ வரி செலுத்தலாம். வன்னியை ஆட்சி செய்த சிற்றரசர்களே வன்னியில் வரி வசூலிப்பாளர்களாக நியமிக்கப்பட்டனர்; இவர்கள் ஒழுங்காக வரி (திறை)செலுத்துவதில்லை. யானை பிடிப்பது சட்டப்படி குற்றமாகக் கருதப்பட்டது. அனுமதி பெற்றவர்கள் மட்டுமே யானை பிடிக்கலாம். அனுமதியின்றி யானை பிடிப்ப வர்களை காட்டிக்கொடுப்பவர்களுக்கு யானையின் பெறுமதியின் அரைவாசிப்பணம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. வன்னி ஒருபோதும் போர்த்துக்கீசரின் ஆட்சிக்குட்படவில்லை. சந்தைகளிலும் வரி அறவிடப்பட்டது.

## மரணவரி

பிள்ளைகள் இல்லாத ஒருவர் இறந்தால் அவரது சொத்துக்கள் அரசுடைமையாக்கப்படும். இறந்தவரின் உறவினர்கள் விரும்பினால் இறந்தவரது சொத்துக்களை அரைவிலைக்கு வாங்கலாம். வரிஅறவிடும் உத்தியோகத்தர்களாக வெள்ளாளர் என்ற சாதியைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்பட்டிருந்தனர். வரி அறவிடுவதில் சில முறைகேடுகள் இடம்பெற்றன. சில வரி வசூலிப்பாளர்கள் உரிய தவணையில் வரியைச் செலுத்தவில்லை. வேறு சிலர் போர்த்துக்கல் அரசாங்கம் விதித்த வரியை விட கூடுதலாக அறவிட்டனர். வரிவசூலிப்பாளர்கள் இறந்தால் அவர்களால் வசூலிக்கப்பட்ட பணத்தைப் பெற்றுக்கொள்வது கடினமாக இருந்தது. வலிகாமம் அதிக வருமானத்தை ஈட்டும் பகுதியாகக் காணப்பட்டது. *(வரலாறு நீளும்)*

---



# ஏன் மறந்தாய் மனிதா ஏன் மறந்தாயோ?

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

வீடு, வாசல்
தோப்பு, துரவு
பங்களா மாளிகை
மாந்தோப்பு– சாவகச்சேரி
புளியந்தோப்பு– தொல்புரம்
தென்னந்தோப்பு– பளை
முழங்காவிலில்– வயற்காணி
கட்டுவனில்– வாழைத்தோட்டம்
நாவலர் வீதியில்
வாடகைக்கு கடைகள்
கனடா மருமகன்
கூட்டு முயற்சியில்
கல்யாண மண்டபமும் வேறு!

கைவிட்டுப் போன
பாவற்குளத்து பக்கத்துக் காணியும்
கண்டுபிடிச்சு குத்தகைக்கு விட்டாச்சு
தர்மராசா நீதி தவறாமல்
பத்து மூடைகள் 'படி'யில்
அனுப்பி விடுகிறான்!

வித்தது போக மிச்சம்
பானைக்குள் வேகுது
திண்டு போட்டு
மின்விசிறியில்
சொகுசு மெத்தையில்
அடுத்த திட்டங்கள்
மனை நட்டு
அண்டா குண்டா சரி!

சொந்த பந்தம் வராமல்
'டபுள் கேற்' உயரப் போட்டு
முன்பக்கத்தை
சுவிஸ் வீட்டுக்காரிக்கு
போட்டியா இடிச்சுக் கட்டி
மாமா போட்ட நாலுபக்க
பூசரவசம் வேலியளை
அடியோடு பிடுங்கியெறிந்து
சீனப் பெருஞ்சுவருக்கு பதிலாக
பெரும் மதில் கட்டி
கால் வலிக்காமல் நடக்க
மாபிள் பதித்து
எமக்காக வாழாமல்
அடுத்தவனுக்காக!

பட்டம், பதவி
யாரெங்கே? கால்மடக்க
உத்தரவு மகாராசா கால்பிடிக்க!

ஊரில் அசையா சொத்துக்கள்
எம் கண்ணில் சிக்காமல்
கைமாறி போகாதே!

தேர்தல் காலத்தில்
முன்பு எடுத்ததை
திருப்பிக் கொடுத்து
எம்மினத்தை நாமே
கையேந்த வைத்து
ஊர்க்காவலன்
பட்டமும் பெற்றாச்சு!

செல்பி எடுத்து முகப்பில் போட்டு
'கொங்கிராட்ஸும்'பாத்தாச்சு!
சமூகத்துக்கும்
எங்களுக்கும் இடைவெளி இல்லாமல்
வாழ்ந்தோமே...
அதென்ன
கொரோனாவாம் வைரசாம்
உயிராபத்தாம்
சமூக இடைவெளியாம்
பயணத்தடையாம்!

மருந்து மாத்திரை
ஆஸ்பத்திரியில் இல்லையாம்
சுடுநீரும், மிளகுரசமும், முகமூடியும்
தனிமைப்படுத்தலும் மருந்தாம்!

நம்புறதா? விடுறதா?
உதெல்லாம்
ஒரு 'பிசினஸ்'
கொரோனா கிடையாது!

– ஆறறிவு ஒன்று சொல்லிப் போனது

தடுப்பூசி போடு!
பாதுகாப்பு மருத்துவம் அறிவித்தது
தாடி வைத்த சாமிகளை நம்பும் கூட்டம்
தாடி வைக்காத மருத்துவத்தை சந்தேகித்தது

தெஹிவளையில்
சிங்கத்துக்கு தொற்றாம்
அட சிங்கத்துக்கா?
அரசாங்கத்துக்கா?
என்ன வேணாம் நடக்கட்டும்..
ஐஸ்பழவண்டி பாடிப்போனது
இன்று அரிக்குது இருமுது
தும்மலுடன் காய்ச்சல் வேறு

'பி.எச்.ஐ' வந்தார்
தொற்று உறுதியெண்டார்
கழுத்தை நீட்டிய மனிசி
16 அடி பாய்ந்துவிட்டாள்

சுவாசிக்க சிரமம்
மூச்சு முட்டுகிறது
பிரளயம் நடக்கிறது
நுரையீரல்
ஒட்சிசன் தேவையென்று
அழுகின்றது
கதறுகின்றது
எங்கே போவது?
மரங்கள் இல்லையே!


வங்கியில்ன் 'எப்.டி'யில் காசு
லொக்கரில் நகை
முழங்காவிலில் காணி

மறுபடியும் நுரையீரல்
ஒட்சிசன் தேவையென்றது
இல்லையென்றேன்
அடப்பாவி மனுசா...
நீ வாழ்வதற்கு
என்னை சேர்த்து வைக்க
ஏன் மறந்தாய்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

50




அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................................

கையொப்பம்:................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.இலங்கையில் முருகனின் புகழ்பூத்த மலைக்கோயில் 6.மறி 7.எண் சாண் உடலுக்கு இதுவே பிரதானம் 8.சிஷ்யரை வழிப்படுத்துவோர் 9.கோல் 11.திடீரென 12.இசையில் இது முக்கியம் 13. பனை ஓலையில் இதைப் பின்னுவர் 15.பிரி 17.கருணை 18. தேம்பியழு 19. ஒருவரின் இயல்பு 20. ஒருவரை மதித்து அழைக்கும் சொல் 21.சாப்பிடு 22.முதிர்வால் வருவது

## மேலிருந்து கீழ்

1. நாட்டிய வகை 2.திடீரென என்பதைக் குறிப்பது 3.ஒரு தூர அலகு 4.பர்வதம் 5.இரத்தம் 8.சமூகத்தின் சிறிய அலகு 10.நகரம் 11.கூட்டல் குறி 12.மகாத்மாகாந்தி கடைசியாக உதிர்த்த சொல் 13.மாயம் செய்யும் கிருஷ்ணன் 14.சிறைக்குச் சென்றால் இதையே உண்ண வேண்டியிருக்கும் என்பர். 16.ஆம்பல் வகை மலர், 17.தகைமைத் தன்மை 18.நோய் 20.அண்மையில் ஆங்கில அகராதியில் இணைக்கப்பட்ட தமிழ்ச் சொல்

### சொற்சிலம்பம் போட்டி 48 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.விருந்து, 4.நல்க, 6.பசி, 7.வாதம், 9.கரடி, 10.விதி, 11.துவீபம், 13.களரி, 14.தடு, 15.பாலம், 16.சாம், 17.வட, 18.பதி, 20.சுயம்வரம், 22.கும்பல், 23.சிம்பு

**மேலிருந்து கீழ்**

1.விபத்து, 2.ருசி, 3.துவாரம், 4.நம், 5. கத்தரி, 8.தடி, 10.விளம்பரம், 12.வீதம், 13.கல, 15.பாடம், 16. சாக்கு, 17.வயல், 19.திம்பு, 20.சுப, 21.வசி

**சொற்சிலம்பம் போட்டி இல.50**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**13.08.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**

தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 48இல் வெற்றி பெற்றோர் விபரம்

**1 ஆம் பரிசு**

**சி.பிரணவி**
187, உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி

**2 ஆம் பரிசு**

**வி.பிருத்திகா,**
6ஆம் வட்டாரம், குமுழமுனை,
முள்ளியவளை

**3 ஆம் பரிசு**

**சி. பத்மயோகன்,**
காந்தாமனை, 22/12, விதானை
வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

**4 ஆம் பரிசு**

**துளசி கேதீசன்,**
முதலியார் லேன், கோப்பாய்

**5 ஆம் பரிசு**

[illegible]
2ஆம் [illegible] வீதி, [illegible]
வட்டுக்கோட்டை

# கி.ரா: நினைவுகள்

முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் (கி.ரா.வின்) நண்பரும் எழுத்தாளருமான பேராசிரியர் அ.ராமசாமி, அவரின் 40 ஆண்டு கால நண்பர். அவரோடு கொண்ட நட்பை 'உதயன் – சஞ்சீவி' வாசகர்களுக்காக நினைவுக் குறிப்புகளாகத் தருகிறார்.



**பேராசிரியர் அ.ராமசாமி**
*தமிழ்த்துறை (பணி நிறைவு) மனோன்மணி சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, தமிழ்நாடு.*

29

புதுச்சேரி பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு நா.சுப்பிரமண்யம். கி.ராஜ நாராயணன் போன்றோரை வருகைதரு பேராசிரியர்களாக அழைத்தது போல சங்கரதாஸ்சுவாமிகள் நிகழ் கலைப்பள்ளியிலும் ஒருவரை அழைக்கலாம் என்ற பேச்சு வந்தது. அப்போது உடனடியாக நினைவில் வந்த பெயர் பிரபஞ்சன். நாடக இலக்கியம் என்றொரு தாள் ஒவ்வொரு பருவத்திலும் உண்டு. செவ்வியல் நாடகங்கள் வரிசையில் இந்திய நாடகங்கள், ஐரோப்பிய நாடகங்கள், நவீன இந்திய நாடகங்கள் என அத்தாள்களுக்குப் பெயர். இந்தத் தாள்களில் ஒன்றிரண்டைப் பாடம் சொல்வதற்காக அவரை அழைக்கலாம் என்று பேசினோம். தமிழ்நாட்டில் நடந்த பாதல் சர்க்கார் நாடகப் பட்டறையில் கலந்துகொண்டு பயிற்சி பெற்றவர் அவர். அந்த உத்வேகத்தில் அவர் எழுதிய முட்டை, அகல்யா என்ற இரண்டு நாடகப் பிரதிகளும் கவனிக்கத்தக்க நாடகங்கள் தான் என்று சொன்னேன். பாதல் சர்க்கார் பட்டறையில் கலந்துகொண்ட முனைவர் கே.ஏ.குணசேகரன், பிரபஞ்சன் செய்முறைப் பயிற்சியில் அதிகம் ஈடுபாடு காட்டியவர் அல்ல; ஆனால் நாடகப் பிரதிகள் சார்ந்து நல்ல வாசிப்புடையவர் என்று சொன்னார். அவரை அழைப்பது என்று முடிவான பின், பல்கலைக்கழகத்துக்கு அனுமதி கேட்டு கோப்பு அனுப்பவேண்டும். அதனை ஏற்று ஒப்புதல் தரவேண்டியது துணைவேந்தர். அவரிடம் போவதற்கு முன்பே குறிப்பு எழுதும் பிரிவு அலுவலர், துணைப்பதிவாளர், இணைப்பதிவாளர், பதிவாளர் போன்றவர்கள். " நாடகத்துறையில் இருக்கும் ஆசிரியர்கள்: மாணாக்கர் விகித அடிப்படையில் இப்போது இருக்கும் ஆசிரியர்களே போதும்" என்று குறிப்பு எழுதிவிட்டால், அதை மாற்றும் அதிகாரம் இருந்தாலும் துணைவேந்தர்கள் அப்படிச் செய்வதற்கு யோசிப்பார்கள். அதனால் கோப்பைத் தயாரிப்பதற்கு முன்பே துணைவேந்தரோடு பேசிவிட்டால், வேலை எளிதாகிவிடும். துணைவேந்தரோடு கலந்துரையாடியதன் அடிப்படையில் இந்தக் குறிப்பு அனுப்பப்படுகிறது என்று தொடங்கிவிடலாம். அதன்பிறகு ஒருவரும் எந்தக் குறிப்பும் எழுதமாட்டார்கள்; தடைபோட மாட்டார்கள். அப்படிச் செய்யும் வல்லமை எல்லாத் துறைத் தலைவர்களுக்கும் இருப்பதில்லை. சில தலைவர்கள் 'நான் ஏன் அவரைப் பார்க்கவேண்டும்; கோப்பைப் பார்த்து அனுமதிக்க வேண்டியது பல்கலைக்கழக நிர்வாகத்தின் கடமை' என அனுப்பி வைப்பார்கள். இந்திரா பார்த்த சாரதியும் சில நேரங்களில் அப்படிச் செய்வார். செய்துவிட்டுத் தகவலைத் தொலைபேசி வழியாகச் சொல்லிவிடுவார். பிரபஞ்சனை அழைப்பதற்கான கோப்பைத் தயாரிப்பதற்கு முன்பே துணைவேந்தரோடு பேசுவதோடு, அழைக்கப்பட்டால் அதனை ஏற்றுப் பிரபஞ்சன் வருவாரா? என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னேன். "ஆமாம், அதுவும் முக்கியம்தான். அனுமதி வாங்கியபின் அவர் வர மறுத்துவிட்டால் சிக்கலாகிவிடும். நீங்களே பிரபஞ்சனைப் பார்த்துப் பேசிவிட்டு வந்துவிடுங்கள்' என்று சொல்லிவிட்டார் இ.பா.

பிரபஞ்சனிடம் பேசும்போது எல்லா நாளும் துறைக்கு வரவேண்டியதில்லை. வருகைப் பதிவேட்டில் ஒப்பம் இடவேண்டியதில்லை. வாரத்தில் இரண்டு நாள்கள் வந்து பாடம் சொல்லிவிட்டுப் போகலாம் என்ற கட்டுப்பாடற்ற விதிகளோடு அழைக்கிறது என்பதையும் சொல்லி விடுங்கள் என்றார், அவரைச் சந்திப்பதற்கு முன்னால் கி.ரா. வீட்டிற்குப் போனேன். பிரபஞ்சனை அழைக்கப்போகிறோம் என்ற தகவலைச் சொன்னேன். ' நல்ல காரியம் இது. பாண்டிச்சேரியில் இருக்கும் பல்கலைக்கழகம் தமிழ் நாட்டுக்காரங்க ளுக்கு மரியாதெ செய்யுது; புதுச்சேரிக்காரங்களே கண்டுக்கிறது இல்லென்னு ஒரு வருத்தம் இங்கெ நிறையப் பேருக்கு இருக்கு. அதே இது மாத்தும். அத்தோட அவரும் பொருத்த மானவர்' என்று சொல்லிவிட்டு அவர் எப்போதாவது தான் புதுச்சேரிக்கு வருவாராம். சென்னையில்தான் அதிகம் இருப்பார் என்று கேள்விப்பட்டேன் என்றார்.


'பிரபஞ்சனைப் பார்க்கணும்னு முகவரியெல்லாம் வாங்கி வச்சிருக்கேன்; ஆனா அவரெ பார்க்கிற வாய்ப்பு இன்னும் வரல' என்று சொல்லிவிட்டு, அவர் முகவரிகள் எழுதி வைத்திருக்கும் நாட்காட்டி ஒன்றை எடுத்து வந்தார். அதில் பிரபஞ்சனின் முகவரி இருந்தது. இந்த முகவரி எங்கெ இருக்குன்னு தெரியுமா? என்று கேட்டார். பெரியமணிக் கூண்டுக்குப் பக்கத்திலெ இன்னொரு நண்பர் இருப்பார் ;நான் அங்கெ போயிடுவேன். அவர் என்னைப் பிரபஞ்சன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போவார் என்று சொன்னேன். பெரிய மணிக் கூண்டிலிருந்து ரயில்வேஸ்டேசன் போகும் சாலையில் இருப்பதாக அவர் சொன்னார்" என்று சொல்லிவிட்டு பிரபஞ்சனின் முகவரியைக் குறித்துக் கொண்டேன்.

எழுதி முடித்து நிமிர்ந்தபோது, "இந்த ஊர்லெ ஒரு இடத்துக்கு வழிசொல்லும் போது மணிக்கூண்டுகளெச் சொல்லி இடது பக்கம் அல்லது வலதுபக்கம் என்றுசொல்கிறார்கள் கவனிச்சீங்களா? என்று கேட்டார். இந்த மணிக்கூண்டுகள் பெரும்பாலும் பிரெஞ்சுக்காரன் வைத்த கூண்டுகள்னு நெனக்கிறேன். எல்லா மணிக்கூண்டும் நல்ல உயரமா இருக்கு. ஊருக்கே நேரங்காட்டுற மாதிரி பெரிய கடிகாரங்கள். அதில்லாமெ எல்லா மணிக் கூண்டும் மஞ்சள் வண்ணத்திலெதான் இருக்கு. கடற்கரையோரத்திலே இருக்கிற பிரெஞ்சுப் பகுதியும் அதே மஞ்சள்லெ உயரம் உயரமான ஜன்னல்களோட இருக்குல்ல. பிரெஞ்சு அடையாளத்தெ இங்கெ இருக்கிறவங்க பத்திரமா வச்சிருக்காங்க" என்றார்.

அவர் சொன்னதை நானும் கவனிச்சிருக்கிறேன் என்று சொல்லிவிட்டு, பாண்டிச்சேரி நகரத்தெவிட்டு வெளியிலிருந்து வர்றவங்க மணிக்கூண்டுக்குப் பதிலா கந்தன் தியேட்டர், அஜெந்தா தியேட்டர், முருகா தியேட்டர், ராமன் தியேட்டர், ஜீவா, ஜெயராம், என்று சினிமா தியேட்டர்களைத்தான் அடையாளம் சொல்லி பாதை காட்டுகிறார்கள். கொஞ்சம் சேரிப் பகுதியின்னா கள்ளுக்கடைகளின் எண்களைச் சொல்லுகிறார்கள் என்றேன். கடலோரங்களில் இருக்கும் மீனவர்களுக்குப் பெரும்பாலும் கள்ளுக்கடை, சாராயக்கடைகள் தான் அடையாளம் சொல்லும் இடமாக இருக்கு என்று சொன்னேன். " நான் இன்னும் அப்படியான மனுசங்களெச் சந்திக்கலையே" என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

(நினைவுகளும் குறிப்புகளும் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நலம் அறிய...






மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)

# சிறுநீரகக் கற்கள்

நமது உடலிலுள்ள நச்சுக்களையும் கழிவுப் பொருள்களையும் சுத்திகரிக்கும் அடிப்படையாக இருப்பவை சிறுநீரகங்கள். ஒப்பீட்டளவில் ஆண்களே பெண்களை விட அதிகம் பாதிக்கப்படுகின்றனர். சிறுநீரகம் இரத்தத்திலிருந்து தேவையற்ற பொருள்களை வடிகட்டி மிகுதியை சிறுநீராக மாற்றி வெளியேற்றுகின்றது. சராசரியாக ஒரு மனிதனிலிருந்து நாளொன்றுக்கு 1.5 லீற்றர் சிறுநீர் வெளியேற்றப்படுகிறது. புரத வளர்சிதை மாற்றத்துக்கு பிறகு மிஞ்சும் யூரிக்கமிலம் போன்ற கழிவுப்பொருள்கள் சரிவர வெளியேற்றமடையாது இருத்தல் அல்லது தேவைக்கு அதிகமான கழிவுப் பொருள்கள் தேக்கமடைவதால் சிறுநீரகக் கற்கள் ஏற்படுகின்றன.
சிறுநீரில் அமிலத்தன்மை ஏற்படுமிடத்து யூரிக்கற்களும், காரத்தன்மை அதிகரிக்குமிடத்து சுண்ணாம்புக் கற்களும் உருவாகின்றன.
உடலில் அமிலங்களும், தாதுக்களும் அதிகரிக்கும் நிலைகளைத் தவிர, தைராய்டு சுரப்பு அதிகரிப்பு; சிறுநீரக கோளாறுகள், செரிமானக் கோளாறுகள், சிறுநீர்ப் பாதை தொற்றுகள் (UTIs) ஆகியவையும் ஒரு நபருக்கு சிறுநீரக கற்கள் உருவாகும் ஆபத்தை அதிகரிக்கின்றன.




## சிறுநீரகக் கற்கள் ஏற்படக் காரணங்கள்:

1. கோடை காலங்களில் போதிய அளவு தண்ணீர் குடிக்காமலும், சிறுநீர் வெளியேறாமலும் இருப்பது.
2. தைராய்டு சுரப்பியின் சுரப்பு அதிகமாதல்
3. நம் உணவில் சேர்த்துக்கொள்ளும் உணவுகளில் காரத்தன்மையும் அமிலத்தன்மையும் அதிகரித்தல்.
4. தேநீர் அதிகமாக உட்கொண்டால் சிறுநீரகக்கற்கள் உண்டாகும் வாய்ப்பு அதிகமாகிறது.
5. குடிதண்ணீரிலே கலந்திருக்கும் வேதிப் பொருள்களாலும், சிறுநீரகக்கற்கள் ஏற்படலாம்.

## சிறுநீரகக் கல் சிகிச்சை

சிறுநீரகக் கற்களுக்கான சிகிச்சை கல்லின் அளவையும் அதன் பாதிப்புகளையும் பொறுத்து வேறுபடுகிறது. பெரும்பாலான மருத்துவர்கள், பழமையான முறையான, கற்களை இயற்கையாக சிறுநீரின் மூலம் வெளியேற்றும் முறைக்கு முன்னுரிமை கொடுக்கிறார்கள்.

**பெரிய கற்களுக்கு**

பெரிய சிறுநீரக கற்களுக்கு சிகிச்சை அளிக்க சில மருத்துவ நடைமுறைகள் தேவைப்படலாம்:

**மருந்துகள் கொடுத்தல்**

மருந்துகள் கொடுப்பது, உருவாகி இருக்கும் கல்லின் தன்மையையும், அந்த நிலையின் தீவிரத்தையும் பொறுத்து பரிந்துரைக்கப்படும்.
இந்த மருந்துகள் கல்லில் உள்ள உப்பைக் கரைக்கவும், அதன் அளவைக் குறைக்கவும் உதவுகின்றன. ஒரு காலகட்டத்துக்கு மேல், அந்தக் கல் சிறுநீரில் எளிதாக வெளியேறும் அளவுக்கு சிறியதாக மாறக் கூடும்.

**அறுவை சிகிச்சை**

லேப்ராஸ்கோப்கள் என அழைக்கப்படும் சிறிய தொலைநோக்கு கருவிகளைப் பயன்படுத்தி, அதனை பின்புறமாக சிறுநீரகங்களுக்குள் செலுத்தி, அறுவை சிகிச்சைக்கு உள்ளாகும் நபருக்கு மயக்க மருந்து கொடுத்த பிறகு, மருத்துவர்கள் அறுவை சிகிச்சை மூலம் சிறுநீரக கற்களை நீக்குகிறார்கள். இந்த வழிமுறை தோல்வழி சிறுநீரக கல் நீக்கம் என அழைக்கப்படுகிறது. மேலும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சில நாள்கள் தங்கி இருக்க வேண்டும்.

**ஸ்கோப்கள்**

இவை, கற்கள் சிறுநீரகத்திலோ அல்லது சிறுநீர்க்குழாயிலோ தங்கி விடும் போது பயன்படுத்தப்படுகின்றன. கல் இருக்குமிடத்தைக் கண்டறிய, ஒரு மெல்லிய ஒளிரும் குழாய் சிறுநீர்ப் பாதை வழியாக சிறுநீர் குழாய்க்குள் செலுத்தப்படும், பின்னர் அது நீக்கப்படும் அல்லது உடைக்கப்படும். பெரும்பாலான இந்த வகை நடைமுறைகளில், குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும் மயக்க மருந்து கொடுத்து, வெளிநோயாளி நடைமுறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

**அதிர்வுஅலை சிகிச்சை**


அதிர்வலைகள் சிலநேரங்களில், சிறுநீரில் அடித்துக்கொண்டு வெளியே வருவதற்காக, சிறுநீரக கற்களை உடைப்பதற்கு அல்லது நொறுக்குவதற்கு தோல் வழியாக செலுத்தப்படுகிறது. இந்த நடைமுறை ஒரு மணி நேரம் வரை நீடிக்கும், மேலும் கொஞ்சம் வலியையும் ஏற்படுத்தக் கூடும். இந்த நடைமுறையைப் பின்பற்றும்போது, சிறு காயங்கள் மற்றும் ரத்தப்போக்கு போன்ற சில அசௌகரியங்கள் ஏற்படலாம்.
மருத்துவர்கள் வழக்கமாக, அந்தக் கல்லை சேகரித்து அதன் தன்மையை அறிய பரிசோதனைக்கு அனுப்புவதைப் பரிந்துரைக்கிறார்கள்.
இது, அடுத்த கட்ட சிகிச்சையைத் தீர்மானிக்கவும், வாழ்க்கைமுறை அளவீடுகளைப் பின்பற்றி அவை திரும்ப உருவாகாமல் தடுக்கவும் உதவுகிறது.

**சிறிய சிறுநீரக கற்களுக்கு...**

இவை நீக்குவதற்கு மிக எளிமையானவை. மருத்துவர்கள் வழக்கமாக, கற்கள் சிறுநீரில் அடித்துக்கொண்டு வெளியேறுவதற்காக, அதிக அளவு திரவ பாணங்களைக் குடிக்க பரிந்துரைக்கிறார்கள். அவர்கள், இந்த செயல்முறையில் வலியைக் குறைக்க மிதமான வலி நிவாரணிகளையோ அல்லது கல் அதிக ஆற்றலுடன் வெளியேற தசைத் தளர்வு மருந்துகளையோ பரிந்துரைக்கலாம்.

## வாழ்க்கைமுறை நிர்வாகம்

சிறுநீரக கற்களை பற்றிய மோசமான உண்மை என்னவென்றால், அவை திரும்ப வருவதற்கான வாய்ப்புகள் வழக்கத்துக்கு மாறாக மிக அதிகம். இதன் அர்த்தம், சிகிச்சை முக்கியமானது என்பது மட்டுமல்ல, அது எப்போது உருவானது மற்றும் அதன் பிறகான நம்முடைய தேர்வுகளும் முக்கியம் என்பதே. குணமடைந்த பிறகு, ஒரு வாழ்க்கை முறையை நிர்வகிக்கவும், பின்பற்றவும்.



## சிறுநீரகக் கற்கள் ஏற்பட்டு குணமடைந்த பின் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்

1. அதிகமான திரவ பானங்கள், முதன்மையாக தண்ணீர் அருந்துதல்.
2. முன்னர் உருவான வகையிலான சிறுநீரக கற்கள் உருவாவதற்கு காரணமாகிற, உணவுகளைத் தவிர்க்கும்படியான உணவுப் பழக்க வழக்கத்துக்கு மாறுதல்.
3. உயரத்துக்கும் வயதுக்கும் ஏற்ற எடையை நிர்வகித்தல் மற்றும் பராமரித்தல்.
4. இரத்தம் மற்றும் சிறுநீரில் உள்ள தாதுப் பொருள்கள் மற்றும் யூரிக் அமிலத்தின் அளவுகளைக் கண்காணிக்கும் தொடர்ச்சியான உடல்நல மற்றும் ரத்தப் பரிசோதனைகள்.
5. உடல் நலத்தின் மீது அக்கறையுடன் இருத்தல் மற்றும் ஒருமுறை உங்களுக்கு சிறுநீரக கற்கள் ஏற்பட்டு இருந்தால், மிகவும் எளிதாக வரக்கூடிய UTISஐ தடுக்க சுய சுத்தத்தைப் பராமரித்தல்.
6. உணவில் ஆக்சாலிக் அமிலத்தின் அளவும், புயூரினின் அளவும் குறைவாகவே இருக்கவேண்டும். இத்துடன் சுண்ணாம்பு மற்றும் பாஸ்பரஸ் சத்தை அதிகம் சேர்த்துக் கொள்ளக்கூடாது.
7. உணவு மூலமாக ஏற்கனவே உருவான கற்களை நீக்க இயலாது. ஆனால், புதியதாக கற்கள் உருவாகாமல் பார்த்துக்கொள்ளலாம்.

## சிறுநீரக கற்கள் ஏற்படின் உருவாகும் அறிகுறிகள்

ஆரம்பக் கட்டத்தில் அதிகப்டியான அறிகுறிகளை காட்டாது. கல் நகர ஆரம்பிக்கையில் அல்லது சிறுநீரகக் குழாய் வழியே செல்லும் போது அசௌகரியமேற்பட்டு அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கும்.




### அந்த அறிகுறிகளில் சில:

- சிறுநீர், சிவப்பு, வெளிர்சிவப்பு, அல்லது அடர் பழுப்பு நிறத்துக்கு மாற்றமடைதல்.
- அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டுமென்கிற தீவிரமான உந்துதல்.
- சிறுநீரில் ஒரு விசித்திரமான வாடை.
- ஒவ்வொரு முறையும் குறைந்த அளவே சிறுநீர் கழித்தல்.
- சிறுநீர் கழிக்கும் போது சிறுநீரகக் குழாயில் வலியை உணருதல்.
- குமட்டல் மற்றும் வாந்தி.
- பின் முதுகு மற்றும் பக்கவாட்டில் வலி.
- இடுப்புப் பகுதி மற்றும் அடிவயிற்றில் வலி.

| சுண்ணாம்பு சத்து அதிகம் உள்ள உணவுப் பொருள்கள் | பாஸ்பேட் அதிகம் காணப்படும் உணவுகள் | ஆக்ஸலேட் அதிகம் காணப்படும் உணவுகள் |
|---|---|---|
| அகத்திக்கீரை, முருங்கை இலை, பால், தயிர், கசகசா பொடி, மீன், இறால், நண்டு, [illegible] | தானிய வகைகள், விதைகள், எண்ணெய் வித்துக்கள், கரட், பால், பாலைச் சார்ந்த உணவுகள், முட்டை, இறைச்சி, [illegible] | கீரை வகைகள், டீ, காபி, கோகோ, சாக்லேட், பீட்ரூட், முந்திரி, கருணைக்கிழங்கு, பீன்ஸ், நெல்லிக்காய், அத்திப்பழம் வெண்டைக்காய், பாதாம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலித் தேசியம் பேசுவோரால் ஏமாற்றப்பட்டோம்



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்து அங்கு நிரந்தர மருத்துவரை நியமிக்க வேண்டும் என்று சுகாதாரத் திணைக்களம் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. அப்போது எந்தவொரு தமிழ் மருத்துவரும் அந்த இடத்துக்குச் செல்ல விரும்பவில்லை. காரணம் என்னவெனில் அங்கு தண்ணீர் , தொலைபேசி , மின்சாரம், போக்குவரத்து என்று எந்தவொரு வசதியுமில்லை. அவ்வளவு ஏன் கடைகள் கூட இல்லை. அது ஒரு வறண்ட பிரதேசம். அத்துடன் இராணுவத்தினருடைய முன்னணிக் காவலரண்கள்கூட மிக அண்மையாக 3 கிலோமீற்றர் தூரத்திலேயே இருந்தன. அந்த அச்சம் காரணமாகவும், வசதியின்மைகள் காரணமாகவும் எந்தவொரு தமிழர் மருத்துவர்களும் அங்கு சென்று கடமையாற்ற முன்வரவில்லை.

அப்போது அந்த மக்களினுடைய துயர வாழ்க்கையை அறிந்து, தமிழனாகப் பிறந்த நான் அத்தகைய மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற உந்துதலால் அங்கு சென்று பணியாற்றினேன். அதன் தொடர்ச்சியாக மாவிலாறுச் சமர் , வாகரைச் சண்டை போன்றன நடைபெற்ற காலத்தில்கூட அங்குதான் இருந்தேன். 2006 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் தொடக்கம் அந்தப் பகுதியை இராணுவத்தினர் முற்றுமுழுதாகக் கைப்பற்றும் வரைக்கும்- 2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை- பணியாற்றி, அதன் பின் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் சென்றேன்.

அப்பொழுது இராணுவப் புலனாய்வுத் துறையினராலும், துணைக்குழுக்களாலும் எனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அதனால் முல்லைத்தீவுக்குச் சென்று அங்கு எனது பணியைப் பொறுப்பேற்று மருத்துவமனைகளில் நோய்த் தடுப்புப் பிரிவு மற்றும் மலேரியாத் தடுப்புப் பிரிவு போன்றவற்றிலும் பணியாற்றிக் கொண்டிருந்தேன். இந்தக் காலத்தில் -2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் – முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றப் பணிக்கப்பட்டேன். அதிலிருந்து இறுதி யுத்தம் வரைக்கும் அங்கு மருத்துவராகக் கடமையாற்றி , இறுதி நேரத்தில் காயமடைந்து இராணுவத்தினரால் சிறைப்பிடிக்கப்பட்டு, நான்காம் மாடியிலிருந்து விடுதலையானேன். அதன் பின்னரும் தாயகத்தில் இரண்டு வருடங்கள் பணியாற்றி அங்கு இனி நான் வசிக்க முடியாது என்ற சூழ்நிலை வந்தபோது புலம்பெயர்ந்து இங்கே (அமெரிக்காவில்) வாழ்ந்து வருகிறேன். யுத்த நினைவுகளிலிருந்து இன்னும் மீள முடியாமல் தவிக்கும் பல ஆயிரம் மக்களில் நானும் ஒருவன்.

**கே:** **படையினரின் கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்த பின்னர் உங்களை அரச தரப்பு, போர்க்கைதிகள் போல கையாண்டதா அல்லது மருத்துவர்களுக்குரிய மதிப்பளித்ததா?**

**ப:** ஆரம்பத்தில் எங்களை போர்க்கைதிகள் போலத்தான் இலங்கை அரசாங்கம் நடத்தியது.

இறுதிக்கணங்களில் நான் காயப்பட்டவுடன் எனது நுரையீரலுக்குள் கிட்டத்தட்ட ஒரு லீற்றர் குருதி இருந்தது. சுவாசிக்க முடியாத ஒரு நிலை. வயிற்றுப் பகுதியில் காயமேற்பட்டு, சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய அபாயகரமான நிலையிலிருந்தேன். எனது வலது கைக்கு செல்கின்ற நரம்பு முற்று முழுதாக அறுபட்டதால், வலது கையில் இயக்கமோ, உணர்ச்சியோ எதுவுமே இல்லாத ஒரு கட்டம். நான் காயமடைந்து சுமார் 30-40 நிமிடங்களுக்குள் இராணுவத்தினர் அந்தப் பகுதிக்குள் வந்துவிட்டார்கள். வந்தவர்கள் எங்களை தங்கள் பகுதிக்கு நகர உத்தரவிட்டார்கள். அப்போது என்னுடன் நின்ற சக மருத்துவர்கள் "இவர் டொக்டர் வரதன். பிராந்தியப் பணிப்பாளர். காயமடைந்துவிட்டார். அவசரமாக சிகிச்சையளிக்க வேண்டும்" என இராணுவத்தினரிடம் கேட்டனர். அதற்கு, "நீங்கள் விடுதலைப் புலிகளுக்கு சிகிச்சை அளித்த வைத்தியர்கள் என்று எமக்குத் தெரியும். சர்வதேச ஊடகங்களுக்கு இங்கே நடக்கும் பிரச்சினைகளைக் கூறி எங்களுக்கு அவப் பெயரை ஏற்படுத்தியவர்கள். உங்களை இதிலேயே சுடுவோம்" என ஆத்திரத்துடனும் கோபத்துடனும் படையினர் பதிலளித்தார்கள்.

அந்த இடத்தில் இருந்து என்னால் நடந்து செல்ல முடியவில்லை. அதனால் என்னை ஏனைய மருத்துவர்கள் தூக்கிக்கொண்டு சென்றனர். அப்போது மக்களை ஏற்றிக்கொண்டு இராணுவத்தினரின் பஸ் ஒன்று அங்கே வந்தது. அதை மறித்து "டொக்டர் காயமடைந்து விட்டார். இவரை பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு போங்கள்" என்று சக மருத்துவர்கள் கேட்டனர். அதற்கும் "இவங்கள பஸ்ஸில ஏத்தமாட்டன். இவங்களுக்கு மேலதான் பஸ்ஸ ஏத்துவன்" என்று கோபமாக அட்ந்த பஸ்ஸின் இராணுவச் சாரதி பதிலளித்தார். அதன் பின்பு எனக்கு ஆரம்ப சிகிச்சை அளித்த இராணுவத்தினரின் மருத்துவப் பிரிவினர், என்னை வவுனியா மருத்துவமனைக்கு அனுப்புவதாக அழைத்து சென்று, கிளிநொச்சி யில் எந்தப் பகுதி என்றே தெரியாத இடத்தில் கிட்டத்தட்ட 8 நாள்களுக்கு மேல் தடுத்து வைத்திருந்தார்கள்.எனது காயத்துக்குரிய பூரண சிகிச்சை எதுவும் வழங்கப்படாமல், வலிநிவாரணம் எதுவும் தராமல் அங்கே தடுத்து வைத்திருந்தார்கள். அங்கிருந்த பொழுது ஒருமுறை, எனது கண்களைக் கட்டி, என்னை சுட்டுக் கொலை செய்யவும் இழுத்துச்சென்றிருந்தார்கள். எனினும் பின்பு அவர்களின் உயர் அதிகாரிகளின் கட்டளைக்கமைய என்னை சுடாமல் அந்த இடத்திலேயே சிறை வைத்திருந்தார்கள்.

பின்பு என்னை நான்காம் மாடிக்கு ( கொழும்புக்கு) அழைத்துச் சென்றார்கள். நான்காம் மாடியில் கூட ஆரம்பத்தில் என்னுடன் கடுமையாக நடந்து கொண்டார்கள். விசாரணைகளில் நான் விடுதலைப் புலி உறுப்பினராகவே அல்லது அவர்களுடன் வேலை செய்தவராகவே அவர்களின் ஆரம்பத் தொனி இருந்தது. பின்பு நாங்கள் சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பிய ஆதாரங்களையும், கடிதங்களையும் பார்த்து, விசாரணைகளின் பின்பு நாங்கள் அரசாங்க மருத்துவர்களாகவே செயற்பட்டதை அறிந்துகொண்டார்கள். அதன் பின்பே அவர்கள் எங்களுக்குரிய மரியாதையைத் தந்தார்கள்.

**கே:** **இறுதிப்போரின் பின்னர் முள்ளிவாய்க்காலில் இருந்து வெளிவந்த நீங்கள் உள்ளிட்ட சகல மருத்துவர்களும் " புலிகள் பொதுமக்களை மனிதக்கேடயமாக பயன்படுத்தினார்கள் "என்று ஒரு ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தீர்கள். அப்படிச் சொல்லுமாறு பலவந்தப்படுத்தப்பட்டீர்களா? அல்லது உண்மையிலேயே மனிதக்கேடயமாக மக்களை புலிகள் பயன்படுத்தினார்களா?**


**ப:** 1991ஆம் ஆண்டிலிருந்து விடுதலைப் புலிகள் தங்கள் கட்டுப்பாட்டிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுக்கு செல்பவர்களுக்கு ஒரு பாஸ் நடைமுறை மூலம் அனுமதி வழங்கியிருந்தார்கள். அதனை முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் முடியும் வரைக்கும் அவர்கள் கடைப்பிடித்திருந்தார்கள். அதாவது இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வருபவர்களாயினும் சரி , விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் செல்பவர்களும் சரி விடுதலைப்புலிகளின் அனுமதியை ('பாஸ் ') பெறவேண்டும். அதாவது வெளிநாடுகளுக்கு செல்வதற்கு பாஸ்போர்ட் ,விசா எடுப்பது போன்ற நடைமுறையை புலிகள் கொண்டிருந்தார்கள்.

அதேவேளை விடுதலைப் புலிகளின் முக்கியமான யுத்த முகாம்களைத் தவிர மற்ற அனைத்து அலுவலகங்களும் , முகாம்களும் மக்களினுடைய பகுதிக்குள் தான் காலம் காலமாக இருந்து வந்தன. அது இறுதி வரைக்கும் அப்படியேதான் இருந்தது. ஆனால் எந்தவோர் இடத்திலும் விடுதலைப் புலிகள் மக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தியதற்கான எந்தவித ஆதாரமும் இருக்கவில்லை. அதாவது மக்களை முன்னுக்கு செல்லவிட்டு பின்னால் பதுங்கி நின்று எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதலைப் புலிகள் தாக்கவில்லை. ஆனால், யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப் புலிகளின் பகுதிக்கு முன்னேறுகின்ற பொழுது இராணுவத்தினர் தான், மக்களை முன்னுக்கு அனுப்பி அதன் பின் சென்ற ஒரு வரலாற்றுப் பதிவு இருக்கின்றது. அதற்குப் பின்பு மனிதக் கேடயங்களாக மக்களை விடுதலைப் புலிகளோ இராணுவத்தினரோ பயன்படுத்த வில்லை என நினைக்கிறேன். ஆனால் வாகரையிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுக்கு மக்கள் செல்கின்ற போது எங்களுக்கு எதிர்த்திசையில் இராணுவத்தினர் விடுதலைப் புலிகள் இருந்த வாகரைப் பகுதிக்கு வந்தமையை அறியக்கூடியதாக இருந்தது. ஆனால் அந்த இடத்தில் யுத்தம் எதுவும் நடக்கவில்லை.

**கே:** **இறுதிப்போரின் பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த நீங்கள் தொடர்ந்தும் தாயகத்தில் பணிபுரியாமல், ஏன் நாட்டை விட்டு வெளியேற நினைத்தீர்கள்?**

**ப:** உண்மையில் அது ஒரு துர்ப்பாக்கிய முடிவு. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததற்கு பின்பும் கூட மஹிந்த ராஜபக்ச மற்றும் அவருடைய தம்பியும் தற்போதைய ஜனாதிபதியுமான கோத்தாபயவின் ஆட்சியில் இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை.யுத்தம் நிறைவடைந்த பின்பும் கூட வெள்ளைவானில் கடத்தப்படுவது, மக்களை அச்சுறுத்துவது, கப்பம் பெறுவது போன்ற மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் நடந்த வண்ணமே இருந்தன. சிறையிலிருந்து விடுதலையான பின்பும்கூட என்னை அவர்கள் கண்காணித்து வருவதை பல சம்பவங்கள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. அதேநேரம் ஒட்டுக் குழுக்களும் எங்களைக் கண்காணிப்பது மட்டுமல்லாமல் என்னிடமிருந்து பணம் பறிப்பதற்கும் முயற்சித்தார்கள். அவர்களின் சொற்படி நான் நடக்க மறுத்தபோது "நீயும் உன்னுடைய குடும்பம், மற்றும் உறவினர்கள் எல்லோரும் எங்கே வசிக்கிறீர்கள் என்பது எமக்குத் தெரியும்"என்று சொல்லி அச்சுறுத்திக்கொண்டிருந்தார்கள்.

அத்துடன் எங்களுடைய சுகாதாரத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் எங்களுடன் பாரபட்சமாக நடந்து கொண்டமையும் ஒரு முக்கிய காரணம்.அப்போது வடக்கு மாகாண ஆளுநராக இருந்த சந்திரசிறி , எனக்கு வழங்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்துக்கான இடமாற்றத்தை உடனடியாக ரத்துசெய்து பல பழிவாங்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். அதன் தொடர்ச்சியாக நான் இலங்கையில் வசிக்க முடியாத ஒரு அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. அதனாலேயே புலம்பெயர்ந்தேன்.




**கே:** **புலம்பெயர்ந்த பின்னர் உங்கள் வாழ்வியல் பற்றி...?**

**ப:** வெளிநாட்டுக்கு வந்ததற்குப் பின்பு கூட பல வருடங்களாக தற்போதுகூட போர்க்கால வாழ்வின் நினைவுகள் தான் அடிக்கடி கனவிலும் நனவிலும் வந்து கொண்டிருக்கின்றன. அந்த அவலம் எங்கள் மனதிலிருந்து என்றைக்குமே அகற்ற முடியாத அல்லது மறக்க முடியாத சம்பவங்களாக மாறிவிட்டன. அதனால் இங்கு வந்த பின்பும் கூட, எங்கள் மக்களுக்கும் அங்கு நடந்த இனப் படுகொலைக்கும், போர்க் குற்றத்துக்கும் ஒரு நியாயம் கிடைக்க வேண்டி பாடுபடுகின்ற நிர்ப்பந்தம் இருக்கிறது. அதேநேரம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு பொருத்தமான ஒரு அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு நாங்கள் எல்லோரும் ஒன்றிணைய வேண்டிய தேவையும் இருப்பதால், அந்த வழியில் தொடர்ந்தும் பயணித்துக் கொண்டிருக்கிறேன். அதேநேரம் என்னுடைய மருத்துவப் படிப்பை நிறைவுசெய்து பயிற்சிகள் பெற்று இங்கே தொடர்ந்தும் மருத்துவராக வேண்டும் என்ற கடினமான பாதையில் அதற்கான முயற்சிகளையும் செய்துகொண்டிருக்கிறேன்.

**கே:** **நாட்டை விட்டு வெளியேறிய உங்கள் முடிவு சரியென இப்போதும் நினைக்கிறீர்களா?**

**ப:** அந்த முடிவு இப்பொழுதும் பிழை என்று தான் நினைக்கிறேன். அப்போதிருந்த ஒரு அசாதாரண சூழ்நிலை, நான் போரின் போது காயப்பட்ட நிலைமை, சிறைப்பிடிக்கப்பட்ட நிலைமை போன்ற அந்த துயர சம்பவங்கள், என் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இருந்த கண்காணிப்புக்கள் மற்றும் அச்சமூட்டும் நடவடிக்கைகள் என்பனவே நான் வெளியேற வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருந்தன . ஆனால் வெளிநாட்டு வாழ்க்கை என்பது இலங்கையிலிருக்கும் மக்கள் அனைவரினதும் மனதில் இருப்பதைப் போன்று ஒரு போதை மட்டுமே . வெளிநாட்டு வாழ்க்கை கற்பனையில் நன்றாக இருக்கிறதே தவிர நடைமுறையில் எங்களைப் போன்றவர்களுக்கு பொருத்தமில்லாத வாழ்க்கை என்று தான் நினைக்கிறேன். இலங்கையில் இருப்பதைப் போல இங்கே எவரும் சந்தோஷமாக இல்லை என்பதே என்னுடைய கருத்து.

**கே: மருத்துவரான உங்களுக்கு எப்படி திரைப்படத்துறையில் ஆர்வம் ஏற்பட்டது?**

**ப:** நாங்கள் சிறுவயதில் இருக்கின்ற காலத்தில் திரைப்படங்களைப் பார்த்துவிட்டு, அதில் வரும் நடிகர்களைப் போல பாவனை செய்யும் பழக்கம் பலருக்கும் உண்டு. அப்படி எனக்கும் இருந்தது. ஆனால் திரைப்படத் துறையில் நான் நேரடியாகப் பங்குபற்ற வேண்டும் அல்லது நடிக்க வேண்டும் என்று எனக்கு எந்த எண்ணமும் இருந்ததில்லை.

கனடாவில் தை மரபு திங்கள் நிகழ்வில் நான் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தேன். அங்கு முள்ளிவாய்க்கால் நினைவு பற்றியும் ஒரு கருத்துரை வழங்கினேன். அங்கு ஏற்கனவே சில குறும்படங்களை இயக்கியிருந்த இயக்குநர் தனேஸ்கோபால் என்னுடைய அந்தக் கதைகளை மேலும் கேட்டு இதனை ஆவணப்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார். அவருடைய நண்பர்கள் அடங்கிய வெண்சங்குக் கலைக் கூடத்தினர் இந்த முயற்சிக்கு தாங்கள் ஒத்துழைப்பு வழங்குகிறோம் எனக் கூறியிருந்தார் கள். அதனடிப்படையில் பல்வேறுபட்ட முயற்சிகள், சிரமங்கள், கலந்துரையாடல்கள் என்று படத்தை உருவாக்க முனைந்தோம். இந்தப் படத்தில் என்னுடைய கதாபாத்திரத்துக்கு வேறு ஒருவர் நடிப்பதை விட நான் நடித்தால் பொருத்தமாகவும், இயல்பாகவும், உண்மைத் தன்மையாகவும் இருக்கும் என்று எல்லோரும் அபிப்பிராயப்பட்டனர். அதன் பின்பு நான் இந்தியாவுக்கு சென்று அங்கு 4, 5 நாள்கள் கூத்துப்பட்டறை என்ற இடத்தில் கப்ரியல்லா என்பவரின் வழிநடத்தலில் பயிற்சிகள் பெற்றேன். அதில் நடிப்புத் தொடர்பான பல முக்கிய விடயங்களையும், நுணுக்கங்களையும் கற்றுக்கொண்டேன். அது திரைப்படத்தில் நான் நடிப்பதற்கு பெரும் உதவியாக இருந்தது.

**கே: 'பொய்யா விளக்கு' திரைப்படம் கருக்கொண்டது எப்படி?**

**ப:** "இது ஒரு முக்கிய கதை , வரலாற்றுக் கதை, எம் இனத்துக்கு நடந்த இன அழிப்பு. இதை எமது இளம் சந்ததியினருக்கும் பிற மொழி பேசுபவர்களுக்கும் இன்று மட்டுமல்லாது பல ஆண்டுகள் கடந்தும் நிலைத்து நிற்கும் ஒரு ஆவணமாக கொண்டு வர வேண்டும்" என்று கனடாவில் இருக்கின்ற இயக்குநர் தனேஷ்கோபாலின் எண்ணத்தில் உருவானதே இந்த 'பொய்யாவிளக்கு' திரைப்படம். அதற்கு நான் என்னாலான ஒத்துழைப்புக்களை வழங்கியிருந்தேன். படத்தில் வரும் பெரும்பாலான காட்சிகள், இந்தியாவின் தமிழகத்திலும் சில காட்சிகள் கனடாவிலும் படமாக்கப்பட்டு, உருவாக்கப்பட்டன.

**கே: பொய்யா விளக்கு உருவாக்கத்தில் ஏதும் சிக்கல்களை எதிர்கொண்டீர்களா?**

**ப:** நிறைய சிக்கல்களை எதிர்நோக்கியிருந்தோம். ஆரம்பத்தில் மிகப் பெரும் பிரச்சினையாக நிதிப் பங்களிப்பே இருந்தது. இந்தப் படத்தை உருவாக்குகின்ற முயற்சியில் இறங்கியபோது பல பணம் படைத்தவர்கள், வியாபாரிகள், வர்த்தகர்கள் இந்தப் படத்துக்கு தாங்கள் நிதிப் பங்களிப்பை செய்வோம் என்றும் ஆதரவு வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தார்கள். அதனால் இந்தப் படத்தின் கதையும் அவர்கள் வழங்கிய உறுதிமொழியின் அடிப்படையில் குறிப்பிடதொரு 'பட்ஜெட்டுக்கு' ஏற்றவாறு எழுதப்பட்டிருந்தது. ஆனால் அவ்வாறு உறுதியளித்தவர்களில் கிட்டத்தட்ட 99 வீதமானவர்கள் பின்னர் நிதிப் பங்களிப்பு செய்ய மறுத்துவிட்டார்கள். அதன் பின்பு இந்தப் படம் எடுக்க இரண்டு மூன்று மாதங்கள் தாமதமாகியது. மீண்டும் நாம் பல நாடுகளில் உள்ளோரிடம் தொடர்புகொண்டு உதவி கேட்டோம். பொதுமக்கள் மட்டுமன்றி பெரும்பான்மையான தமிழ் அமைப்புக்களும் கூட இந்தப் படத்தை நல்ல முறையில் எடுப்பதற்கு உதவி செய்யவில்லை. அது இந்தப் படத்திலுள்ள சின்ன சின்ன குறைபாடுகளுக்கும் ஏதுவாக அமைந்துவிட்டது. இப்போது ஒருவாறு அமேசான் தளத்தில் படத்தை வெளியிடும் வரை பல நெருக்கடிகள் தொடரவே செய்தன.

**கே: திரையரங்கில் வெளியிடாமல் ஏன் அமேசான் தளத்தில் வெளியிட்டீர்கள்?**

**ப:** பதில்: 2019 ஆம் ஆண்டு பொய்யா விளக்கின் படப்பிடிப்பை நிறைவு செய்ததன் பின்பு லண்டன், கனடா போன்ற நாடுகளில் திரையிட்டு மக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்தோம். அவர்களுடைய அபிப்பிராயங்கள் மற்றும் அந்தப் படத்திலுள்ள சிறுசிறு குறைபாடுகளை நிவர்த்தி செய்து 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் படத்தை முற்றுமுழுதாகப் பூரணப்படுத்தி கனடா, அமெரிக்கா, லண்டன் போன்ற நாடுகளில் ஆரம்பத்தில் திரையிட்டோம். அடுத்து எல்லா நாடுகளிலும் திரையிடும் முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை தற்போது உலகையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் கொரோனாத் தாக்கம் ஏற்பட்டது. பல நாடுகளில் ஊரடங்கு அறிவிக்கப்பட்டு திரையரங்குகள் முற்றுமுழுதாக மூடப்பட்டன. இந்தக் காரணத்தால் பொய்யாவிளக்கு படத்தைப் பற்றி மக்களிடையே பேசுவதற்கு பொருத்தமில்லாத சூழ்நிலை ஏற்பட்டது. அதன் பின்பு பல்வேறுபட்ட முயற்சிகளின் அடிப்படையிலேயே அமேசான் நிறுவனத்தை அணுகி இந்தத் திரைப்படத்தை வெளியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தோம். ஆனாலும் அமேசான் நிறுவனம் அமெரிக்காவிலும் லண்டனிலும் மாத்திரமே இந்தத் திரைப்படத்தை மக்கள் பார்க்கக் கூடியவாறு வெளியிட்டார்கள். இதனால் வேறு நாடுகளில் பார்க்க முடியாத நிலை உள்ளது. இது ஒரு பாதகமான முடிவென்றே சொல்ல முடியும். ஆனால் தற்போது பலநாடுகளில் மீண்டும் திரையரங்குகள் திறக்கப்பட்டுள்ளன. எனவே எங்களுடைய பொய்யாவிளக்கு திரைப்படத்தை யும் கட்டம் கட்டமாக அனைத்து நாடுகளிலும் திரையிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக டென்மார்க், சுவிஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் திரையிட முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேநேரம் ஓடிடி என்ற இணையத் தளத்தின் மூலமும் இந்தப் படத்தை பார்வையிடக் கூடிய வசதியை திரைப்படக் குழுவினர் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவில் ஓடிடி தளத்தின் மூலம் அனைத்து நாடுகளிலும் இந்தப் படத்தை பார்வையிட முடியும் என எண்ணுகிறேன்.

**கே: பொய்யாவிளக்கு படத்துக்கு புலம்பெயர் சமூகத்தின் ஆதரவு எப்படியிருக்கிறது?**

**ப:** இந்தப் படம் மருத்துவர் வரதன் நடித்த படம் என்றோ இயக்குநர் தனேஷ்கோபாலின் படம் என்றோ, வெண்சங்குக் கலைக் கூடத்தினரின் படம் என்றோ யாரும் நினைக்கக் கூடாது. இதை எங்களுடைய இனத்தினுடைய படம். ஒரு இனஅழிப்பு செய்யப்பட்ட -படுகொலை செய்யப்பட்ட- ஈழத்தமிழ் மக்கள் அனைவரினதும் -அங்கு நடந்த உண்மைச் சம்பவங்களை கூறுகின்ற - படம். இப்படியான படைப்புக்களுக்கு ஆதரவு தர வேண்டியது உலகத் தமிழ் மக்கள் அனைவருக்குமான கடமை. ஆனால் கிட்டத்தட்ட 99 வீதமான மக்கள் பூரண ஒத்துழைப்பைத் தரவில்லை.

படம் எடுக்கின்ற பொழுது கூட மட்டுமல்லாமல் தற்போதும் கூட இப்படியான படத்துக்கு ஆதரவு வழங்க தயங்கி வருகிறார்கள். பெரும்பாமையான மக்கள் பேஸ்புக் போன்ற இணையத்தளங்களில் தங்களை தமிழ்த்தேசியத்துக்கும் விடுதலைப் போருக்கும் ஆதரவாளர்களாகவும் உணர்வாளர்களாகவும் காட்டிக் கொள்கின்றார்கள். ஆனால் அவர்கள் கூறுவதற்கும் அவர்களின் செயல் வடிவத்துக்கும் 99 வீத இடைவெளி இருக்கிறது. அதேநேரம் ஈழப்படைப்புக்களை முன்னுக்கு கொண்டு வரவேண்டும் என்ற முயற்சிக்கும் அவர்கள் தயாராக இல்லை. இந்திய சினிமா தான் சினிமா என்றும் ஈழப் படைப்புக்கள் தரம் குறைந்தவை என்றும் எண்ணும் நிலையும் பெரும்பான்மையான மக்களிடையே இருக்கின்றது. ஈழப் படைப்புக்கள் கூட உலகத் தரத்தில் இருப்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. சினங்கொள், பொய்யா விளக்கு போன்ற படங்கள் உலகத் தரத்தில் இருப்பதை படங்களைப் பார்ப்பதன் மூலம் உணரமுடியும்.

**கே: பொய்யாவிளக்கு வெளியானதன் பின்னர் எப்படியான விமர்சனங்கள் கிடைத்துள்ளனவா?**

**ப:** உண்மையிலேயே இந்தப்படத்தைப் பார்த்தவர்கள் குறைகூற முடியாத அளவுக்கு நேர்த்தியாகவும் திறமையாகவும் உருவாக்கப்பட்ட ஒரு படைப்பாக - உண்மைச் சம்பவத்தை எந்தவித கற்பனைகளையும் புகுத்தாமல் எடுக்கப்பட்ட படமாக - பார்த்திருக்கிறார்கள். விமர்சனங்கள் மிகவும் ஆக்கபூர்வமாகவே இருக்கின்றன . ஒன்றிரண்டு இடங்களில் அவர்கள் பிழைகளையும் சுட்டிக்காட்டினார்கள். அந்தக் குறைகள் அனைத்தும் பணப்பற்றாக்குறையால் ஏற்பட்ட குறைகளே. மற்றும்படி ஈழத்தின்




கதைகளை, சம்பவங்களை இனிமேல் வேறு எவரும் எடுக்க வேண்டும் என்ற நிலையைத் தாண்டி இந்தப் படம் மிகவும் சிறப்பாக வந்திருக்கிறது என்றும் கூட பலர் பாராட்டியிருக்கிறார்கள். இவ்வாறானதோர் படைப்பை நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றும் கூறுகின்றனர். படத்தைப் பார்த்த அனைவரும், எங்களுடைய இன அழிவைக் கூறுகின்ற ஒரு ஆவணமாக பொய்யா விளக்கு திரைப்படம் உள்ளது என்கிறார்கள். தமிழ் மக்கள் அனைவரும் இந்தப் படத்தை திரையரங்குகளிலோ அல்லது அமேசான் இணையத்தளத்திலோ ஓடிடி தளங்களிலோ' பார்க்க வேண்டும். அத்துடன் இளம் சந்ததியினரையும் , பிறமொழி பேசுபவர்களையும், மனித உரிமை அமைப்புகளையும் இந்தப்படத்தை பார்க்கச் செய்வதன் மூலம் எங்கள் மண்ணில் நடந்த இனப்படுகொலையை உலகறியச் செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விடுகதை

1. தொப்பி போட்ட காவல்காரன், உரசி விட்டால் சாம்பல் ஆவான் அவன் யார்?

தீக்குச்சி

2. மண்ணுக்குளே கிடப்பான் மங்கள கரமானவன் அவன் யார்?

மஞ்சள்

3. ஊர் சுற்றக் கூட வருவான் ஆனால் வீட்டுக்குள்ளே வரமாட்டான் அவன் யார்?

செருப்பு

4. ஏழு குதிரை பூட்டிய தேரில் வரும் மன்னவன் யார்?

சூரியன்

5. தொட்டு விட்டால் ஏதும் இல்லை அரைத்து விட்டால் சிவந்திடுவான்?

மருதாணி

6. பாட்டி வீட்டுத்தோட்டத்தில் தொங்கு கின்ற பாம்பு அது என்ன?

புடலங்காய்

7. சொன்னதை சொல்லும் பொண் ணுக்கு, பச்சை பாவாடை கேட்குதாம் அது என்ன ?

பச்சைக்கிளி

8. கீழே ஊற்றிய தண்ணீர் மேலே தொங்கி இனிக்குது அது என்ன?

இளநீர்

9. வண்ணப் பட்டுச் சேலைக்காரி, நீல பட்டு ரவிக்கைக்காரி அவள் யார்?

மயில்


10. பூ பூக்கும், பானை போல் காய் காய்க் கும் அது என்ன?

பூசணிக்காய்

**ஜெ.ஆருசா**
தரம் 5
யாழ்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



# மூளை இருக்கா?




ஒரு ஊரில் ஒரு ஆட்டிறைச்சிக் கடை இருந்தது. அக்கடையில் முதலாளியே தொழிலாளி.

ஒவ்வொருநாளும், கடையை மூடப்போகும் சமயம், ஒரு திமிர்பிடித்தவன் அக்கடைக்கு வந்து, முதலாளியிடம், முதலாளி மூளையிருக்கா? என்று கேட்பான். அதற்கு முதலாளியோ, மூளை இல்லை என்றவுடன், என்ன முதலாளி இன்றும் உங்களிடம் மூளை இல்லையா? என்று கிண்டலுடன் கேட்டுவிட்டு செல்வான். இதையே வழக்கமாகக் கொண்டிருந்த அவனை, எப்படியாவது சொற்போரில் தோற்கடிக்க வேண்டும் என்பது அந்த முதலாளியின் நிறைவேறாத ஆசை. நாள்கள் நகர்ந்தன. ஒருநாள், அம் முதலாளியின் நன்கு படித்த நண்பன் ஒருவன் அக்கடைக்கு வந்தான். அவனிடம் தன் நிறைவேறாத ஆசை பற்றி முதலாளியும் கூற, அட இவ்வளவு தானே, நான் பார்த்துக்கொள்கிறேன் என்று நண்பனும் கூறினான்.

கடையை மூடப்போகும் சமயம், அத்திமிர்பிடித்தவன் வந்து, முதலாளியிடம், முதலாளி மூளையிருக்கா? என்று வழக்கம் போலக் கேட்டான். அதற்கு முதலாளியின் நண்பன் அவனைப் பார்த்து, இதுவரை வந்த அனைவருக்கும் மூளை இருந்தது, ஆனால் துரதிஷ்டவசமாக உனக்குத்தான் இல்லை என்றான். திமிர்பிடித்தவனின் முகம் வாடிப் போயிற்று.

## வழிகாட்டுவோம்



# தவளை



1. டைனோசர் தோன்றிய காலத்திலேயே தவளைகளும் தோன்றியதற்கான ஆதாரம் இருப்பதாக அகழ்வாராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.
2. இவ்வுலகில் இதுவரை 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தவளை வகைகள் இருப்பது தெரியவந்துள்ளது.
3. தவளைகளால் ஒரே நேரத்தில் 130 அங்குலம் தூரம் வரை தாவ முடியும்.
4. பூச்சிகள், புழுக்கள் ஆகியவற்றைத் தின்று தவளைகள் உயிர் வாழ்கின்றன. அதே நேரத்தில் பாம்புகளின் முக்கிய உணவாக தவளைகள் உள்ளன.
5. உலகின் சுற்றுச்சூழல் பாதிப்படைந்து வருவதால், தவளை இனங்கள் வேகமாக அழிந்து வருகின்றன.
6. தவளைகள் தங்கள் தோலின் மூலம் நீரை உறிஞ்சும். அதனால் அவை தனியாக தண்ணீர் குடிக்கத் தேவையில்லை.
7. எகிப்து நாட்டில் வளமையின் சின்னமாக தவளைகள் கருதப்படுகின்றன.
8. பெண் தவளைகள், தாங்கள் கருவுற்றிருக்கும் காலத்திலேயே குட்டிகளுக்கான உணவை சேமித்து வைக்கும்.







# பிஞ்சு தூரிகைகள்



**பி.சஞ்ஜய்**
தரம்-01
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.




**அ.ஜெனிபன்,**
தரம்-10
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி.



**த.நீறுயன்,**
தரம்- 7A
யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி.
யாழ்ப்பாணம்.



**அக்ஷயா,**
தரம்-06
சுண்டுக்குழி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.



**உ.அக்சனா,**
தரம்-06
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணப் போக்குவரத்து ஆணையாளருக்கு,

**அவசரமா ஒரு கடுதாசி**



வணக்கம்.

நான் இதிலை எழுதப்போற விசயம் இப்பத்தை கொரோனா நிலைமைக்குள்ள அவசரமில்லை எண்டமாதிரித் தெரியலாம். ஆனால் மிக மிக அவசியம் எண்டது சில காலத்துக்குப் பிறகு தெரியவரும். அப்ப அதைப் பற்றிக் கதைச்சால் பிரியோசனமில்லைக் கண்டியளோ. மழை காலத்திலை நீங்கள் செட்டி அட்டையளைப் பாத்திருப்பியள். வீட்டு முத்தத்திலை குறுக்கும் நெடுக்குமா திரியுங்கள். இடை இடை கண்ணுக்குத் தெரியாமல் காலுக்கையும் நசுக்குப்படும். அது மாதிரி இப்ப யாழ்ப்பாணத்திலை இரவு பகல் எண்டு பாராமல் "டிப்பர்" நடமாட்டம் அதிகமாக்கிடக்கு. அதால குஞ்சு குருமனை நம்பி மெயின் றோட்டுப் பக்கம் போக விடப் பயமாக்கிடக்கு. ஏன் பெரியாக்கள் கூட பயந்து பயந்து தான் றோட்டில போய்வர வேண்டிக் கிடக்கு.

ஊருக்கை கதைச்சவை. டிப்பர் எண்டதைவிட இயமன் எண்டு அதுக்குப் பேர் வைச்சிருக்கலாமாம். எத்தினை பேரின்ரை உயிரைக் குடிச்சிட்டுது? அதுகும் கள்ள மண் ஏத்திற டிப்பரைக் கண்டால் குடல் நடுங்கும். பொலிஸிட்டைப் பிடிபடக்கூடாது எண்டதாலை கண்மண் தெரியாமல் ஓட்டம். ஆரையும் அடிச்சாலும் வாகனத்தை நிப்பாட்டுறதில்லை. அதாலை கேடுகள் கனக்க. இருந்தும் அவங்கள் தங்கடை வேகத்தைக் குறைக்கவும் மாட்டாங்கள். எட! பொலிஸுக்குப் பயப்பிடுவாங்கள் எண்டு பாத்தால் , ஊகூ…ம்… அதுக்கும் அசையமாட்டாங்கள். ஏனெண்டால் றோட்டிலை நிக்கிற பொலிஸைச் சமாளிக்கிற வழிவகையும் அவைக்கு நல்லாத் தெரியும்.

அப்பிடி டிப்பர் கதையளைச் சொல்லுறதெண்டால் கனக்கச் சொல்லலாம். ஆனால் டிப்பர் கள்ள மண் ஏத்திறது மட்டுமில்ல இப்பத்தைப் பிரச்சினை. டிப்பருகள் அளவுக்கு அதிகமா பாரத்தை ஏத்திக்கொண்டு கூடின வேகத்தோடை போறதுதான் பிரச்சினையே. சண்டை முடிஞ்ச கையோடை றோட்டுப் போடுறதிலைதான் அபிவிருத்தி துவங்கினது. சனசந்தடி இல்லாத றோட்டுகள் எல்லாம் காப்பெற்றாக்கி சனம் கரைச்சல் படாமல் போய்வரப் பண்ணினதை ஒரு பக்கம் நல்லது எண்டு சொன்னாலும் அதாலை கன தீமையளும் எங்களுக்கு வந்திருக்குது எண்டதை நீங்கள் நல்லா விளங்கிக் கொள்ள வேணும்.

ஒண்டு அந்த றோட்டுகளிலை கட்டுப்பாடுகள் இல்லை. கண்மண் பாராமல் ஓடலாம். கேக்கிறதுக்கு ஆக்களில்லை. அதாலை சில இடங்களிலை காப்பெற் கைவிடப் பாக்குது. உப்பிடியே போறதால் சண்டைக் காலத்தில இருந்த றோட்டுகளை விடவும் மோசமான றோட்டுகளாக எங்கட வீதியள் மாறிக்கொண்டு வருகுது.

ரண்டாவது அந்த டிப்பர்களின்ர நடமாட்டத்தைக் கட்டுப்படுத்திற வழியைப் பாக்க வேணும். ஒரு காலத்திலை டிப்பர் மாதிரியான வாகனங்கள் இரவு மட்டும் தான் ஓடலாம் எண்டு சட்டம் இருந்தது. அதோடை அப்ப பொலிஸ்கட்டுப்பாடும் கூட. இப்ப எல்லாம் மாறிப் போச்சுது. முந்தின மாதிரி டிப்பருக்கு வேகக் கட்டுப்பாடும் இல்லை. காலநேரக் கொன்றோலும் கிடையாது. டிப்பர் டிறைவரும் கிளினரும் தான் அதைத் தீர்மானிக்கிறவையா இருக்கினம். அவையளின்ரை விளையாட்டுகளைப் பாக்க வேணும் எண்டால் இரவிலை ஏ 9 றோட்டிலை பாக்கலாம். றோட்டுக்கரையிலை டிப்பரை நிப்பாட்டிப்போட்டு படுத்துக் கிடப்பினம். பாக் லையிற்றும் போடாங்கள். அதுவும் வளைவுகளிலை எண்டால் சொல்ல வேணுமே? எத்தினை தரம் நிப்பாட்டிக் கிடந்த டிப்பருக்கு அடியிலை வாகனங்கள் புகுந்து விளையாடினதைப் பாத்தனாங்கள். அந்த விபத்துகளிலை சப்பழிஞ்சு போன வாகனங்களையு[illegible] அதுக்கை சிக்கினவையளையும் இழுத்துக் கிழிச்சு எடுக்கப்பட்ட பாடு…?

புதுசாப் போட்ட றோட்டுகளிலை அவ்வளவு பிசகாமல் இருக்கிறது ஏ -9 ஐப் போலை ஒண்டு இரண்டைத்தான் சொல்லலாம். மற்ற அனேகமானவை உடையத் துவங்கிவிட்டுதுகள். றோட்டைப் போட்டவை தங்கடை 'கறண்டி' எல்லாம் முடிஞ்சுதெண்டு சொல்லிக்கொண்டு , திருத்தவேலைக்கு எண்டு வைச்சிருந்த பிடி காசுகளை எல்லாம் எடுத்துப் பசியுமாறியாச்சு. இனி றோட்டிலை வாற நட்ட இலாபத்தை எல்லாம் அரசாங்கந்தான் பாக்க வேணும். அப்பிடி இருக்கேக்கை இதுக்கு ஒரு கட்டுப்பாடு இல்லை எண்டால் வழி பிசகும். அதுகும் அரசாங்கம் இப்ப இருக்கிற நிலைமையிலை இப்பிடியான சிலவுக்கு ஒதுக்க திறைசேரியிலை காசு இருக்குதோ தெரியாது. அதாலை இருக்கிறதைப் பாதுகாக்க வேணும் எண்டது தான் என்ரை அபிப்பிராயம்.

நீங்கள் றோட்டாலைதானே அடிக்கடி வாகனத்திலை போய் வாறனியள்? அப்ப றைவரை ஒருக்கா நிப்பாட்டச் சொல்லிப்போட்டு அங்கங்கை இறங்கி றோட்டைப் ஒருக்காப் பாருங்கோ. போற பக்கத்தைவிட வாற பக்கந்தான் நல்லா பொருமிப் போய், கிழிஞ்சு கிடக்கிற றோட்டுகளின்ர இலட்சணத்தைப் பாப்பியள். அதுக்கு என்ன காரணம் எண்டு றோட்டு இஞ்சினியர்மாரைக் கூப்பிட்டுக் கேளுங்கோ. அவை அதுக்குச் சரியான பதிலைச் சொல்லுவினம்.

2019 இல எண்டு நினைக்கிறன். பாரம் ஏத்திக்கொண்டு வந்த டிப்பர் ஒண்டு நல்ல லோட்டோடை வந்த லொறி ஒண்டோடை மோதி ரண்டின்ரை றைவர் மாரும் அந்த இடத்திலையே அவுட்டாப் போச்சினம். இது தேவையோ? அவைக்கு அது சேட்டை. ஆனால் அவையின்ரை குடும்பங்கள்?

எல்லாக் கன ரக வாகனங்களுக்கும் லோட்டுக்கும் வேகத்துக்கும் கட்டுப்பாடுகள் இருக்கு. அதை டிப்பர் போலை பாரங்களை ஏத்தி ஓடுறவை சரியாக் கடைப் பிடிக்கினமோ? எண்டதைப் பாக்க வேணும். இந்த விசியத்திலை ஒரு கை மட்டும் தட்டிச் சரிவராது. அது தொடர்பான எல்லாத் திணைக்களங்களும் பொலிஸ் உட்பட எல்லாரும் சேந்து ஒரு கூட்டுப் பிரார்த்தனை வைச்சால்தான் சரி. இல்லாட்டி அந்தக் காலத்திலை பிரயாணஞ் செய்த மாதிரி பள்ளத்தையும் திட்டியையும் பாத்துத்தான் பயணிக்க வேண்டிவரும். அப்பிடி வந்தால் மாறி [illegible] காலத்தைப் பற்றி நினைச்சால்தான் பயமாக் கி[illegible] [illegible]டைக்கு…!

இப்படிக்கு
அன்புமறவாத,
**அப்பாவி அன்னமுத்து**

---

○ ஆர்.பிரகாஷ்

**விளையாட்டு**



# அரியணை ஏற்றியவன் அப்புறப்படுத்தப்பட்டான்

நிலத்தை நீக்கிவிட்டு வானத்தை நோக்க முடியுமா?. அது எவ்வள்வு சாத்தியமில்லையோ அப்படித்தான் சாத்தியமே இல்லாத விடயமாக இருந்தது பார்சிலோனாவில் இருந்து மெஸ்ஸியைப் பிரித்துப் பார்ப்பது. ஆனால், அதையும் சாத்தியமாக மாற்றிவிட்டது காலம். மெஸ்ஸி பார்சிலோனாவை விட்டு வெளியேறுகின்றார் என்ற அறிவிப்பு பார்சிலோனா கழகத்தால் வெள்ளிக்கிழமை நள்ளிரவு உத்தியோகபூர்வமாக விடுக்கப்பட்டுள்ளது.

மெஸ்ஸிக்கும் பார்சிலோனாவுக்கும் இடையிலான உறவை அவ்வளவு இலகுவில் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. பார்சிலோனா என்ற ஒரு கழகம் இல்லாவிட்டால் இன்று மெஸ்ஸி என்ற மாபெரும் வீரன் இல்லை. மெஸ்ஸியை அடையாளப்படுத்தியது, வளர்த்தது எல்லாமே பார்சிலோனாதான். அதேபோல் மெஸ்ஸி இல்லாவிட்டால் பார்சிலோனாவின் வெற்றிகளில் பாதி இன்று இல்லை. இந்த இரண்டும் மட்டும் உண்மை.

பார்சிலோனாவின் அடையாளமாகவே மெஸ்ஸி இருந்தார். இந்த வருடம் நடைபெற்ற கோபா அமெரிக்கத் தொடரை ஆர்ஜென்ரீனாவுக்காகக் கைப்பற்றிக் கொடுக்கும் வரை 'மெஸ்ஸி பார்சிலோனாவுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தில் பாதியைக்கூட தன் சொந்த நாடான ஆர்ஜென்ரீனாவுக்கு கொடுப்பதில்லை' என்ற உச்ச விமர்சனம் முன்வைக்கப்பட்டது. அந்த அளவுக்குமெஸ்ஸிக்கும்பார்சிலோனாவுக்கும் இடையிலான உறவு ஆழ வேரூன்றியிருந்தது. அவரின் காலம்தான் பார்சிலோனாவின் பொற்காலமாகவும் அமைந்தது. இதை பார்சிலோனாவும் ஏற்றுள்ளது. எனினும் இன்னபல உள்வீட்டுப் பிரச்சினைகள் இந்த சாத்தியமே இல்லாத பிரிவை சாத்தியமாக்கியுள்ளன. மெஸ்ஸியின் விலகல் கால்பந்தாட்ட அரங்கை பரபரப்பாக்கியுள்ளது. அவர் அடுத்து எந்தக் கழகத்துக்காக ஒப்பந்தமாகவுள்ளார் என்பதுதான் ஒட்டுமொத்த ரசிகர்களின் எதிர்பார்ப்பும். அவர் இரண்டு கழகங்களுக்காக விளையாடுவதற்குத்தான் அதிக வாய்ப்பு உள்ளது என்று கருதப்படுகின்றது. ஒன்று இங்கிலாந்தின் மன்செஸ்டர் சிற்றி, இன்னொன்று பிரான்ஸின் பரிஸ் செயின்ட் ஜேர்மன். இதில் பரிஸ் செயின்ட் ஜேர்மனில் மெஸ்ஸி இணைந்தால் அங்கே பல சுவாரஸ்யமான சம்பவங்கள் அரங்கேறும்.





பார்சிலோனாவின் பரம எதிரி என்று கருதப்படும் ரியல் மட்ரிட் கழகமும் முன்னதாக தனது அணித்தலைவரான ராமோஸை வெளியேற்றியிருந்தது. ராமோஸ் தற்போது பரிஸ் செயின்ட் ஜேர்மனுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். மெஸ்ஸியும் பரிஸ் செயின்ட் ஜேர்மனில் இணைந்தால் கடந்த வருடம் பரம எதிரிகளான அணிகளுக்குத் தலைமை தாங்கியவர்கள் இந்த வருடம் ஒரே அணியில் ஒன்றாக விளையாடும் சூழ்நிலை ஏற்படும். கால்பந்து ரசிகர்கள் கனவிலும் நினைத்துப் பார்க்காத விடயம் இது.

அத்துடன் மெஸ்ஸியின் நெருங்கிய நண்பனான நெய்மரும் பரிஸ் செயின்ட் ஜேர்மனுக்காத்தான் விளையாடி வருகின்றார். எனவே மெஸ்ஸியும் பரிஸ் செயின்ட் ஜேர்மனில் இணைந்தால் 'நெய்மர் மெஸ்ஸி – ராமோஸ்' கூட்டணி இணைந்து பார்சிலோனாவையும் ரியல் மட்ரிட்டையும் ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக்கில் எதிர்கொள்ளும். இதுவெல்லாம் கடந்த மாதம் வரையில் நடக்கவே நடக்காத விடயங்களாகத்தான் இருந்தன. ஆனால் இன்று…? காலம் எதைத்தான் விட்டுவைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ ம.பா. மகாலிங்கசிவம்



# நிழல் தேடாதே...



**ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே**
**வாழ்வென்றால் போராடும் போர்க்களமே...**

“வாழும் வரை போராடு வழி உண்டு என்றே பாடு” போன்ற திரைப்படப் பாடல்கள் வாழ்க்கை என்பது பூக்கள் நிரம்பிய மலர்ப்படுக்கை அன்று. போராடி வெற்றிபெற வேண்டிய போர்க்களமே என்பதை வலியுறுத்துகின்றன.
வாழ்க்கை என்பது இன்பங்களால் மட்டும் நிரம்பிய மதுக் குவளை அன்று துன்பங்களும் தோல்விகளும் கூட நிறைந்த நீச்சல் தடாகம் தான் என்பதை சங்ககாலத்திலிருந்தே கவிஞர்களும் புலவர்களும் மக்கள் மனதில் பதிய வைக்க முயன்றுள்ளனர்.

ஓர் இல் நெய்தல் கறங்க ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப
புணர்ந்தோர் பூஅணி அணியப், பிரிந்தோர்
மைதல் உண்கண் பணிவார்பு உறைப்பப்
படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்
இன்னாது அம்ம இவ்வுலகம்
இனிய காண்க இதன் இயல்புணர்ந்தோரே

என்பது சங்கப்புலவரான பக்குடுக்கை நன்கணியார் என்பவரின் செய்யுள் ஆகும்.

ஒரு வீட்டிலே மரணம் நேர்ந்து சாப்பறை ஒலிக்கிறது. இன்னொரு வீட்டிலோ திருமண நிகழ்வுக்கான மணமுரசு ஒலிக்கிறது. ஒரு வீட்டில் கணவனுடன் சேர்ந்திருக்கும் பெண்கள் பூக்களை அணிந்திருக்கின்றனர். இன்னொரு வீட்டில் கணவனை இழந்த பெண்கள் கண்ணீருடன் இருக்கின்றனர். இவ்வாறு இருமுனைப்பட்ட நிலையிலேயே இந்த உலகத்தைப் பண்பில்லாத பிரமன் படைத்திருக்கிறான். இந்த உலகத்தின் இயல்பை உணர்ந்துகொண்டவர்கள் உலகிலுள்ள இனிய விடயங்களையே பார்க்கப் பழகவேண்டும் என்கிறது பாடல்.
இப்பின்னணியில் கவிஞர் பா.விஜயின் நிழல்தேடாதே என்னும் கவிதையை இன்றைய தேன்கூட்டில் சுவைக்கலாம்.

கட்டுரைத் தொடக்கத்தின் முதற்பகுதியாக வரும் ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே என்னும் பாடலை இயற்றியதுடன் முன்னாள் குடியரசுத் தலைவரான ஏ.பி.ஜே அப்துல் கலாமிடமிருந்து சிறந்த பாடலுக்கான தேசிய விருதைப் பெற்றுக் கொண்டவர். அதுமட்டுமன்றி தமிழக அரசின் கலைமாமணி விருதும் இப்பாடலுக்காகக் கவிஞர் பா. விஜய்க்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். 200 க்கும் மேற்பட்ட திரைப்படப்பாடல்களை எழுதியவர். இந்தச் சிப்பிக்குள், நந்தவனத்து நட்சத்திரங்கள், உடைந்த நிலாக்கள் கடவுள் வருகிறான் ஜாக்கிரதை முதலிய கவிதைத் தொகுதிகள் அரண்மனை இரகசியம், இரு நாவல்கள் முதலிய நாவல் நூல்கள் உள்ளிட்ட நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டவர். இனி, கவிதைக்குள் செல்லலாம்

“நிழல் தேடாதே
உன் நிழலில் ஒரு
ஊரையே நிற்கவை” எனக் கவிதை தொடங்குகிறது. உன்னைப் பாதுகாத்துக்கொள்ள எந்த நிழலையும் தேடாதே. நீ உயர்ந்து, சாதித்து, அந்தச் சாதனையின் நிழலில் ஓர் ஊரையே நிற்க வை எனக் கவிஞர் கவிதையின் ஆரம்பத்தையே நம்பிக்கையுடன் தொடங்குகிறார்.

“முட்களில் மோதிக் கிழியாதவனுக்குப்
பூக்களைத் தடவும் தகுதி கிடையாது” என்னும் அடுத்த கவிதைப் பகுதி முட்களையும் பூக்களையும் படிமங்களாகக் கொண்டு வாழ்விலே துன்பங்களுடன் போராடிக் காயப்படும் அனுபவங்களைப் பெறமுடியாதவர்கள் வெற்றிக் கனியைச் சுவைக்க முடியாது என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறார்.

தேன் கூடு

“எதைக் கண்டும்
பிரமிக்காதே
பிரமிப்பைப் போல் ஒரு
பின்னடைவே கிடையாது”
என்பது வெற்றிக்கான முக்கிய தத்துவம் ஒன்றை உணர்த்துகிறது. அதாவது, எதைக்கண்டும் பிரமித்து நிற்காது இருத்தல். பில்கேட்ஸ் எப்படி உலகின் முதலாம் இலக்கப் பணக்காரன் ஆனார்? என்னோடு தானே படித்தான். எப்படி 3A எடுத்தான்? இவை பிரமிப்புக்கள். பிரமிப்பு இயலாமையையும் பின்வாங்கும் மனப்பாங்கையும் ஏற்படுத்தித் தோல்விக்குள் தள்ளிவிடும். ஏன் என்னால் இன்னொரு பில்கேட்ஸ் ஆகமுடியாது? ஏன் 3A பெற முடியாது? என்ற நேர்முகச் சிந்தனைகளே வெற்றியை நோக்கித்தள்ளும்.

“தோல்வி என்பது
சிந்திக்கத் தெரியாதவனின்
சித்தாந்தம்!
நிலாவைத் தொட்டது
மூன்று தோல்விகளுக்குப் பிறகுதான்”

என ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னால் பல தோல்விகள் மறைந்திருப்பதை எடுத்துக்காட்டும் கவிஞர் தோல்விகளைக் கண்டு துவண்டுவிட வேண்டாம். தோல்விகளே வெற்றிக்கான முதற்படிகள் என்று இளைஞர்களுக்கு அறிவுரை கூறுகின்றார்.

“நீ எழுந்தால்
ஒரு எட்டு வந்து பார்க்காதவர்கள்
நீ விழுந்தால் விழுந்து
விழுந்து விசாரிப்பார்கள் கவனி”

என்பது நூறு வீதம் யதார்த்தமானது. ஒருவர் பரீட்சையில் நல்ல பெறுபேறு பெற்றாலோ, ஒருவர் பற்றிய நல்ல தகவல் வந்தாலோ அதைத்தாம் அறியவே இல்லை என்று சத்தியம் பண்ணாத குறையாகக் கூறுபவர்கள் இருக்கின்றனர். அதே நபர்கள் பரீட்சையிலே தோல்வி அடைந்தாலோ, பத்திரிகையில் தவறான தகவல் வந்தாலோ தேடிவந்து விசாரிப்பார்கள். ஆச்சரியமான இந்த யதார்த்தத்தைக் கவிஞர் தனது கவிதையிலே பதிவு செய்துள்ளார்.

“உலகை உலுக்கி உலுக்கி
எடுத்தவனெல்லாம்
துவக்கத்தில் ஒரு
தூசுப்படலமாக இருந்தவன்தான்”

என்னும் கவிதையின் இறுதிப்பகுதியில் சிறிய புள்ளியிலிருந்து தொடங்கியவர்களே உலகில் பெரிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளனர் என்பதை எடுத்துக்காட்டி, வாசகரை நம்பிக்கையின் உச்சத்துக்கே அழைத்துச்செல்கின்றார் கவிஞர் பா.விஜய். தொகுத்து நோக்கின் வெளிநாட்டு உதவி போன்ற பிறரின் நிழல்களில் தங்கியிராமல், சொந்தக்காலில் நின்று துணிச்சலோடு போராடி வென்று காட்டும்படி இளைஞர்களை அழைக்கும் மிகச் சிறந்த கவிதை இது எனலாம்.

நிழல் தேடாதே
உன் நிழலில் ஒரு
ஊரையே நிற்கவை!

முட்களில் மோதிக்
கிழியாதவனுக்குப்
பூக்களைத் தடவும்
தகுதி கிடையாது!

மகிழ்ச்சியாய்ச் சிரி
கவலைகளைப் பிய்த்துக்
காற்று மண்டலத்திற்கு
அப்பால் வீசு!

எதைக் கண்டும்
பிரமிக்காதே
பிரமிப்பைப் போல் ஒரு
பின்னடைவே கிடையாது!

தோல்வி என்பது
சிந்திக்கத் தெரியாதவனின்
சித்தாந்தம்!
நிலாவைத் தொட்டது
மூன்ற தோல்விகளுக்குப்
பிறகுதான்!
நீ எழுந்தால் ஒரு
எட்டு வந்து பார்க்காதவன்
நீ விழுந்தால் விழுந்து
விழுந்து விசாரிப்பான் என்றீர்

இளைஞனே
இரைப்பையையும்
நம்பிக்கையையும்
காலியாக விடாதே!

நடக்குமா என்ற
கேள்வி
உன் நம்பிக்கைக்
கோபுரத்தின்
அத்திவாரத்தில்
விழுந்த கடப்பாறை!

உலகை உலுக்கி உலுக்கி
எடுத்தவனெல்லாம்
துவக்கத்தில் ஒரு
தூசுப்படலமாக
இருந்தவன்தான்.



# நெருங்கும்...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச்செயற்பாடுகள் தொடர்பாக சீனா சந்தேகம் வெளியிட்டுள்ளது. இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் செல்வாக்கை வீழ்த்தும் நோக்கில் அமெரிக்காவும் இந்தியாவும் செயற்படுகின்றன என சீனா குற்றம் சுமத்தியிருக்கிறது.
இந்தக் கூட்டு இராணுவப்பயிற்சிக்குப் பதிலளிக்க ஹைனான் மற்றும் ஜிஷா தீவுகளுக்கு இடையேயுள்ள தென்சீனக் கடலில், சீனா வெள்ளிக்கிழமை இராணுவப் பயிற்சி ஒன்றை ஆரம்பித்துள்ளது.
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை பயிற்சி இடம்பெறுமென குளோபல் ரைம்ஸ் செய்தித்தளம் வியாழக்கிழமை தெரிவித்துள்ளது. இதற்கு ரஷ்யாவும் ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

ஆகவே ஐ.நா.பாதுகாப்புச் சபையில் இந்த மாதம் இடம்பெறவுள்ள விவாதத்துக்கு இந்தியா தலைமை தாங்கவுள்ள நிலையில், இந்தோ- பசுபிக் சீனக் கடல், மேற்கு பசுபிக் மற்றும் தென்கிழக்கு ஆசியக் கடல் பகுதிகளில் ஏட்டிக்குப் போட்டியாக இடம்பெறவுள்ள பயிற்சி நடவடிக்கைகள் அமெரிக்க, இந்திய உறவை மேலும் நெருக்கமாக்கும்.
எனவே இலங்கையைத் தங்கள் பக்கம் எடுப்பதற்கு அமெரிக்கா, இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகளுக்குத் தற்காலிகமாக சாதகமான சமிக்ஞையை ஜனாதிபதி கோத்தாபயவும் வழங்கக்கூடிய சூழல் உண்டு.
ஏனெனில் ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இருந்து ஐ.நாவின் பாதுகாப்பு சபைக்கு இலங்கை விவகாரம் பாரப்படுத்தப்படாமல் தடுக்கப்பட வேண்டுமானால், அமெரிக்காவினதும், இந்தியாவினதும் ஒத்துழைப்பு இலங்கைக்கு அவசியமானது. ஆகவே சீன விரிவாக்கத்தால் அமெரிக்காவுடன் இந்தியாவுக்குத் ஏற்பட்டுள்ள தவிர்க்க முடியாத நெருக்கம், ஈழத் தமிழர்களுக்கு ஆபத்தானதே.
பூகோள அரசியல் சூழல் இந்த நிலைமைக்குக் காரணம் என்று சொன்னாலும், அதனைத் தர்க்க ரீதியாக எதிர்கொள்வதற்கான பக்குவம் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் இல்லை.
தத்தமது நலனுக்காக சிங்கள ஆட்சியாளர்களைத் திருப்பதிப்படுத்த அமெரிக்காவும் இந்தியாவும் தயாரிக்கும் நிகழ்ச்சி நிரல்களின் பின்னால், சில புலம்பெயர் அமைப்புகளும் தமிழ்நாட்டில் உள்ள சில உணர்வாளர்களும் செல்கின்றமை இன்னும் பேராபத்தானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன விலை நோபல்?



○ ஆர்.பிரகாஷ்



இலக்இலர்


அமைதிக்கான நோபல் பரிசில்கள் தகுதியானவர்களுக்குத்தான் வழங்கப்படுகின்றனவா? என்ற கேள்வி நாளுக்குநாள் மீண்டும் பூதாகரமாகி வருகின்றது. ஆங்சான் சூச்சியைத் தொடர்ந்து அபய் அகமது அலியின் நடவடிக்கைகள் அமைதிக்கான நோபலின் மீது களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

2019ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு எத்தியோப்பிய ஜனாதிபதி அபய் அகமது அலிக்கு வழங்கப்பட்டது. உலகம் சற்றும் எதிர்பாராததாக இந்த முடிவு இருந்தது. ஒட்டுமொத்த உலக மக்களின் புருவங்களும் உயர்ந்தன. அண்டை நாடான எரித்திரியாவுடன் 20 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த, இராணுவ ரீதியிலான பிரச்சினைகளை பேச்சின் அடிப்படையில் முடிவுக்குக் கொண்டுவந்ததை அடுத்தே அவருக்கு நோபல் வழங்கப்பட்டது என்று காரணம் சொல்லப்பட்டது. இன்று அபய் அகமது அலிக்கு வழங்கப்பட்ட நோபல் சரியானது தானா என்ற கேள்விகள் இமாலயமாகி நிற்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபை கடந்த புதனன்று ஒரு அறிவிப்பை விடுத்தது. எத்தியோப்பியாவில் இரண்டில் ஒரு கர்ப்பிணிகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் ஒரு லட்சம் குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர் என்பதுதான் அந்த அறிவிப்பு. 'எத்தியோப்பியாவில் புரையோடிப் போயுள்ள இனக் குழுக்கள் இடையிலான மோதல்தான் இந்தப் பேரவலத்துக்குக் காரணம்' என்றும் தெரிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை. ஆக, எரித்திரியாவுடன் எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க முடிந்த அபய் அகமது அலியால், தன் நாட்டில் செயற்படும் கிளர்ச்சிக் குழுக்களை இன மோதல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை எனின், அந்த நோபலுக்கான அர்த்தம்தான் என்ன? அமைதிக்கான நோபல் மீது இத்தகைய கறை படிவது இதுவொன்றும் முதல் முறையல்ல. இதற்கு முன்னரும் இது நடைபெற்றுள்ளது. மியான்மரின் முன்னாள் அதிபரும் தற்போது மியான்மர் இராணுவத்தால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளவருமான சூச்சி மீதும் இதே விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. மியான்மரில் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்த இராணுவ அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்து நோபலை வென்றவர்தான் சூச்சி. மியான்மரின் அரச தலைவராக பொறுப்பேற்ற பின்னர் அவர் நோபலுக்குத் தகுதியுள்ளவராக நடந்துகொள்ளவில்லை.

ரக்கினே மாகாணத்தில் றொஹிங்யர்களுக்கு எதிராக இடம்பெற்ற இனச் சுத்திரிகரிப்பை வெளியுலகுக்கு வெளிப்படுத்தாமல் கள்ள மௌனம் காத்தவர் தான் சூச்சி. 'இராணுவத்தால் றொஹிங்யர்கள் இனச் சுத்திரிகரிப்புச் செய்யப்படவில்லை. றொஹிங்யர்களிடம் இருந்து செயற்படக்கூடிய ஆயுதக் குழுக்கள்தான் இந்தத் தாக்குதலை நடத்தின' என்பதுதான் சூச்சியின் பதிலாக அமைந்தது. அவர் இராணுவத்தைக் காப்பாற்றினார். இது தொடர்பான விசாரணைகளுக்குக்கூட அவர் உலக நாடுகளை மியான்மருக்குள் அனுமதிக்கவில்லை. ஆக, பெரும்பான்மை மக்களின் வாக்குகளை இலக்குவைத்து தேர்தல்களை நோக்கித்தான் அவரின் ஆட்சியும் இருந்ததே தவிர அதைவிட அவரொன்றும் சாதித்துவிடவில்லை. நோபல் பரிசில்கள் மீது குறிப்பாக அமைதிக்கான நோபல்களின் மீது அண்மைக்காலமாக விழுந்த கறை இன்னுமின்னும் ஆழமாகச் சென்றுகொண்டிருக்கின்றது என்பது தான் உண்மை. இனி நோபல்களின் மதிப்பு காணாமல் போய்விட்டாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

## 50 இற்கான கவிதைகள்



காலம் கடந்தும் வாசம் வீசும்
காதல் மலர்ந்த அன்பின் நேசம்
நாளும் பொழுதும் வளரும் தொடரும்
தோற்றம் பொலிவு சீனத்து உறவு
தோட்டம் தவழும் வானத்து நிலவு
புரிதல் உறவை நீராட்டி மகிழும்
புன்னகை சிந்தும் புதுமைப் பெண்ணே
இது போல் உறவு அரிதாய் இன்று

சரண்குமார் வற்றாப்பளை

இரு மணம் வீசும் பூக்கள்
மூப்பு எனும் பிணியால் வாடி
ஒருவனுக்கு ஒருத்தி என்று
ஒரு மனம் மீது கொண்ட பாசம்
கிணற்றில் வாளி கொண்டு நீராட்டும் பாரும்
உள்ளத்தாலும் உடலாலும்
இணை பிரியா உறவுகளாய்
அன்புக்கு ஏது தொல்லை
அவர்கள் நம்பிக்கையே வாழ்வின் எல்லை.

கும்பவாழியான், உடுப்பிட்டி

**பரிசு பெறும் கவிதை**

தள்ளாடும் வயதினிலே தன்நலம் மறந்து
இரு உள்ளங்களின் காதல் மொழியினை
கண்ணுற்று என் உள்ளம் சொக்கி தவிக்கின்றதே
கட்டியவன் கைத்தலம் பற்றி
காலமெல்லாம் அவன் காலடியில் சேவை
செய்து கல்லறை வரை கைகோர்க்கும்
இவ் உத்தமியை போற்றிடுவோமே!

ஆ.பாலமதுஜா
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

ஆறுபோய் அறுவது கடந்தும் வற்றாத
ஊற்றுக் காதல் கிணறு இது....
ஊறும் அன்பினை தலைமேல் வார்த்து வார்த்தையால்
வர்ணிக்க முடியாத வர்ணனை இது.......
மலர் மது கொண்ட காதலை உண்டு பசும்புல்
தனில் கரும்புள் மயங்கி நிற்கிறது....
குளிர் நீர் ஊற்றி காக்கும் இயற்கைக் காதல் இது....

எல்.கௌசி

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி தெளிவாக முகவரியை குறிப்பிட்டு அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

## 51



## மௌன மொழி

வயதான போதும் வற்றாத பேரன்பு இது
காலம் கடந்தாலும்
கனிவன்பும் கரிசனையும்
கருணை உள்ளம் கொண்டவள் நீ
கட்டியவனை கங்கையில் நீராட்டும்
தாரத்தில் தலைசிறந்த சம்சாரம் நீதானே
நிகரற்ற நீ என்பதனை நித்திலம் போற்றட்டும்

வி.பி.சிவேஸ்

கைபிடித்து கருத்து பிடிப்பதற்கு
கை விட்டு போவோர்
காதலித்து கை பிடித்தும்
கை விட்டுப் போவோரும்
காண வேண்டிய காட்சி இது
இளமையில் இதயத்தால் இணைந்து
இரண்டறக் கலந்து இன்புற்று
இன்று வரை இணை பிரியா
உன்னத உறவு இது தானே.

எஸ்.தயாசினி

கிராமத்து வாசனையில் முறுக்கேறி முளைத்த
உரம் மிகு கரங்கள்...!
பராமரித்த பிள்ளைகள் பாராது தொலைதூரம்.....!
திடமான நிறைகுடமாய் தடம் பதிக்கும் முதுசெம்!

- மானியூர் ரட்ணேஸ்

முதுமையெனும் காலன் கைப்பிடிக்குள்
இளமையெனும் இன்பம் பறிபோக
நரை விழுந்த மொட்டைத் தலையுடன்
கிணற்றடியில் நீராடும் கிழவன்
குளிப்பாட்டி மன மகிழும் கிழவி
அறுபதிலும் இணை பிரியா பந்தம்
விலைமதிப்பில்லா அன்பின் சொந்தம்
வாழ்க்கையின் வரமெனக் கிடைத்த வண்ணம்

லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்

உங்கள் கவிதைகள் எங்கள்
கதவைத் தட்ட
வேண்டிய கடைசி நாள்:

**18.08.2021**

கவிதைக்கு பரிசு 1000/=

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்டாற்றில் நாடற்றவர்கள்

ந.பரமேஸ்வரன்

இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியப் பிரஜாவுரிமை வழங்க முடியாது என மதுரை உயர்நீதிமன்றம் கடந்த ஜுலை 30 ஆம் திகதி தீர்ப்பளித்துள்ளது. திருச்சி மாவட்டத்திலுள்ள கொட்டப்பட்டு முகாமில் வசித்துவரும் ஜெகதீஸ்வரன் யோகேஸ்வரன் உட்பட 65 அகதிகள் இணைந்து இந்திய பிரஜாவுரிமை மனுவை தாக்கல் செய்திருந்தனர். இவர்கள் தாக்கல் செய்த மனு மீதே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு இலட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தமிழ் நாட்டிலேயே தங்கியுள்ளனர். தமிழ் நாட்டை விட திருவனந்தபுரம், பெங்களூர் போன்ற இடங்களிலும் கணிசமானளவு இலங்கை தமிழ் அகதிகள் வசிக்கின்றனர். சுமார் 60 ஆயிரம் பேர் 107 இந்திய அகதி முகாம்களில் உள்ளனர். முகாமில் வசிப்பவர்களைவிட கிட்டத்தட்ட 35 ஆயிரம் பேர் வாடகை வீடுகளில் வசித்து வருகின்றனர். தமிழ் நாட்டில் சென்னை புழல் முகாம், திருச்சி கொட்டப்பட்டு முகாம், வளவர்கோட்டை, மண்டபம் முகாம், போன்ற இடங்களில் கணிசமானளவு இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர்.

இந்தியப் பிரஜாவுரிமையைக் கோருவதற்கு இலங்கை தமிழ் அகதிகளுக்கு சட்டரீதியாக எந்தவித உரிமையும் கிடையாது என மதுரை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. இந்திய மத்திய அரசு அகதிகளை ஏற்றுக்கொள்வது தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள் எதிலும் கைச்சாத்திடாமையே இதற்குக் காரணம் எனவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அகதிகளாக இந்தியாவுக்குள் நுழைந்திருப்பவர்களால் (இலங்கை தமிழ் அகதிகள் மட்டுமல்ல) ரோஹிங்கிய முஸ்லிம்கள், பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து வந்து இந்தியாவில் தஞ்சமடைந்துள்ள அகதிகளால் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படலாம் என்ற அச்சமும் இந்திய மத்திய அரசிடம் காணப்படுகிறது. இதுவும் இந்திய அரசு அகதிகளுக்கு பிரஜாவுரிமை வழங்க முன்வராமைக்கான காரணம் எனக் கூறப்படுகிறது.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை தொடர்ந்து, உருவான உள்நாட்டு யுத்தம் காரணமாக தமது உயிரை காப்பாற்றிக்கொள்ளும் நோக்குடன் படகுகள் மூலம் தமிழ் நாட்டுக்குள் பிரவேசித்தவர்கள்.

இவர்களுள் 1990 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து, இந்திய அமைதிப்படை வெளியேறியதைத் தொடர்ந்து புலிகளுக்கு அஞ்சி வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் போன்ற இயக்கங்களை சேர்ந்தவர்களும் அடக்கம். இவர்களை தமிழ் நாட்டுக்குள் அனுமதிக்கமாட்டேன் என அப்போதைய தமிழக முதல்வர் கருணாநிதி கூறியிருந்தார் . இதன் காரணமாக இவர்கள் வடஇந்திய மாநிலமான ஒரிசாவில் குடியமர்த்தப்பட்டனர். தற்போது இவர்கள் அனைவரும் தமிழ்நாட்டில் வசித்து வருகின்றனர்.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலத்தில் உயிருக்கு அஞ்சி தஞ்சமடைந்த பொதுமக்களாக இருந்தாலென்ன, புலிகளுக்கு அஞ்சி தஞ்சமடைந்த இயக்கங்களை சேர்ந்தவர்களாக இருந்தாலென்ன அனைவரும் வறுமைப்பட்ட நிலையில் அடிப்படை வசதிகளற்ற முகாம்களிலேயே வசித்து வருகின்றனர். கட்டடத் தொழில், கூலிவேலை, முச்சக்கர வண்டி சாரதி, சினிமா கதாநாயகர்களுக்கு சண்டைக் காட்சிகளில் டூப் போடுதல் போன்ற தொழில்களிலேயே இவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

2009 மே 18 ஆம் திகதியுடன் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்தபோதிலும் இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவதற்கு ஆர்வம் காட்டவில்லை. இதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன.

குறிப்பாக இவர்கள் வந்து குடியேறுவதற்குரிய அடிப்படை வசதிகள் எதுவும் இலங்கையில் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. முக்கியமாக வீட்டுவசதி, தொழில்வாய்ப்பு இரண்டும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கமோ,தமிழ் அரசியல்வாதிகளோ அக்கறை செலுத்தாதிருப்பது கவலைக்குரிய விடயம். மக்களுக்காக உயிரை அர்ப்பணித்து போராடிய மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் சுரேஷோ, இன்றுவரை புலி எதிர்ப்பாளனாக செயற்பட்டுவரும் வரதராஜப்பெருமாளோ, இலங்கை அரசாங்கத்தின் செல்லப்பிள்ளையாக வலம்வரும் டக்ளசோ கவனம் செலுத்தாதிருப்பது கவலைக்குரிய விடயம்.

மறுபுறத்தில் பேச்சிலும் மூச்சிலும் 'இனப்படுகொலை' என்ற வார்த்தையை உச்சரித்துவரும் செங்கோலை தூக்கிக்கொண்டு ஓடும் வல்வை மண் பெற்றெடுத்த வீர சிவாஜியோ, அனந்தியோ, முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரோ தமது நான்கு ஆண்டுகால ஆட்சியில் இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகளை தாயகம் அழைத்து வருவது பற்றி சிந்திக்கவேயில்லை. நல்லாட்சி அரசாங்கத்துடன் தேனிலவு கொண்டாடிய சம்பந்தப்பெருமான் கூட இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை தமிழ் அகதிகளை திரும்ப அழைத்துவந்தால் திருகோணமலையில் தமிழர் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும் என்பது பற்றி சிந்திக்கவில்லை. தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளில் சுமார் 25 ஆயிரம் பேர் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தாயகம் திரும்பினால் தனது காணியில் உரிமை கொண்டாட வெளிக்கிட்டு விடுவார்களோ என்ற அச்சம் சம்பந்தரிடம் உள்ளதோ தெரியவில்லை. ( ஏனெனில் தமிழ் நாட்டில் உள்ள திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த அகதிகளில் கணிசமானோர் சம்பந்தப் பெருமானின் சட்டபூர்வ உரித்தான லிங்க நகரை பூர்வீகமாக கொண்டவர்கள்)

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ்அகதிகள் தாயகம் திரும்புவதற்கு தயக்கம் காட்டுவதற்கு அவர்கள் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ்நாட்டு வாழ்க்கைச் சூழலுக்கு இயைபாக்கம் அடைந்துவிட்டமையும் ஒரு காரணம். தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் பேச்சுத் தமிழ் தென்னிந்திய தமிழாக மாறிவிட்டது.

தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது; இவர்கள் அங்குள்ள பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்று சிறப்பான பெறுபேறுகளை பெற்றிருந்தாலும் இவர்களால் ஒரு தொழிலைக்கூட தேடிக்கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது; காரணம் இவர்களிடம் இந்தியப் பிரஜாவுரிமை இல்லை.

மதுரை உயர்நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் இரண்டாவது தலைமுறையினர் (இந்தியாவில் பிறந்தவர்கள்) கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேர் நாடற்ற இலங்கை தமிழர்களாக உருவாகியுள்ளனர். இவர்கள் இலங்கைப் பிரஜைகளுமல்ல, இந்தியப் பிரஜைகளுமல்ல. உலகில் வேறு எங்குமே பிரதிநிதித்துவத்தை கொண்டிருப்பவர்களுமல்ல. இவர்களின் எதிர்கால வாழ்வில் ஒளியேற்றுவதற்கு தமிழ் அரசியல்வாதிகள் முன்வருவார்களா?

நூல் அறிமுகம்




# ஜீவபிரயத்தனம்: ஏழு நாடகங்களின் பெட்டகம்

கணபதி சர்வானந்தா

*"எங்களின் ஆத்துமம் அடங்கிப்போகுமோ*
*எங்கள் முகங்கள் அழிக்கப்படுமோ*
*நாங்கள் முகவரியற்றவர்களாக*
*முடிவிடங்களற்று அலையும் துகள்களாக*
*மண்ணோடு மண்ணாகிப்*
*போகிடல் கூடுமோ "*
*– 1998 இல் மேடையேற்றப்பட்ட "ஜீவபிரயத்தனம் என்ற நாடகத்தில் இருந்து.*

2009 க்கு முற்பட்ட காலத்தை நினைவுபடுத்துகின்றவாறு ஒரு பதற்றமான சூழலில் இன்று நாம் இருக்கிறோம். எதிரியும் வடிவமும் மாறியிருக்கின்றனவே தவிர, ஒரு போராட்டச் சூழலின் நெருக்குவாரத்தில் தான் நாம் வாழ்கிறோம் . கொடியதொரு நோய்த் தொற்றுக்கு நடுவே வரையறுக்கப்பட்ட சுகாதாரச் சட்ட நியதிக்கு அமைவாக ஒரு நூல் வெளியீடு அண்மையில் நடைபெற்றிருக்கிறது.

இரு தசாப்தங்களுக்கு முன்பாக அரங்க அனுபவங்களில் பிறந்து ஆற்றுகைகளாகப் பல்வேறு அரங்கங்களை அலங்கரித்து மக்கள் அங்கீகாரத்தைப் பெற்ற, நாடகர் யோ.யோண்சன் ராஜ்குமார் எழுதிய ஏழு நாடகங்களின் பனுவல்கள், இலக்கியமாக நூலுருப் பெற்று, "ஜீவபிரயத்தனம்" என்ற பெயரோடு,01.08.2021 அன்று மாலை 4.30 மணியளவில் கலைத்தூது கலையக மண்டபத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

"இந்தத் தொகுப்பில் இடம்பெறுகின்ற ஏழு நாடகங்களும் ஏறத்தாழ இருபது வருடங்களுக்குப் பின்னிருந்து வருபவை. அந்தக் காலத்தின் சமூக, பொருளாதார அரசியல் சூழ்நிலைகளின் வாழ்வியல், வாழ்வியல் தடங்களாக அமைபவை. அவற்றின் இலக்கியத் தரம் எவ்வாறு இருக்கின்றது என்பதனை ஆய்வாளர்களே கூறவேண்டும். ஆனால் இவை அந்தந்தக் காலத்தின் பதிவுகளாக இருக்கும என்பது எனது நம்பிக்கை " என நூலின் ஆசிரியர் யோ. யோண்சன் ராஜ்குமார் பொறுப்போடு குறிப்பிட்டிருக்கிறார்.

யோண்சனின் வலசைப் பறவைகள் -(1996), ஈன்றபொழுதில் - (1996), ஜீவபிரயத்தனம் - (1998), மண விலங்குகள் - (2006), ஸ்பாட்டக்ஸ் - (2002), உண்மையின் ஒளி - (2003), அகலிகைகள் - (2017) ஆகிய நாடகங்களை உள்ளடக்கிய இந்தத்தொகுதி இடப்பெயர்வுகள், ஆயுதப் போராட்டத்தின் இறுதிக் காலப் படுகொலைகள், பேரிழப்புகள், அதற்குப் பிற்பட்ட காலங்கள் எனப் பல்வேறு வித்தியாசமான சூழமைவுகளைக் களங்களாகக் கொண்டவை.

"வலசைப் பறவை, யாழ்ப்பாணப் பேரிடப்பெயர்வின் நெருக்கீடுகள் பற்றியது. ஈன்றபொழுதில் எனும் நாடகத்தில் அரச கட்டுப்பாட்டுக்குள் இருந்த யாழ்ப்பாணமும், புலிகளது கட்டுப்பாட்டுக்குள் இருந்த வன்னியும் இவற்றுக்கு வெளியால் ஒப்பீட்டளவில் "பாதுகாப்பானது" என நம்பப்பட்ட கொழும்பும் பெருங்களங்களாகின்றன. மூன்றிலும் பிள்ளைகள் காணாமல் போகிறார்கள். தாய்களது துயரத்தின் மேல் இந்நாடகம் கட்டப்பட்டுள்ளது.

ஜீவபிரயத்தனம் – தமிழ் தேசம் எவ்வாறு இனவாதம், பல்தேசிய நலன்கள் என்பவற்றின் சிதைத்தல்களுக்கிடையில் அதனைப் பாதுகாக்க வேண்டிப் போராடுகிறது என்பதை உருவகமாகப் பேசுவது. மணவிலங்கு மற்றும் அகலிகைகள் என இரண்டும் இனமுரண்பாட்டு அரசியலில் இருந்து வேறுபட்ட பால்நிலை சார்ந்து பெண்கள் எதிர்கொள்ளும் சமூக பண்பாட்டு அசமத்துவம் பற்றியவை. ஸ்பாட்டக்கஸ் என்ற நாடகம் ரோமானியக் கதையை முன்னிலைப்படுத்தி தமிழர்களது ஆயதப் போராட்ட வீழ்ச்சியின் பின்புலத்தினை உருவகப்படுத்தும் ஒன்றாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது" - என மூத்த விரிவுரையாளர் பா.அகிலன் நூலுக்கான தனது அணிந்துரையிலே குறிப்பிட்டிருக்கிறார்.

அரங்கோடு தொடர்புடைய விடயங்களை ஆய்வு செய்தும், எழுதியும் வருகின்ற யோ.யோண்சன் குமார் பலவிதமான அரங்கத் தளங்களில் செயற்பட்டு, தனது அரங்கத் திறனைக் கூர்மைப்படுத்திக் கொண்டிருப்பவர். அவர் ஆக்கத் திறனைப் பேசுவதாக "ஜீவபிரயத்தனம்" என்ற நூல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.மயூரபாலன்

# தீதும் நன்றும் பிறர் தர வாரா

> இன்றைய நாள் என்பது ஒரு புத்தம் புதிய பக்கம் போன்றது. இன்று நமக்கு ஒரு புதிய சந்தர்ப்பம் மீண்டும் தரப்பட்டுள்ளது. இன்றைய தினம்தான் நம்மிடம் மிகுதியாக இருக்கும் வாழ்க்கையின் முதலாவது நாள் ஆகும். நம்மிடம் எஞ்சி இருக்கும் வாழ்வை இன்பமயமாக மாற்றுவதற்கு நாம் ஏதாவது முயற்சி செய்ய வேண்டும்.



வீடு கட்டுவதில் மிகவும் திறமைசாலியான ஒரு கட்டடக் கலைஞன் ஓய்வுபெற விரும்பினான். அவன் தனது முதலாளியிடம் சென்று "இனிமேல் நான் வீடுகள் கட்ட விரும்பவில்லை. எனது நிலுவையில் உள்ள பணத்தை தாருங்கள். நான் வேலையை விட்டு விடுகிறேன்" என கூறினான். அதற்கு அந்த முதலாளியும் "தயவுசெய்து இன்னும் ஒரே ஒரு வீட்டை கட்டி முடித்துவிட்டு நீ போகலாம்" என கூறினார். இந்த மனிதனுக்கு அவ்வாறு செய்வதற்கு விருப்பமில்லை. ஆனால் முதலாளியினது பேச்சை தட்ட முடியாமல் அந்த வீட்டைக் கட்டத் தொடங்கினான். ஆனால் அவனது மனம் அதில் ஈடுபடவில்லை. அதனால் பாதுகாப்பு வடிவமைப்பு மற்றும் வீட்டின் தராதரம் என்பவற்றை கணக்கில் எடுக்காது ஏனோ தானோ என அக்கறையின்றி அந்த வீட்டைக் கட்டி முடித்தான்.

அதன் பின் முதலாளியிடம் சென்று அந்த வீட்டின் திறப்பை ஒப்படைத்து விட்டு "எனது நிலுவையில் உள்ள பணத்தை தாருங்கள் நான் சென்று வருகிறேன்" என கூறினான். அப்பொழுது அந்த முதலாளி "நீ எங்களது நிறுவனத்துக்காக எவ்வளவோ வருடங்கள் வேலை செய்திருக்கின்றாய். அதனால் நீ செய்த பணிக்கு பிரதியுபகாரமாக நீ கட்டிய இந்தக் கடைசி வீட்டை உனக்குத் தர விரும்புகிறேன்" எனக் கூறி அந்த வீட்டை அவனுக்கே கொடுத்துவிட்டார்.

இந்த மனிதனுக்கு ஒரே அதிர்ச்சி. வீடு கிடைத்தது மகிழ்ச்சியாக இருந்தபோதிலும் அது எப்படி அமைந்திருக்க வேண்டுமோ அவ்வாறு அமையவில்லை என்பது அவனுக்கு துன்பத்தை கொடுத்தது. அவன் ஒரு திரிசங்கு சொர்க்க நிலையில் இருந்தான். அவனிடம் அந்த வீட்டை மிகவும் உன்னதமான முறையில் அமைக்கக்கூடிய திறமையும் சாத்தியமும் இருந்தது. ஆனால் அவன் அதனைச் செய்யத் தவறிவிட்டான்.

இதுபோலவே அன்றாடம் நமது எண்ணங்களும் , செயல்களும்தான் நமது வாழ்க்கை எனும் வீட்டை அமைக்கின்றன. அதிலேதான் நாம் இறுதிவரை குடியிருக்க போகின்றோம். அது மகிழ்ச்சியானதாகவும் நிம்மதியானதாகவும் இல்லை என்றால் வாழ்க்கை எப்பொழுதும் ஒரு போராட்டமாகவே இருக்கும்.

கடந்து போன வாழ்க்கையை யாராலும் மாற்றமுடியாது. ஆனால் இனிவரும் காலத்தை நமக்கு விரும்பியவாறு அமைப்பது நமது கையிலே உள்ளது. இதனை சுவாமி விவேகானந்தர் "நாம் இப்போது இருக்கும் நிலைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எவ்வாறு இருக்க வேண்டுமென விரும்புகிறோமோ அவ்வாறு நம்மை நாமே அமைத்துக் கொள்ளும் ஆற்றல் நம்மிடம் உள்ளது" என கூறினார். இந்தச் செய்தி நமக்கு மிகவும் ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் அளிக்க வேண்டும். அதனை ஏற்றுக்கொண்டு அதன்படி செயற்படப் போகின்றோமா இல்லையா என்பது நம்மைப் பொறுத்தது.

ஜப்பானிலே ஒரு இடத்தில் ஒரு கல்வெட்டு இருந்தது. அந்த கல்வெட்டில் "சுனாமி அபாயம் காரணமாக இந்த இடத்துக்கு அப்பாலே வீடுகளை அமைக்காதீர்கள்" என எழுதப்பட்டிருந்தது. யாரோ ஒருவர் கருணைகூர்ந்து அவ்வாறு அந்த கல்வெட்டை அமைத்திருந்தார். ஆனால் மக்கள் அதனைக் கவனத்தில் எடுக்கவில்லை. அதன் காரணத்தினாலே பின்னர் சுனாமி வந்தபொழுது அவர்கள் பெரும் அழிவைச் சந்திக்க நேர்ந்தது.

இன்றைய நாள் என்பது ஒரு புத்தம் புதிய பக்கம் போன்றது. இன்று நமக்கு ஒரு புதிய சந்தர்ப்பம் மீண்டும் தரப்பட்டுள்ளது. இன்றைய தினம்தான் நம்மிடம் மிகுதியாக இருக்கும் வாழ்க்கையின் முதலாவது நாள் ஆகும். நம்மிடம் எஞ்சி இருக்கும் வாழ்வை இன்பமயமாக மாற்றுவதற்கு நாம் ஏதாவது முயற்சி செய்ய வேண்டும்.

ஒரு நாட்டில் ஒரு விசித்திரமான வழக்கம் இருந்தது அங்கு இருபது வருடங்களுக்கு ஒருமுறை ஒரு குறிப்பிட்ட தெருவுக்கு வரும் முதலாவது மனிதனை அரசனாக தேர்ந்தெடுப்பார்கள். அரசனது பதவிக்காலம் முடிந்த பின்னர் அவனை நடுக்காட்டுக்கு கூட்டிச் சென்று அங்கே விட்டு வந்து விடுவார்கள்.

அங்கு அவன் மிருகங்களுக்கு இரையாகி பரிதாபமாக இறந்துவிடுவான். இவ்வாறு மீண்டும் அரசனை தேர்ந்தெடுக்க வேண்டிய நேரம் வந்தபொழுது அதிகாலையில் முதலாவதாக அந்த தெருவுக்கு வந்த மனிதனை படை வீரர்கள் அரண்மனையின் உள்ளே கூட்டிச்சென்றார்கள். அங்கே "இன்று முதல் நீங்கள்தான் எங்களது அரசன்" என அவனுக்கு சொல்லப்பட்டது.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்பொழுது அங்கிருந்த மந்திரி தமது நாட்டு வழக்கத்தை அவனுக்கு விவரித்து கூறினார். அந்த மனிதனோ மிகவும் புத்திசாலி. அவனது கைகளில் அதிகாரம் வந்த உடனேயே அவன் செயற்பட ஆரம்பித்தான். முதலாவதாக எந்தக் காட்டிலே பதவிக் காலம் முடிவடைந்த அரசர்களை விட்டு விடுவார்களோ அந்த காட்டை துப்பரவுசெய்ய ஆணை பிறப்பித்தான். பின்னர் அங்கு அழகான வீட்டை கட்டுவித்தான். ஒருவன் சௌகரியமாக வாழ்வதற்கு தேவையான எல்லாவற்றையும் அங்கே சேர்ப்பித்தான். பின்னர் அந்த நேரம் வந்து அவனை காட்டுக்கு அனுப்பிய போது அவன் துன்பம் இன்றி மிகவும் ஆனந்தமாக வாழ்ந்தான்.

நம்மில் பலரது வாழ்விலும் என்ன நடக்கின்றது? இளம் வயதில் இளவரசர்கள் போல் நடத்தப்பட்டவர்கள் மெதுவாக மெதுவாக முதுமை அடையும்பொழுது கவனிப்பாரின்றி பேச்சு துணைக்கு யாருமின்றி நோய்வாய்ப்பட்டு இறந்து போவதை நாம் கண்கூடாக பார்த்திருக்கிறோம் . வாழ்க்கையின் இறுதி நிலையில் தனிமை, வறுமை ,நோய், கவலை என பல மிருகங்கள் ஒன்றாக சேர்ந்து அவர்களை கொன்று விடுகின்றன. இவ்வாறான நிலையில் இருந்து தப்பித்து வாழக்கூடிய வழியை நாம் தான் தேடிக் கண்டுகொள்ள வேண்டும்.

நமது வாழ்க்கை எனும் இந்தத் திரைப்படத்தின் கதை வசனம், காட்சியமைப்பு, பாடல்கள் மற்றும் இயக்கம் எல்லாமே நாங்கள் தான். இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த திரைப்படத்தை மீண்டும் மீண்டும் பார்க்கப் போகின்ற ஒரே பார்வையாளரும் நாங்கள் தான். இது சோகம் நிறைந்ததாக இருந்தால் சோகமாகவும், ஆனந்தமயமாக இருந்தால் அதனை மகிழ்வாகவும் பார்க்கப்போவது நாம் தான். எனவே நாம் எவ்வாறான திரைப்படத்தை உருவாக்க விரும்புகிறோம் என்பதனை அறிந்து தெளிந்து அதற்கு ஏற்றவாறு வாழ்வை வாழ்வது மிகவும் அவசியமாகும்.

---

# வீட்டுக்கு வீடு
# கொரோனா யுத்தம்!

வேலணையூர் சுரேஷ்

26.
யாருக்கு உண்டு; யாருக் கில்லை!
யாரும் அறியார் இந்தத் தொல்லை
நேருக்கு நேரே நின்றால் போச்சு,
நின்றவர் மூச்சுப் பட்டால் போச்சு!
பேருக்குத் தானும் தொட்டுத் தழுவி,
பேசாமல் உங்கள் கைகால் கழுவி
ஊருக்குள் கொரோனா அண்டா வாறு;
உத்தரவாதமாய் இருத்தல் பேறு!

27.
பாறுக் காக்கா, காசீம் காக்கா,
பழைய நினைவில் கையைக் கொடுக்க,
ஏறிக் கொண்டது கொரோனா தாவி!
இயலாமல் காக்கா பிடிக்கிறார் ஆவி!
மீறிக் கொண்டார் கட்டுப் பாட்டை;
மீறியதாவே படுகின்ற பாட்டை;
கூறுகின்றார்; ஊருக் கெடுத்து!
கடைப்பிடிப்போம்; கவனமெடுத்து!!


28.
கருணை அற்ற கொரோனாத் தொற்றால்,
கடவுளும் கூடத் தள்ளி நிற்க,
சொறனையற்று மனிதரெல்லாம்
சொத்தை யராகி வீட்டிற் குள்ளே;

பரணைக் கட்டி படுத்து, எழும்ப,
படுக்கைப் புண்ணே பார்க்க மிஞ்சும்!
அறணை, பாம்பு, பல்லி உண்ணும்;
அவனால் வந்த வினையே எல்லாம்!

29.
வீட்டுக்குள்ளே இருப்பதாலே,
வில்லங்கச் சண்டை கூடும்! உன்
பாட்டிற்கு "உள்ளாய் என்று; சமையல்
பாத்திரம் சத்தம் போடும்! பின்
ஏட்டிக்குப் போட்டியாக; சும்மா
ஏச்சும் பேச்சும் நீளும்! இப்படி
வீட்டில் நிற்பின் "கொரோனா வாலே
விரிசல் வந்து துன்பம் கூடும்!


30.
காட்டு விலங்குகள் சுதந்திரமாக,
காடு கரம்பை சுற்றி வரவும்,
வீட்டுக்குள்ளே மனித ரெல்லாம்;
பெட்டிப் பாம்பாய் முடங்குகின்றார்!
நாட்டு நிலமை இப்படி இருக்க
நாளிதழ் தலைப்புச் செய்தி படிக்க,
மூட்டு எலும்பு வலிக்குதே ஐயோ?
மீளக் கனநாள் ஆகுமாம்– மெய்யோ?

தொடரும்



(கொரோனாக் காலப் பதிவுகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

# புறாச்சண்டையும்...

அடித்து துன்புறுத்தல் செய்வதை வீடியோ பதிவு செய்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்டவர்கள் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. சண்டை சச்சரவுகளை தீர்த்துக்கொள்வதற்கு பொலிஸ் நிலையம் இருக்கும் போது அரசியல் கட்சியின் பிரமுகர் மேதாவித்தனமாக இச்சம்பவத்தில் உள்நுழைந்து மன்னிப்புக் கேட்பதற்கென அழைத்தமை தவறானது. சட்டத்தை தனது கையில் எடுத்தமை தவறானது என தெரிவிக்கின்றனர் அப்பகுதி மக்கள்.

# இதுவா சுகாதார நடைமுறை?

சுகந்தனுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவனது சடலம் சுகாதாரப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டு தகனம் செய்யப்பட்டது. வீட்டுக்கும் தனிமைப்படுத்தல் அறிவுறுத்தல் ஒட்டப்பட்டது. ஆனால் இதுவரை குடும்ப உறுப்பினர்களுக்கோ, அவருடன் தொடர்பிலிருந்த நண்பர்கள், அயலவர்களுக்கோ பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை. உயிரிழந்தவரின் முதல் தொடர்பாளர்களைக் கண்டறியும் விசாரணைகள் கூட இடம்பெறவில்லை. குறித்த பகுதி யாழ். நகரை அண்மித்த பகுதி. அங்கிருந்து பலர் தமது தேவைகளுக்காக யாழ். நகருக்கு வந்து செல்வர். அப்படி வருபவர்களால் புதிய கொரோனாக் கொத்தணி உருவாகும் வகையில் . சுகாதாரப் பகுதியினர் அசண்டையீனமாக நடக்கின்றனர் என மக்கள் விசனப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org